www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

ஜூன் 2009
ரூ. 7.00











## ஈழம்: பேரழிவு பின்னடைவு ஏன்?

படிப்பகம்

www.padippakam.com



திருச்சியில்...



புதுச்சேரியில்...

# "பாசிச ராஜபக்சே கும்பலை போர்க் குற்றவாளியாக அறிவித்து தண்டனை கொடு!"

## -தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகளின் பிரச்சாரம்-ஆர்ப்பாட்டம்

இனவெறி பிடித்த சிங்கள இராணுவத்தை எதிர்த்துப் போராடி விடுதலைப் புலிகள் வீரமரணமடைந்துள்ள நிலையில், பல்லாயிரக்கணக்கான ஈழத் தமிழ் மக்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டு, இலட்சக்கணக்கான ஈழத்தமிழர்கள் முட்கம்பியிடப்பட்ட தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டு உணவும் குடிநீருமின்றி வதைபடும் நிலையில், இனவெறி பிடித்த பாசிச பயங்கரவாதி ராஜபக்சேவைப் போர்க்குற்றவாளியாக அறிவித்துத் தண்டிக்கக் கோரி **சென்னை, திருச்சி, தஞ்சை, தருமபுரி, பென்னாகரம், உடுமலை, கடலூர், புதுச்சேரி, விருத்தாசலம், நாமக்கல், கோவை, கோத்தகிரி, சிவகங்கை**-என தமிழகமெங்கும் ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து கடந்த மே 21-ஆம் தேதியன்று தாங்கள் செயல்படும் பகுதிகளில் எழுச்சிமிகு ஆர்ப்பாட்டங்களை நடத்தின.

அன்றைய பாசிச இட்லரின் யூத வதை முகாம்களையே விஞ்சும் வகையில், ஈழத்தமிழ் மக்களைக் கைதிகளாக அடைத்து பாசிச ராஜபக்சே அரசு வதைத்துக் கொண்டிருக்கிறது. அவசரநிலையை பிறப்பித்து, போர்க்குற்றங்களை மறைக்க தடயங்களை வேகமாக அழித்து வருகிறது. ஈழத்தமிழினத்தையே அடிமைப்படுத்தி விட்டதாக சிங்கள இன வெறியர்கள் வெற்றிக் களிப்பில் கூத்தாடுகின்றனர்.

ஆனால், அநீதியான இந்த இன அழிப்புப் போரின் வெற்றியும் களிவெறியாட்டங்களும் நீண்ட காலம் நீடிக்காது; ஈழத் தமிழினமும் துவண்டு விடாது. ஈழத் தமிழினத்துக்குத் தமிழக மக்கள் துணை நிற்பார்கள். ஈழ விடுதலைப் போராட்டம் ஒரு ஃபீனிக்ஸ் பறவையாக மீண்டெழும் என்பதைப் போராட்டச் செய்தியாக அறிவித்து, வெஞ்சினத்தை நெஞ்சிலே தாங்கி நடந்த இந்த ஆரப்பாட்டங்கள், ஈழத்தமிழின அழிப்புப் போரை வழிகாட்டி இயக்கிய இந்திய மேலாதிக்கவாதிகளையும் ஓட்டுப் பொறுக்கிகளையும் திரைகிழித்து, போராட அறைகூவுவதாக அமைந்தன.

ஈழத்தின் மீதான இந்தியாவின் மேலாதிக்கப் போருக்கு எதிராக கடந்த ஆறு மாதங்களாக பிரச்சாரம்-ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து நடத்தி வந்துள்ள இவ்வமைப்புகள், நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஈழத்தின் மீதான இந்திய மேலாதிக்கப் போருக்கு பதிலடி கொடுக்கவும், ஈழத்தமிழர் பிணத்தைக் காட்டி பதவி வேட்டையாடும் பச்சோந்திகளுக்குப் பாடம் புகட்டவும் போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணித்து புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணிதிரளுமாறு அறைகூவி, தமிழகமெங்கும் வீச்சாக பிரச்சாரம்-ஆர்ப்பாட்டங்களை நடத்தின. கடந்த மே நாளன்று இவ்வமைப்புகள் தஞ்சையில் நடத்திய பிரம்மாண்டமான பேரணியும் பொதுக்கூட்டம்-கலைநிகழ்ச்சியும், அரசியல் விழிப்புணர்வூட்டி போராட்ட உணர்வுக்குப் புதுரத்தம் பாய்ச்சின.

இப்பிரச்சார இயக்கத்தின் ஓர் அங்கமாக, 8.5.09 அன்று தமிழகத்துக்குத் தேர்தல் பிரச்சாரம் செய்ய வந்த பாசிச காங்கிரசின் குலக்கொழுந்து ராகுல் காந்திக்கு எதிராக கருப்புக்

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்



நாமக்கல்லில்...



திருச்சியில்...


கோத்தகிரியில்



படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய
அரசியல் ஏடு

தொகுதி: 24

இதழ் 8

ஜூன் 2009

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 20

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி: 94446 32561

## ஈழம்:
# பேரழிவு - பின்னடைவு ஏன்?

ஈழ விடுதலைப் போர் மிகக் கொடிய பேரழிவைச் சந்தித்துக் கசப்பானதொரு முடிவை எட்டியிருக்கிறது. இது, புலிகள் இயக்கத்தின் தோல்வி மட்டுமல்ல; ஈழ விடுதலைப் போராட்டம் சந்தித்திருக்கும் ஒரு பாரிய பின்னடைவு. இத்தகையதொரு நிலைமை நெருங்குகிறது என்பதைக் கடந்த சில மாதங்களில் களநிலைமைகளி லிருந்து அனைவருமே புரிந்து கொள்ள முடிந்தது என்றாலும், இம்முடிவு நம்மை மாளாத் துயரத்தில் ஆழ்த்துகின்றது.

கொட்டகைகள், கூடாரங்கள், பதுங்குக் குழிகள் என 3 சதுர கி.மீ. பரப்பளவில் சிக்கித் தவித்த ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் மீது கனரக ஆயுதங்களைக் கொண்டு போர்த் தாக்குதலை நடத்தி ஈவிரக்கமின்றி கோரமாகக் கொன்றொழித்தி ருக்கிறது, இனவெறி பிடித்த சிங்கள பாசிச அரசு. சூடானின் டார்ஃபரில் நடந்த இனப் படுகொலையை ஒத்ததாக நடந்துள்ள ஈழத் தமிழினப் படுகொலையில், கடந்த மே முதல் நாளிலிருந்து 19-ஆம் தேதி வரை நாளொன்றுக்குச் சராசரியாக 1000 பேர் வீதம் குண்டு வீச்சினால் கொல்லப்பட்டுள்ளனர் என்றும், இந்நாட்களில் மட்டும் 20,000-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் இங்கிலாந்தைச் சேர்ந்த "தி டைம்ஸ்" நாளேடு கூறுகிறது. செயற்கைக் கோள் மூலம் பிடிக்கப்பட்ட புகைப் படங்களின் அடிப்படையிலும், போர் நிறுத்தப் பகுதியில் பணியாற்றிய மருத்துவர் கள் கூறிய சாவு எண்ணிக்கையின் அடிப்படையிலும் அந்நாளேடு வெளியிட்டுள்ள இச்செய்தி உலகையே அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. கடந்த மூன்று மாதங்களில் மட்டும் ஏறத்தாழ 50,000 பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று நம்புவதற்கு வாய்ப் புள்ளது என ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் மருத்துவர்கள் கூறுகின்றனர்.

உற்றார்- உறவினர்களைப் பறிகொடுத்துவிட்டு, யாருமே இல்லாத அனாதைகளாக படுகாயமடைந்தும் கை-கால்கள் முடமாகியும், முட்கம்பிவேலியிடப்பட்ட வதை முகாம் களில் வேதனையில் துடிக்கிறார்கள் ஈழத் தமிழ் மக்கள். 1983 ஜூலை கலவரத்தை யடுத்து சிங்கள இனவெறி ஜெயவர்த்தனே அரசுக்கு எதிராகவும், ஈழத் தமிழ் மக்களுக்கு ஆதரவாகவும் பொங்கி எழுந்த தமிழகம், இன்று ஒரு பார்வையாளனாக நிற்கிறது.

இக்கொடிய இன அழிப்புப் போரில் சீனாவும் பாகிஸ்தானும் ஆயுதங்களை வழங் கியுள்ளதோடு, சிங்கள பாசிச அரசுக்கு அரணாகவும் நின்றிருக்கின்றன. அமெரிக்கா வையும் மேற்குலக நாடுகளையும் ராஜபக்சே அலட்சியப்படுத்திப் பேசிய பின்ன ரும் அந்நாடுகள் எதையும் செய்யவில்லை. ஐ.நா. மன்றமும் தலையிடவில்லை. எல்லாம் முடிந்த பிறகு எட்டிப் பார்த்துவிட்டு, கடமை முடிந்ததென பறக்கிறார் பான்-கி-மூன்.

இந்திய அரசோ, இந்த இனப்படுகொலைக்கு இறுதிவரை துணை நின்று வழிநடத் தியிருக்கிறது. புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்கள் நடத்திய தொடர் போராட்டங்களின் நிர்பந்தத்தால், ஐ.நா மனித உரிமை பாதுகாப்புப் பேரவையில் மேலை நாடுகள் இலங்கை அரசு போர்க்குற்றம் புரிந்துள்ளதாகக் குற்றம் சாட்டி கொண்டு வந்த தீர்மா னத்தை ரஷ்யா, சீனா, பாகிஸ்தானோடு இந்தியாவும் இலங்கை அரசுக்கு ஆதரவாக நின்று அத்தீர்மானத்தைத் தோற்கடித்துள்ளது. "நாங்கள் பயங்கரவாதப் புலிகளுக்கு எதிராக நடத்திய போர் எங்களுக்காக மட்டுமல்ல; இந்தியாவுக்காகவும்தான்" என்று வெளிப்படையாக அறிவித்திருக்கிறார், ராஜபக்சே.

ஈவிரக்கமின்றி நடத்தி முடிக்கப்பட்டிருக்கும் இந்தப் படுகொலையின் கடைசி நாட் கள், இந்திய மேலாதிக்கத்தின் கோரமுகத்தை நமக்குக் காட்டுகின்றன. தமிழகத்தில் நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த பிறகு, இறுதித் தாக்குதலைத் தீவிரப்படுத்துமாறு இலங்கை அரசுக்கு வழிகாட்டி இயக்கியிருக்கிறது இந்திய அரசு. தமிழகத்திலுள்ள ஈழ ஆதரவாளர்களோ, மே 16 அன்று தேர்தல் முடிவுகள் வரும்வரை இறுதி முடிவு எதையும் எடுக்க வேண்டாமென புலிகளுக்கு ஆலோசனை கூறியிருப்பார்கள் போலும்!

மூன்று சதுர கி.மீ. பரப்பளவே கொண்ட நிலப்பரப்பில், தோல்வியின் விளிம் புக்குத் தள்ளப்பட்ட நிலையிலும் "துப்பாக்கிகளை மவுனிக்கச் செய்வது" என்ற தங் களது இறுதி முடிவை அறிவிப்பதற்கு இந்திய நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் (மே 16) தெரியும்வரை புலிகள் காத்திருந்தார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

படிப்பகம்

www.padippakam.com

தோல்வியை நோக்கித்தான் தள்ளப்பட்டுள்ளோம் என்பதும், அமெரிக்க அதிபர் ஒபாமா உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் கோரிக்கைகளை ராஜபக்சே அரசு நிராகரித்து விட்டது என்பதும் அவர்கள் அறியாததல்ல. இருப்பினும், அன்றாடம் பல்லாயிரக்கணக்கான மக்களும் புலிகளும் கொத்துக்கொத்தாகக் கொல்லப்பட்ட போதிலும், கடைசியாக எஞ்சியிருந்த புலிகள் இயக்கத் தலைவர்களே கொல்லப்படும் நிலை ஏற்பட்ட போதிலும், டெல்லியில் ஆட்சி மாறினால், மறுகணமே போர் நிறுத்தம் ஏற்பட்டு விடும் என்று அவர்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள். கடைசி நாட்களின் நிகழ்வுகள் இதனைத் தெளிவாக நமக்குக் காட்டுகின்றன. இந்த மூட நம்பிக்கை மிகவும் பாரதூரமான இழப்புகளை அவர்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறது.



**சிங்கள இனவெறிக் கோரத் தாண்டவம்: போர் நிறுத்தப் பகுதியிலேயே நடத்தப்பட்ட எரிகணை தாக்குதல்களில் கோரமாகக் கொல்லப்பட்ட ஈழத் தமிழர்கள்.**

ஒருவேளை தமிழினவாதிகள் எதிர்பார்த்தது போல, ஜெயலலிதாவும் பாரதீய ஜனதாவும் தேர்தலில் வெற்றி பெற்றிருந்தால் மறுகணமே போர்நிறுத்தம் வந்திருக்குமா? அப்படியொரு பிரமை புலிகளுக்கு இருந்திருந்தால், இங்கிருக்கும் தமிழினவாதிகள் அவர்களுக்குத் தெளிவை ஏற்படுத்தியிருக்க வேண்டும். மாறாக, அத்தகையதொரு பிரமையை உருவாக்கும் பணியைத்தான் தமிழினவாதிகள் இங்கே செய்து கொண்டிருந்தார்கள்.

தேர்தலில் ஈழ எதிரி ஜெயலலிதாவுடன் கூட்டணி வைத்து அவரையே தனிஈழம் தேவையெனப் பிரச்சாரம் செய்ய வைத்தனர். போரில் சிக்கித் தவிக்கும் ஈழத் தமிழர்கள் மீது தமிழக மக்கள் கொண்டிருந்த அனுதாபத்தையும், இனப்படுகொலைக்கு எதிராக தமிழகத்தில் நடந்த தீக்குளிப்புகளையும் வைத்து மாபெரும் ஆதரவு இருப்பதாக நம்பி, இதையே தேர்தல் வெற்றியைத் தீர்மானிக்கும் சக்தியாகவும் மதிப்பிட்டனர். போர்நிறுத்தம் செய்யுமாறு இலங்கை அரசுக்கு அமெரிக்கா உதட்டளவில் விடுத்த கோரிக்கையை, ஏதோ அமெரிக்க வல்லரசே தலையிட்டுப் போர்நிறுத்தம் செய்யக் கிளம்பி விட்டதைப் போல பிரமையூட்டி, ஒபாமாவுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக சென்னையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் நோக்கி ரோசாப் பூங்கொத்து ஊர்வலம் நடத்தினார், பழ.நெடுமாறன்.

இவர்கள் உருவாக்கிய பிரமைக்குத் தங்கள் உயிரையும் கவுரவத்தையும் பலி கொடுத்திருக்கிறார்கள், தமிழீழ விடுதலைப் புலிகள். தேர்தலின் போது தனி ஈழம் பற்றி சவடால் அடித்த ஜெயலலிதா, தேர்தல் தோல்விக்குப் பிறகு கோடநாடு எஸ்டேட்டுக்குச் சென்று படுத்துக் கொண்டார். தேர்தலுக்குப் பின் அவர் விடுத்த அறிக்கையில் தனி ஈழம் பற்றியோ, ஈழத் தமிழினப் படுகொலை பற்றியோ, ராஜபக்சே ஒரு போர்க் குற்றவாளி என்றோ ஒரு வார்த்தை கூட இல்லை. இந்த அம்மையாரின் வெற்றிதான் போர் நிறுத்தத்தைக் கொண்டு வரும் என்று ஈழத் தமிழ் மக்களையும் புலிகளையும் நம்ப வைத்து படுகுழியில் தள்ளியிருக்கிறார்கள், இந்த ஈழ ஆதரவாளர்கள். இவர்கள் யாரை ஆதரித்தார்களோ, அந்தப் புலிகளையே காவு வாங்கிவிட்டது இவர்களின் பிழைப்புவாத அரசியல்!

•••

**த**மிழீழத்தின் தலைநகராக புலிகளால் சித்தரிக்கப்பட்ட கிளிநொச்சி, சிங்கள இராணுவத்தால் கடந்த ஜனவரியில் தாக்கி அழிக்கப்பட்ட பின்னர் புலிகள் பின்வாங்கி முல்லைத் தீவுக்கு நகர்ந்தார்கள். சிங்கள இராணுவத் தாக்குதலிலிருந்து தப்பிக்க, ஏறத்தாழ 3 லட்சம் மக்கள் புலிகளோடு முல்லைத் தீவு நோக்கி நெடும்பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

இம்மக்கள் கூட்டத்தின் நடுவே இருந்தால் சிங்கள இராணுவம் தங்கள் மீது பாரிய தாக்குதல் தொடுக்காது என்றும், அதையும் மீறி தாக்குதல் தொடுத்தால், மக்கள் கொல்லப்படுவதன் விளைவாக மேலைநாடுகள் தலையிட்டுப் போரை நிறுத்துமாறு சிங்கள அரசை நிர்பந்திக்கும் என்றும் புலிகள் பெரிதும் எதிர்பார்த்தார்கள். ஆனால், சிங்கள இராணுவமோ, கனரக ஆயுதங்களைக் கொண்டும் பாஸ்பரஸ் குண்டுகளை வீசியும் கொத்துக் கொத்தாக மக்களைக் கொன்றொழித்தது. வாயளவில் கண்டனம் தெரிவித்தற்கு மேல் எந்தவொரு மேலை நாடும் சிங்கள அரசை நிர்பந்திக்கவோ, தலையீடு செய்யவோ முன்வரவுமில்லை.

எந்த மக்களைப் பாதுகாப்புக் கேடயமாக புலிகள் கருதினார்களோ, அந்த மக்கள் சிங்கள இராணுவத்தின் கொடிய போர்த் தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் தவிக்க, புலிகளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இந்தக் கையறு நிலையில், உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு மக்கள் ஆயிரக்கணக்கில் வெளியேற ஆரம்பித்தார்கள். புலிகளால் இதனைத் தடுக்கவும் இயலவில்லை. பின்வாங்கும் பயணம் நீண்டு போகப் போக, புலிகள் தமது ஆயுதக் கிடங்குகளையும் பாதுகாப்பு அரண்களையும் கைவிட்டு செல்ல வேண்டிய



படிப்பகம்

www.padippakam.com

> **கடந்த மே முதல் நாளிலிருந்து 19–ஆம் தேதி வரை ஏறத்தாழ 20,000–க்கும் மேற்பட்ட ஈழத் தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த மூன்று மாதங்களில் மட்டும் ஏறத்தாழ 50,000 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர்.**

தாயிற்று. எந்த ஆயுதங்களைத் தமது விடுதலைக்கான அச்சாணியாக புலிகள் கருதினார்களோ, அவையெல்லாம் பெருஞ்சுமையாக மாறிப்போயின. சிங்கள இராணுவமோ, நவீன ஆயுதங்களைக் கொண்டு கொடூரத் தாக்குதலை வகைதொகையில்லாமல் கூட்டிக் கொண்டே போனது.

கொரில்லாப் போர் முறையிலிருந்து முன்னேறி, கிரமமான இராணுவத்தையும் வான்படையையும் கட்டியமைத்து வலுவடைந்த புலிகள், பிந்தைய அசாதாரண நிலையை கவனத்தில் கொண்டு, தமது நிலையைத் தக்க வைத்துக் கொள்ளவும், இலட்சக்கணக்கான மக்களைப் பாதுகாக்கவும் இராணுவ ரீதியில் தமது செயல்தந்திரங்களை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டிய தேவை எழுந்த போதிலும் அதனை உதாசீனப்படுத்தினார்கள். கிரமமான படைகளைக் கலைத்துவிட்டு, மீண்டும் தற்காப்பு கொரில்லா போர்முறைக்கு மாற வேண்டிய கட்டாயத்துக்கு புறநிலைமைகள் நிர்பந்தித்த போதிலும், அதை ஏற்க மறுத்தார்கள். மேலைநாடுகள் சிங்கள அரசுக்கு நிர்பந்தம் கொடுக்கும், இந்தியத் தேர்தல் முடிவுகள் போர்நிறுத்தத்தைக் கொண்டு வரும் என்று குருட்டுத்தனமாக நம்பிப் பேரழிவையும் பின்னடைவையும் சந்தித்துள்ளார்கள்.

புலிகள் மட்டுமே தமிழீழத்தின் ஏகபோக பிரதிநிதிகளாகச் சித்தரிக்கப்பட்டு வந்துள்ள நிலையில், புலிகள் இயக்கத் தலைவர்களும் தளபதிகளும் சிங்கள இராணுவத்தால் கொல்லப்பட்டு, புலிகள் இயக்கத்துக்கு ஏற்பட்டுள்ள பெருந்தோல்வியால், இன்று ஈழ விடுதலைப் போராட்டம் தலைமை ஏதுமின்றித் தத்தளிக்கிறது. புலிகளின் சர்வதேசத் தொடர்பாளரான பத்மநாபன், தமிழகத்தின் ஈழ ஆதரவாளர்களால் 'துரோகி' என்று முத்திரை குத்தப்பட்டுள்ள நிலையில், இயக்கத்தை ஒருங்கிணைத்து முன்னெடுத்துச் செல்ல எவருமே இல்லாத அவலம் நீடிக்கிறது. ஈழத்தின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடி வந்த இதர குழுக்களும் தனிநபர்களும் துரோகிகளாகச் சித்தரிக்கப்பட்டு புலிகளால் ஒடுக்கப்பட்டு விட்ட நிலையில், இன்று ஈழ விடுதலைப் போராட்டத்தை வழிநடத்திச் செல்ல தலைமை ஏதுமின்றி, ஒரு பாரிய வெற்றிடம் நிலவுகிறது.

இது கசப்பான உண்மை என்ற போதிலும், இத்தகைய பின்னடைவுக்கும் பேரழிவுக்கும் காரணம் என்ன? சீனாவும் பாகிஸ்தானும் சிங்கள பாசிச அரசுக்கு நவீன ஆயுதங்களை வழங்கி ஆதரவாக நின்றதும், இந்தியா இந்த இனப்படுகொலைப் போருக்கு இறுதிவரை துணை நின்று வழிநடத்தியதும் தான் காரணமா? அல்லது ஐ.நா. மன்றமும் மேலை நாடுகளும் பாராமுகமாக இருந்ததுதான் காரணமா?

இவையெல்லாம் புறக்காரணிகள்தாம். இத்தகைய நிலைமைகளை எதிர்கொண்டு இயக்கத்தை வழிநடத்திச் செல்லும் ஆற்றல்மிக்கதாகச் சித்தரிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் அரசியல் மூடத்தனமும் இராணுவ சாகசவாதமும்தான் இப்பேரழிவுக்கும் மீளமுடியாத பின்னடைவுக்கும் பெருந்தோல்விக்கும் முதன்மையான காரணங்கள். புலிகளிடம் சரியான அரசியல் தலைமை இல்லாமை, சரியான இராணுவ உத்திகள் இல்லாமை, யாரையும் பயன்படுத்திக் கொண்டு காரியம் சாதிப்பது என்கிற சந்தர்ப்பவாதம்; அரசியல் நேர்மையற்ற அணுகுமுறை, புலிகள் இயக்கத்துக்குள்ளும் ஜனநாயகமற்ற பாசிச சர்வாதிகாரம் முதலான ஈழ விடுதலைக்கே எதிரான போக்குகளே இப்பேரழிவையும் மீண்டெழ முடியாத தோல்வியையும் தோற்றுவித்துள்ளன.

எந்தவொரு விடுதலைக்கான இயக்கமும் இலட்சியத்தையும் கடமைகளையும் வகுத்துக் கொண்டு, அந்த இலட்சியத்தை அடைவதற்குத் தடையாக நிற்கும் எதிரிகள் யார், நண்பர்கள் யார், ஊசலாட்டம் கொண்ட சமரச சக்திகள் யார், எந்தச் சக்திகளுடன் ஐக்கியப்பட வேண்டும், எந்த சக்திகளை வென்றெடுக்க வேண்டும் - என்பதைத் தெளிவாக வகுத்துக் கொண்டு தமது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். ஆனால் விடுதலைப் புலிகளோ தொடக்கம் முதலே இந்த அடிப்படையான பிரச்சினையில் தெரிந்தே தவறிழைத்தார்கள்.

ஈழ விடுதலைக்குத் தொடக்கம் முதலே எதிரியாக இருந்து சீர்குலைத்த இந்திய அரசுடன் பகைத்துக் கொள்ளாமல்,


**சிங்கள அரசின் வதை முகாம்:**
**முட்கம்பி வேலியினுள்ளே அவலத்தில் உழலும் ஈழத் தமிழர்கள்.**





படிப்பகம்

www.padippakam.com



ஈழத் தமிழினத்தைத் தோற்கடித்துவிட்ட திமிரில் சிங்கள இனவெறியின் வெற்றிக் கொண்டாட்டம்.

''தாஜா'' செய்ததோடு, இந்திய உளவுப் படையான ''ரா'' (RAW)விடம் ஆயுதங்களும் பயிற்சியும் நிதியும் பெற்று, அதன் வழிகாட்டுதலின்படி அப்பாவி சிங்கள குடிமக்களைக் கொன்றும், ஈழத்திலிருந்து இசுலாமியர்களைக் கெடு வைத்து விரட்டியும், இதர போராளிக் குழுக்களை அழித்தொழித்தும், தமது ஏகபோக சர்வாதிகாரத்தை நிறுவிக் கொண்டனர்.

எந்தவொரு விடுதலைக்கான இயக்கமும் ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் ஜனநாயகப்படுத்தப்பட்ட சூழலை உருவாக்க வேண்டும். மக்கள் மத்தியில் எந்தளவுக்கு ஜனநாயகம் பேணப்படுகிறது என்பது, இனவிடுதலையின் மீது கொண்டுள்ள உறுதிக்கு ஒரு அளவுகோல். ஆனால் சிங்கள இனவெறியை எதிர்த்தும் ஈழ விடுதலைக்கு ஆதரவாகவும் நின்று, புலிகளின் மனித உரிமை மீறல்களையும் ஜனநாயக விரோதச் செயல்பாடுகளையும் விமர்சித்த குற்றத்திற்காக ராஜினி திரணகம, செந்தன் முதலாலோனார் உள்ளிட்டு ஏராளமானோர் புலிகளால் கொன்றொழிக்கப்பட்டார்கள்; அல்லது அவர்கள் காணாமல் போனார்கள். புலிகள் இயக்கத்துக்குள்ளேயே பல முன்னணித் தலைவர்களும் தளபதிகளும் துரோகிகள் என முத்திரை குத்தப்பட்டு கொல்லப்பட்டார்கள். பிரபாகரனும் அவரது வட்டாரத்தைச் சேர்ந்த விசுவாசிகளும் கொண்ட சிறுகும்பலாக இயக்கத் தலைமை மாறிப் போனது.

தேசிய இன விடுதலை என்பது ஏகாதிபத்திய எதிர்ப்பைக் கொண்டதாகவும் சுயசார்பானதாகவும் இருக்க வேண்டும். எந்த அளவுக்கு ஏகாதிபத்திய எதிர்ப்பில் ஒரு தேச விடுதலை இயக்கம் ஊன்றி நிற்கிறது என்பதுதான் அதன் புரட்சிகர தன்மைக்கான அளவுகோல். இன்றைய சூழலில், ஏகாதிபத்திய உலகமயமாக்கலை எதிர்க்காமல், எந்தவொரு தேசிய இனமும் விடுதலையைச் சாதிக்கவும் முடியாது.

ஆனால் புலிகளோ, எந்த ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்து எந்தப் போராட்டத்தையும் நடத்தியதேயில்லை. தமது தலைமையிலான தமிழீழம் இந்தியாவுக்கும் ஏகாதிபத்திய நாடுகளுக்கும் கீழ் படிந்தே இருக்கும் என்று புலிகள் வாக்குறுதி அளித்து, அந்நாடுகளைத் ''தாஜா'' செய்தார்கள். கிழக்கு திமோர், கொசாவோ பாணியில் மேலைநாடுகள் தலையிட்டு தமக்கென தனி ஈழத்தை அமைத்துத் தரும் என்று நம்பினார்கள். அந்த அளவுக்குத்தான் அவர்களது உலக அரசியல் கண்ணோட்டம் இருந்தது. ஏகாதிபத்திய உலகக் கட்டமைவில் தேசிய இன விடுதலை என்பது எவ்வளவு சிக்கலானது, உலக நாடுகளின் மக்கள் மத்தியில் இதற்கு ஆதரவாக பொதுக்கருத்தையும் பொது நிர்பந்தத்தையும் வளர்த்தெடுக்க வேண்டும் என்பன போன்ற விரிந்த அரசியல் பார்வை புலிகளிடமோ, அவர்களின் ஊதுகுழலாகச் செயல்பட்ட தமிழக பிழைப்புவாத அரசியல்வாதிகளிடமோ இருந்ததில்லை. மேலை நாடுகள் தங்களைப் பயங்கரவாதிகள் எனத் தடை செய்திருப்பதற்கான உலக அரசியல் சூழல் மற்றும் பிற காரணிகளைப் புலிகள் புரிந்து கொள்ளவுமில்லை.

ஒருபுறம் அமெரிக்க உலக மேல்நிலை வல்லரசு; அதன் தெற்காசிய விசுவாச அடியாளாக இந்திய பிராந்திய மேலாதிக்க வல்லரசு. மறுபுறம், உலகமயமாக்கலைச் சாதகமாக்கிக் கொண்டு புதிய சந்தைக்காகவும் ஆதிக்கத்துக்காகவும் விரிவடைந்து வரும் சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளின் போட்டா போட்டி. இந்துமாக் கடலில் போர்த்தந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கை, இன்று இந்த ஆதிக்க சக்திகளின் பகடைக் காயாக மாற்றப்பட்டிருக்கிறது. ஏகாதிபத்திய சக்திகளின் போட்டியையும் கூட்டையும் பயன்படுத்திக் கொண்டு, ஈழ விடுதலைப் போரை அரசியல் ரீதியிலும் இராணுவ ரீதியிலும் ராஜபக்சே அரசு எவ்வித எதிர்ப்புமின்றி நசுக்கும் சூழலைப் பற்றி புலிகள் பாரதூரமாக உணரவில்லை. அதற்கேற்ப தமது அரசியல் - இராணுவ செயலுத்திகளை வகுத்துக் கொள்ளவுமில்லை.

இன்னும் சொல்லப்போனால், மக்களைத் திரட்டி எந்தவொரு அரசியல் போராட்டத்தையும் புலிகள் நடத்தியதேயில்லை. கடந்த பத்தாண்டுகளில் போர் நிறுத்தத்தின் மூலம் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, அரசியல் அணிதிரட்டலையும் அரசியல் போராட்டங்களையும் நடத்த புலிகள் முயற்சிக்கவேயில்லை. அரசியல் பிரிவு என்றழைக்கப்பட்ட ஒரு குழுவை புலிகள் உருவாக்கியிருந்த போதிலும், அது மக்களிடம் அரசியல் பிரச்சாரம் எதையும் செய்ததுமில்லை. மக்களின் அளப்பரிய ஆற்றலைக் கொண்டு மாபெரும் அரசியல் எழுச்சிகளைத் தோற்றுவித்து எதிரியை மண்டியிடச் செய்ய முடியும் என்பதை புலிகள் எந்தக் காலத்திலும் உணரவுமில்லை.

அவர்களது கவனமெல்லாம் நவீன ஆயுதங்களின் இருப்பை அதிகரிப்பதிலும் சாகசவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலும்தான் இருந்தது. சிங்கள பேரினவாதத்துக்கு எதிராக இராணுவ ரீதியில் மேலாண்மை பெற்றுவிட்டாலே, ஏகாதிபத்திய நாடுகள் சிங்கள அரசுக்கு நிர்பந்தம் கொடுத்து தனி ஈழத்தை உருவாக்கித் தரும் என்று கணக்கு போட்டு,


படிப்பகம்

www.padippakam.com



சாகச வழிபாடு, சந்தர்ப்பவாத நடைமுறை:
விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்கள். (கோப்புப் படம்).

ஏகாதிபத்திய நாடுகளின் ஆதரவைப் பெறுவதுதான் அவர்களது 'அரசியல்' வேலையாக இருந்தது.

சிங்கள மக்கள் மத்தியில் ராஜபக்சே கும்பலின் இன வெறி பாசிச சர்வாதிகாரத்தை எதிர்க்கும் அரசியல் சக்திகளுடன் இணைந்து, பொது எதிரிக்கு எதிராக பரந்த ஐக்கிய முன்னணி கட்டியமைத்துப் போராட சாத்தியப்பாடுகள் இருந்தபோதிலும், அரசியல் மூடத்தனத்தால் அவற்றை புலிகள் அறிந்தே புறக்கணித்தார்கள். இலங்கையில் ரணில் விக்கிரமசிங்கே தேர்தலில் தோற்றதற்கும், ராஜபக்சே கும்பல் ஆட்சிக்கு வந்ததற்கும் மிக முக்கிய காரணமே புலிகளின் சந்தர்ப்பவாத அரசியல்தான்.

இந்த சந்தர்ப்பவாதம் 2002-இல் தாய்லாந்து நாட்டில் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானபோது அப்பட்டமாக வெளிப்பட்டது. தேசிய சுயநிர்ணய உரிமைக்கு சந்தர்ப்பவாதமாகவும் துரோகத்தனமாகவும் ''பிரதேச தன்னாட்சி'' என்று விளக்கமளித்தார், புலிகளின் அரசியல் தலைமை குருநாதர் ஆண்டன் பாலசிங்கம். ஏகாதிபத்திய உலகமயமாக்கலின் கீழ் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டு தமது ஏக போக ஆட்சி அமைவதையே ''பிரதேச தன்னாட்சி'' என்று விளக்கமளித்தார். அதேசமயம், தனிஈழம் கோரிக்கையை இன்னமும் கைவிட்டுவிடவில்லை என்று காட்டிக் கொள்வதற்காக இது ''இடைக்காலத் தீர்வு'' என்று பூசி மெழுகினார்.

இப்படி சந்தர்ப்பவாதமும் சாகச வழிபாடும் தனிநபர் துதியும் கொண்ட புலிகள், முப்பதாண்டு காலமாக பல ஏற்றங்களையும் இறக்கங்களையும் கண்ட ஈழ விடுதலைப் போராட்டத்தை மீளாய்வு செய்து படிப்பினைகளைப் பெற முன்வராமல், தொடர்ந்து பிரமைகளில் மூழ்கிப் போயினர். மறுபுறம், ஏகாதிபத்தியங்களின் ஆசியோடும், சிங்கள இனவெறி சக்திகளின் ஆதரவோடும், நவீன ஆயுதங்களின் வலிமையோடும் மிகக் கொடிய போரை ராஜபக்சே கும்பல் ஈழ மக்கள் மீது ஏவியது. உலக வரலாற்றில் மிகக் கொடூரமான இனவெறிப் படுகொலைகளில் ஒன்றாக அமைந்த இப்போரில், பல்லாயிரக் கணக்கான ஈழத் தமிழர்களோடு, புலிகளின் தலைமையும் கொன்றொழிக்கப்பட்டு, ஈழ விடுதலைப் போராட்டம் பேரழிவையும், பின்னடைவையும் சந்தித்து கையறு நிலையில் தத்தளிக்கிறது. ஈழத் தமிழினத்தையே தோற்கடித்து விட்ட வெற்றிக் களிப்பில் கூத்தாடுகிறது, சிங்கள இனவெறி.

> **மக்களின் அளப்பரிய ஆற்றலைக் கொண்டு மாபெரும் அரசியல் எழுச்சிகளைத் தோற்றுவித்து எதிரியை மண்டியிடச் செய்ய முடியும் என்பதை புலிகள் எந்தக் காலத்திலும் உணர்ந்ததில்லை.**

இன்றைய சூழலில், சிங்கள இராணுவ வதை முகாம்களிலிருந்து ஈழத் தமிழர்களை மீட்டு அவர்களை மீளக் குடியமர்த்துவது, தமிழர் பகுதிகளைச் சிங்கள காலனியாக்க முயலும் இந்திய-இலங்கை அரசுகளின் கூட்டுச் சதியை முறியடிப்பது, ராஜபக்சே கும்பலை போர்க்குற்றவாளியாக அறிவித்துத் தண்டிப்பது, ஈழ மக்களின் நியாயமான சுயநிர்ணய உரிமைப் போரை மீண்டும் கட்டியமைப்பது - ஆகிய பெரும் போராட்டக் கடமைகள் ஈழ மக்களின் முன்னே, புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களின் முன்னே, ஈழ ஆதரவாளர்களின் முன்னே நிற்கிறது. கடந்த முப்பதாண்டு கால ஈழ விடுதலைப் போராட்டத்தை விருப்பு வெறுப்பின்றி மீளாய்வு செய்து படிப்பினைகள் பெறுவதும், ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் ஜனநாயகப் படுத்தப்பட்ட சூழலை உருவாக்குவதும், ஏகாதிபத்திய உலக மயமாக்கலுக்கு எதிரான இயக்கப் போக்கின் ஒரு பகுதியான ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு அனைத்துலக மக்களிடம் ஆதரவு திரட்டுவதும் இதற்கு முன்தேவையாக இருக்கிறது.

புலிகள் இயக்கம் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்டு விட்டாலும், ஈழத் தமிழ் மக்கள் தமது நியாயமான விடுதலைப் போராட்டத்தைத் தொடர்வதற்கு துணை நிற்க வேண்டியது புரட்சிகர - ஜனநாயக சக்திகளின் கடமை; நம் கடமை. ●


படிப்பகம்

www.padippakam.com

# நாடாளுமன்றமா? லயன்ஸ் கிளப்பா?

**கோடீசுவரர்கள், வாரிசுகள், அமெரிக்க அடிவருடிகளின் மடமாகிவிட்டது இந்திய நாடாளுமன்றம்.**

பதினைந்தாவது நாடாளுமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்ட எந்தவொரு கூட்டணியும் தங்களுக்கு இப்படியொரு வெற்றி கிடைக்குமென்றோ அல்லது தோல்வி கிடைக்குமென்றோ கனவிலும் நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள். அத்வானி, மாயாவதி, ஜெயலலிதா ஆகியோரின் பிரதமர் கனவு கானல் நீராகிவிட்டது. மூன்றாவது அணிக்குத் தலைமை தாங்கிய 'மார்க்சிஸ்டு' கட்சி அதன் கோட்டையிலேயே கலகலத்து விட்டது. 200 தொகுதிகளில்தான் வெற்றி பெறும் எனக் கணிக்கப்பட்டிருந்த காங்கிரசு கூட்டணி 262 தொகுதிகளில் வென்றிருக்கிறது. தொங்குநிலை நாடாளுமன்றமும் குதிரை பேரமும்தான் தேர்தலின் முடிவாக இருக்கும் என்ற எதிர்பார்ப்புகளுக்கு மாறாக, காங்கிரசு கூட்டணி நிலையான ஆட்சியை எளிதாக அமைத்துவிட்டது.

வேலைவாய்ப்பின்மை, விலைவாசி உயர்வு, விவசாய நசிவு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் தலைவிரித்தாடின. இதே பிரச்சினைகளை எதிர்கொள்ளும் இலத்தீன் அமெரிக்க மக்கள், தங்கள் நாடுகளில் நடந்த தேர்தல்களில் 'இடதுசாரி' கட்சிகளைத் தேர்ந்தெடுத்து ஆட்சியில் அமர்த்தி வருகின்றனர். இதே பிரச்சினைகளை எதிர்கொள்ளும் ஐரோப்பிய மக்கள் முதலாளித்துவம் ஒழிக என முழங்கி வருகின்றனர். ஆனால், இந்தியாவிலோ தனியார்மயத்திற்கு மாற்று வேறில்லை எனக்கூறி வரும் மன்மோகன் சிங் வெற்றி பெற்றிருக்கிறார். இந்த ''வரலாற்றுப் பிழை''க்கு யாரைப் பொறுப்பாக்குவது?

பா.ஜ.க.வின் ஆதரவு ஏடான இந்தியா டுடே அக்கட்சியின் தோல்வி குறித்து எழுதும் பொழுது, ''இந்துத்துவமும் கோவில் கட்டும் கோஷங்களையும் தவிர, அதனிடம் புதிய திட்டங்கள் எதுவும் இல்லை'' என அக்கட்சி திவாலாகிப் போயிருப்பதை இடித்துக் காட்டியுள்ளது. அ.தி.மு.க. என்ற கொள்ளைக்கூட்டத்தின் தலைவியான ஜெயலலிதா வாக்காளர்கள் விலை போய்விட்டதாகக் கூறி, மக்களைக் குற்றவாளியாக்குகிறார். தமிழகத்தைச் சேர்ந்த போலி கம்யூனிஸ்டுகளும் இதற்கு ஒத்தூதுகின்றனர். இதைக் கேட்கும் பொழுது, ''தவறே செய்யாதவன் இவள் மீது கல்லை வீசட்டும்'' என இயேசுநாதர் ஒரு விபச்சாரிக்காகப் பரிந்து பேசிய வசனம் தான் நம் நினைவுக்கு வந்து போகிறது.

ஓட்டுக் கட்சிகளிடையே எந்தவொரு வேறுபாடும் கிடையாது என்பதை மக்கள் பாமரத்தனமாகவேனும் புரிந்து வைத்துள்ளார்கள். சிங்குரிலும், நந்திகிராமிலும் மார்க்சிஸ்டுகள் ஆடிய வெறியாட்டத்தைக் கண்ட மக்கள், அக்கட்சியைத் தங்களின் இரட்சகனாக ஏற்றுக் கொள்வார்களா? உலக வங்கியின் அடிவருடிகள் என அம்பலப்பட்டுப் போன சந்திரபாபு நாயுடுவையும், நவீன் பட்நாயக்கையும், ஜெயலலிதாவையும்தான் மன்மோகன் சிங்குக்கு மாற்றாக மக்கள் முன் நிறுத்தினார்கள், மார்க்சிஸ்டுகள். நயவஞ்சகமான மூன்றாவது அணியா அல்லது காங்கிரசு கயவாளிகளா என்ற கேள்விக்கு மக்கள் பின்னதைத் தேர்ந்தெடுத்துவிட்டனர்.

•••

தி.மு.க.வைச் சேர்ந்த டி.ஆர்.பாலுவையும், ஆ.ராசாவையும் புதிய அரசாங்கத்தின் அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப் போவதில்லை என்ற செய்தியைக் கசியவிட்டதன் மூலம், காங்கிரசு தூய்மையான ஆட்சியை அமைக்க விரும்புவதாகப் பிரச்சாரம் செய்யப்பட்டது. காங்கிரசின் இந்தத் 'தூய்மையான' ஆட்சி மக்களின் குறைந்தபட்ச எதிர்பார்ப்புகளைக் கூட நிறைவேற்றிக் கொடுக்குமா என்ற சந்தேகம் முளையிலேயே தெரிகிறது.

புதிய அமைச்சரவையின் நிதியமைச்சராக மாண்டேக் சிங் அலுவாலியாவை நியமிக்க மன்மோகன் சிங் விரும்பியிருக்கிறார். நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படாத

**முதுமையையும் நோயையும் பொருட்படுத்தாமல், தனது வாரிசுகளுக்குப் பதவியைக் கேட்டு வாங்குவதற்காக மு.க. நடத்திய டெல்லிப் படையெடுப்பு! உடன் (வலமிருந்து) மு.க.அழகிரி, தயாநிதி மாறன், ராகுல் காந்தி, சோனியா காந்தி மற்றும் டி.ஆர். பாலு.**





படிப்பகம்

www.padippakam.com

அலுவாலியாவை நிதியமைச்சராக்க மன்மோகன் விரும்பியதற்குக் காரணம், அலுவாலியா உலக வங்கியில் அதிகாரியாகப் பணியாற்றியவர்; கடந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் அலுவாலியா திட்டக் கமிசனின் துணைத் தலைவராக இருந்த பொழுது, தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்திற்கும், கல்விக்கும் மைய அரசு அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்வதை எதிர்த்தவர். இப்படிபட்டவரை நிதியமைச்சராக்கினால் ஆட்சியின் இலட்சணம் அம்மணமாகத் தெரிந்துவிடும் என்பதால்தான் பிரணாப் முகர்ஜி நிதியமைச்சர் ஆக்கப்பட்டுள்ளார்.

எனினும், அலுவாலியாவை பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளைத் தனியார் முதலாளிகளுக்குத் தாரை வார்க்கும் அமைச்சராக்கி விடலாம் எனச் சமரச முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகச் செய்திகள் வெளிவருகின்றன. வாஜ்பாயி ஆட்சியின்பொழுது இயங்கிய இத்துறை, கடந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் ஓரமாக ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

புதிய அரசாங்கம் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவது பற்றிச் சிந்தித்தாகத் தெரியவில்லை. அதற்கு நேரெதிராக, அரிசி ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கவும், முன்பேர வர்த்தகத்தில் கோதுமை இடம் பெறுவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கவும் ஆர்வமாக இருப்பதாகக் கூறப்படுகிறது. மேலும், 40 பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளைத் தனியாருக்கு விற்பது, சுரங்கத் தொழிலில் தனியாரை அனு

**“மன்மோகன் சிங் அரசில் இடம் பெற்றுள்ள 79 அமைச்சர்களில் 47 பேர் கோடீசுவரர்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட 543 நாடாளுமன்ற உறுப்பினர்களுள் 300 உறுப்பினர்கள் கோடீசுவரர்கள்.”**

நிதி, தனது வாரிசுகளுக்காக காங்கிரசை மிரட்டிப் பதவிகளை அள்ளியிருக்கிறார். மூத்த மகனுக்கும் இளைய மகனுக்கும் இடையே அதிகாரப் பகிர்வைப் பூசல்களுக்கு இடமின்றி முடித்துவிட்ட மகிழ்ச்சியில் திளைத்துப் போயிருக்கிறார், மு.க. கூச்சநாச்சமற்று நடந்த இந்த பேரத்தை தமிழகம் அமைதியாகச் சகித்துக் கொண்டிருப்பது வெட்கக்கேடானது.

ஜம்மு காஷ்மீரின் பரூக் அப்துல்லா, அவரது மருமகனும் இறந்து போன காங்கிரசு தலைவர் ராஜேஷ் பைலட்டின் மகனுமான சச்சின் பைலட், இறந்து போன காங்கிரசு தலைவர் மாதவ்



**இளவரசர்கள்: (இடமிருந்து) மறைந்த சஞ்சய் காந்தியின் மகன் வருண் காந்தி (பிலிபிட் தொகுதி, பா.ஜ.க.), நாராயண் ராணேயின் மகன் நீலேஷ் ராணே (ரத்னகிரி தொகுதி, காங்கிரசு), மறைந்த பி.எம். சய்யீதின் மகன் ஹம்துல்லா சய்யீத் (லட்சத் தீவு தொகுதி, காங்கிரசு).** (நன்றி: இந்தியா டுடே).

மதிப்பது, அரசுத் துறை வங்கிகளை ஒன்றிணைப்பது, காப்பீடு துறையில் அந்நிய மூலதனம் நுழைவதற்கு விதிக்கப்பட்டுள்ள வரம்பைத் தளர்த்துவது, சில்லரை வணிகத்தில் அந்நிய முதலீட்டை அனுமதிப்பது ஆகிய சீர்திருத்த நடவடிக்கைகள் ஒன்றன்பின் ஒன்றாகப் பாயும் என்றும் செய்திகள் வெளிவந்துள்ளன. தரகு முதலாளிகள் பத்திரிகைகள் வாயிலாக என்னென்ன ஆலோசனைகளை வழங்கி வருகிறார்களோ, அவைதான் புதிய அரசாங்கத்தின் கொள்கைகளாக இருக்கின்றன என்பதற்கு இவையெல்லாம் சாட்சிகளாக உள்ளன.

எட்டு சதவீத வளர்ச்சியை மீண்டும் எட்டிப் பிடிப்பதற்கு இச்சீர்திருத்தங்களை உடனே செய்ய வேண்டியது அவசியம் எனச் சாக்குச் சொல்லப்படுகிறது. எட்டு சதவீத 'வளர்ச்சி' இருந்த கால கட்டத்திலும் விவசாயிகளின், நகர்ப்புற கூலித் தொழிலாளர்களின் வாழ்க்கை சகிக்க முடியாததாகத்தானே இருந்தது?

இதுவொருபுறமிருக்க, இப்புதிய அரசாங்கம் ஓட்டுக்கட்சித் தலைவர்களின் வாரிசுகளாலும் நிரம்பி வழிகிறது. ஈழத் தமிழர்களுக்காக ஒருமுறையேனும் காங்கிரசை மிரட்டாத கருணா

ராவ் சிந்தியாவின் மகன் ஜோதிராதித்யா சிந்தியா, தேசியவாத காங்கிரசு கட்சியின் தலைவர் பி.ஏ. சங்மாவின் மகள் அகதா சங்மா என பதவிகளைப் பிடித்த வாரிசுகளின் பட்டியல் நீளமானது.

வாரிசுகளால் மட்டுமின்றி கோடீசுவரர்களாலும் நிரம்பி வழிகிறது நாடாளுமன்றமும் அமைச்சரவையும். மன்மோகன் சிங் அரசில் இடம் பெற்றுள்ள 79 அமைச்சர்களில் 47 பேர் கோடீசுவரர்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட 543 நாடாளுமன்ற உறுப்பினர்களுள் கிட்டதட்ட 300 உறுப்பினர்கள் கோடீசுவரர்கள்.

இப்புதிய அரசாங்கத்தை வாரிசுகளும், கோடீசுவரர்களும், உலக வங்கியின் அடிவருடிகளும்தான் குத்தகைக்கு எடுத்துள்ளனர் என்பது அப்பட்டமாகவே தெரிகிறது. இதனை மூடிமறைப்பதற்காகவே, தூய்மையான அரசாங்கம், செயல்படும் அரசாங்கம், நிலையான அரசாங்கம் என்ற வார்த்தை ஜாலங்களை காங்கிரசு கும்பலும் முதலாளித்துவ பத்திரிகைகளும் அள்ளி வீசி வருகின்றன.

● கீரன்


படிப்பகம்

www.padippakam.com

# சி.பி.எம்.இன் தேர்தல் தோல்வி: தேய்கிறது கழுதை

## சி.பி.எம்.இன் தேர்தல் தோல்வியைத் தற்காலிகப் பின்னடைவாகப் பார்க்க முடியாது

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் இதுவரை கண்டிராத மிகப் பெரிய தோல்வியை சி.பி.எம். கட்சி சந்தித்துள்ளது. நாடு தழுவிய அளவில் மொத்தம் 16 தொகுதிகளில் மட்டுமே அக்கட்சி வெற்றி பெற்றுள்ளது. 1967-இல் சி.பி.எம் கட்சி முதன் முறையாக நாடாளுமன்றத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற தொகுதிகளைவிட இது குறைவு.

''டெல்லியின் அதிகார மையங்களை ஆட்டிப் படைக்கும் சக்தி'', ''இடதுசாரிகளின் ஆதரவில்லாமல் எந்தக் கட்சியும் ஆட்சிக்கு வர முடியாது'', ''காங்கிரசு - பா.ஜ.க. அல்லாத இடதுசாரிகள் தலைமையிலான மூன்றாவது அணி தேசிய அரசியலில் தீர்மானகரமான சக்தியாகத் திகழும்'', ''2009-இல் காங்கிரசு அல்லாத ஆட்சியே டெல்லியில் அமையும்'' என்றெல்லாம் சவடால் அடித்துவந்த சி.பி.எம். கட்சியின் கனவுகளும் நப்பாசைகளும் சுயதம்பட்டங்களும் இன்று புஸ்வாணமாகி விட்டன. கடந்த நாடாளுமன்றத்தில் 3-வது பெரிய ஓட்டுக் கட்சியாக இருந்த சி.பி.எம். இப்போது 8-வது இடத்துக்குத் தள்ளப்பட்டு விட்டது. கடந்த தேர்தலை ஒப்பிடும்போது, சி.பி.எம்.இன் கோட்டையாகக் கருதப்படும் மே.வங்கம், கேரளா ஆகிய மாநிலங்களில் அக்கட்சி 35 தொகுதிகளை இழந்துள்ளது. நாடாளுமன்ற வரலாற்றில் இதுவரை கண்டிராத மிக மோசமான படுதோல்வியை அக்கட்சி சந்தித்துள்ளது.

தேர்தல் முடிவுகளைக் கண்டு அதிர்ச்சியில் உறைந்துபோன சி.பி.எம். தலைவர்கள் ''தோல்விக்கான காரணங்களை ஆழமாகப் பரிசீலித்து தவறுகளைக் களைந்து முன்னேறுவோம். சி.பி.எம். கட்சிக்குத் தேர்தல் தோல்வி ஏற்பட்டுள்ள போதிலும், மக்களிடம் ஆதரவு குறைந்துவிடவில்லை. சி.பி.எம்.க்கு கிடைத்துவரும் வாக்குகளின் எண்ணிக்கையில் சற்றே சரிவு ஏற்பட்டுள்ளது. நாடெங்கும் காங்கிரசு ஆதரவு அலை வீசியதால் இந்தச் சரிவு ஏற்பட்டுள்ளது'' என்று தமக்குத்தாமே ஆறுதல் கூறிக் கொண்டு தோல்விக்கான உண்மையான காரணங்களை மூடி மறைக்கின்றனர்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 69 தொகுதிகளில் சி.பி.எம். போட்டியிட்டது. தற்போது 82 தொகுதிகளில் போட்டியிட்டுள்ளது. அதிகமான தொகுதிகளில் போட்டியிட்டதற்கு ஏற்ப அக்கட்சிக்கு கிடைக்கும் வாக்குகளின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்க வேண்டும். ஆனால் கடந்த தேர்தலில் மொத்தத்தில் 5.66% வாக்குகளைப் பெற்ற சி.பி.எம். இப்போது 5.33% வாக்குகளையே பெற்றுள்ளது. இதுகூட தேர்தல் கமிசன் தரும் புள்ளிவிவரம் தான். உண்மையில், 2004 நாடாளுமன்றத் தேர்தலை ஒப்பிடும்போது, தற்போதைய தேர்தலில் மே.வங்கத்தில் மட்டும் சி.பி.எம். கட்சிக்குக் கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கை 5% குறைந்துள்ளது. கேரளாவில் 2% அளவுக்குக் குறைந்துள்ளது.

திரிபுரா மாநிலத்தின் 2 தொகுதிகளிலும் வெற்றி பெற்றுவிட்டதாக சி.பி.எம். கட்சி ஆறுதல்பட்டுக் கொள்கிறது. ஆனால், 2004 தேர்தலில் 68% வாக்குகளைப் பெற்ற சி.பி.எம். கட்சி இப்போது 61% மட்டுமே பெற்றுள்ளது. சி.பி.எம். வெற்றி பெற்றுள்ள அந்தமான் தொகுதியில் மட்டுமே அக்கட்சிக்கு வாக்கு எண்ணிக்கை சற்று அதிகரித்துள்ளது.

படுதோல்விக்கான காரணங்களைப் பரிசீலிக்க மாநிலக் கமிட்டிகள் கூடி முடிவெடுப்பதற்கு முன்பாகவே, சி.பி.எம். கட்சியில் நிலவும் கோஷ்டிச் சண்டைக்கு ஏற்ப, அதன் தலைவர்கள் தோல்விக்கான பழியை எதிர்த்தரப்பின் மீது சுமத்தி வருகின்றனர். கேரளாவில் மாநில முதல்வரான அச்சுதானந்தன் கோஷ்டி, மாநிலச் செயலாளரான பினாரயி விஜயன் கோஷ்டி தான் சி.பி.எம்.இன் தோல்விக்குக் காரணம் என்கிறது. விஜயன் கோஷ்டியோ, அச்சுதானந்தன் கோஷ்டியின் சீர்குலைவு வேலைகள்தான் தோல்விக்குக் காரணம் என்று சாடுகிறது.





படிப்பகம்

www.padippakam.com

மே.வங்க சி.பி.எம். அமைச்சரான சுபாஷ் சக்ரவர்த்தி, கட்சித் தலைமை - அதாவது, கட்சியின் செயலாளரான பிரகாஷ் காரத்தின் தவறான முடிவுகள்தான் தோல்விக்குக் காரணம் என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறார். காங்கிரசு கூட்டணி அரசை ஆதரித்து வந்த சி.பி.எம். கட்சி, கடைசி நேரத்தில் காலை வாரியதால் மக்கள் அதிருப்தியடைந்தனர் என்றும், இந்த அதிருப்தியை திரிணாமுல் காங்கிரசு அறுவடை செய்து கொண்டு விட்டது என்றும், இதற்கு தலைமைதான் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர் சாடுகிறார்.




மே.வங்க சி.பி.எம். செயலாளர் உள்ளிட்டு மாநிலக் கமிட்டியின் பெரும்பாலான முன்னணித் தலைவர்களும் இதே போல மையத் தலைமையைச் சாடுகின்றனர். இதுவும் போதாதென்று, கட்சியிலிருந்து நீக்கப்பட்ட மே.வங்கத்தைச் சேர்ந்த முன்னாள் சி.பி.எம். தலைவர்களுள் ஒருவரும், முன்னாள் நாடாளுமன்ற அவைத் தலைவருமான சோமநாத் சட்டர்ஜி, ''தேர்தல் தோல்விக்கு தலைமையின் தவறுகள் தான் காரணம்; கட்சியானது, மக்களிடமிருந்து தனிமைப்பட்டு விட்டது'' என்று குற்றம் சாட்டுகிறார். அவருக்கு பக்கமேளம் வாசித்துக் கொண்டு தேர்தலில் தோல்வியடைந்த சி.பி.எம். பிரமுகர்கள், முதல்வர் புத்ததேவும் கட்சியின் மையத் தலைமையும்தான் தோல்விக்குக் காரணம் என்கின்றனர்.

தேர்தலில் ஏற்பட்ட படுதோல்வியைக் கண்டும், தோல்வியடைந்த சி.பி.எம். பிரமுகர்கள் தன்னை குற்றவாளியாக்கிச் சாடுவதைக் கண்டும் அரண்டு போன மே.வங்க முதல்வரான புத்ததேவ் பட்டாச்சார்யா, ''விமர்சிப்பவர்களே அரசாங்கத்தை நடத்தட்டும்; நான் பதவி விலகிக் கொள்கிறேன்'' என்று முறுக்கிக் கொண்டார். ''புத்ததேவைப் பலிகிடாவாக்கி மையத் தலைமை தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறது. இதை அனுமதிக்க முடியாது. புத்ததேவ் பதவி விலகினால், கட்சியின் பொதுச் செயலாளர் காரத் பதவி விலகத் தயாரா?'' என்று மே.வங்க காம்ரேடுகள் கேள்வி எழுப்பினர்.

உன்னைச் சொல்லி குற்றமில்லை; என்னைச் சொல்லி குற்றமில்லை என்ற கதையாக, நேற்று வரை காங்கிரசையும் பா.ஜ.க.வையும் மாறி மாறி ஆதரித்து வந்த கட்சிகளை வைத்து மூன்றாவது அணி உருவாக்கியதும், மாநிலப் பிரச்சினைகளும் தான் தோல்விக்குக் காரணம் என்று மே 18-ஆம் தேதி கூடிய சி.பி.எம். கட்சியின் அரசியல் தலைமைக்குழு தீர்மானித்தது. இதன்மூலம் தலைமையும் தவறு செய்துள்ளது; புத்ததேவ், அச்சுதானந்தன் ஆகிய மாநில முதல்வர்களும் தவறு செய்துள்ளனர்; எல்லோருடைய தவறுகள்தான் தோல்விக்குக் காரணம் என்று சமரசப்படுத்தியது. இதையெல்லாம் கேட்டு ஒருவருக்கொருவர் ஆறுதல் பட்டுக் கொள்ளலாமே தவிர, இப்படிப்பட்ட மாநில-மையத் தலைமையைக் கொண்டு 2011-இல் வரப்போகும் மாநில சட்டமன்றத் தேர்தல்களை எப்படி எதிர்கொள்வது என்று புரியாமல் சி.பி.எம். பிரமுகர்கள் கையைப் பிசைந்து கொண்டிருக்கின்றனர்.

புரட்சி சவடால் அடித்து வந்த சி.பி.எம். கட்சி, தனியார்மய - தாராளமயத்துக்கேற்ப தன்னை மறுவார்ப்பு செய்து கொண்ட நாளிலிருந்தே அதன் தோல்வியும் சீரழியும் பாசிசத் தன்மையும் தொடங்கி விட்டது. ''எங்கள் கொள்கைகளை நாங்கள் தலைகீழாக மாற்றிக் கொண்டுள்ளோம்'' என்று வெட்கமின்றி அறிவித்துக் கொண்டு தனியார்மய - தாராளமயத்துக்குக் காவடி தூக்கினார், மே.வங்க முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா. இதர ஓட்டுக் கட்சி அரசுகளைப் போலவே, 'மாநிலத்தின் தொழில் வளர்ச்சி' என்ற பெயரில் விவசாயிகளிடமிருந்து விளைநிலங்களைப் பறித்து சிறப்புப் பொருளாதார மண்டலங்களை நிறுவி, உள்நாட்டு - வெளிநாட்டு முதலாளிகளுக்கு கோடிகோடியாய் வரிப்பணத்தை வாரியிறைத்து பகற்கொள்ளைக்குப் பட்டுக் கம்பளம் விரித்தது இடதுசாரி அரசு. சிங்கூரிலும் நந்திகிராமத்திலும் லால்காரிலும் விவசாயிகளிடமிருந்து விளைநிலங்களைப் பறித்த இடதுசாரி அரசு, அதை எதிர்த்துப் போராடிய மக்கள் மீது கொலைவெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டது. கட்சி அணிகளோ பாசிச குண்டர் படையாக வளர்த்தெடுக்கப்பட்டு, போராடும் மக்கள் மீது வன்முறை வெறியாட்டங்களில் ஈடுபட்டனர். இவையனைத்தும் மே.வங்க விவசாயிகள் சி.பி.எம். கட்சி மீது வைத்திருந்த அரைகுறையான நம்பிக்கையையும் முற்றாகப் பறித்து விட்டது.

மறுபுறம் சி.பி.எம்.இன் உள்ளூர் தலைவர்களோ, ஊழலில் ஊறித் திளைத்து மக்களிடம் அதிகாரத் திமிருடன் நடந்து கொண்டனர். மாநிலமெங்கும் ரேஷன் கடை ஊழலுக்கு எதிராக மக்கள் நடத்திய போராட்டங்களும் சி.பி.எம். தலைவர்களின் வீடுகள் சூறையாடப்பட்டதும் சி.பி.எம். மீது மக்கள் கொண்டிருந்த வெறுப்பையும் குமுறலையும் மெய்ப்பித்துக் காட்டின. தேசிய ஊரக வேலை உத்தரவாதத் திட்டம் போன்ற கவர்ச்சிவாதத் திட்டங்களோ, பெயரளவிலான சமூகநலத் திட்டங்களோ கூட செயல்படுத்தப்படாமல் அம்மாநிலத்தில் முடங்கிக் கிடந்தன. சிறுபான்மை முசுலீம்கள் மே.வங்கத்தில் புறக்கணிக்கப்பட்டு வருவதாக சச்சார் கமிட்டி சுட்டிக் காட்டிய பின்னரும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததால், முசுலீம்கள் சி.பி.எம். கட்சி மீது அதிருப்தியடைந்தனர். இவையெல்லாம் சேர்ந்து கடந்த ஆண்டில் நடந்த உள்ளூராட்சி தேர்தலின் போதே அதிருப்தியாக வெளிப்பட்டது. இருப்பினும், கள்ள ஓட்டு, வாக்குச் சாவடிகள் சூறையாடல், வன்முறை வெறியாட்டங்களைக்


படிப்பகம்

www.padippakam.com

கட்டவிழ்த்து விட்டு, தேர்தல் வெற்றியைச் சாதித்து, சி.பி.எம். கட்சியைத் தொடர்ந்து மக்கள் ஆதரித்து வருவதாக அக்கட்சி காட்டிக் கொண்டது.

எல்லாவற்றுக்கும் மேலாக காங்கிரசு - பா.ஜ.க.வுக்கு மாற்று என்ற பெயரில், நேற்றுவரை காங்கிரசுடனும் பா.ஜ.க.வுடன் கூடிக் குலாவிய சந்தர்ப்பவாதிகளையும் கடைந்தெடுத்த பாசிஸ்டுகளையும் கொண்டு சி.பி.எம். கட்டிய மூன்றாவது அணியும், அச்சந்தர்ப்பவாத - பாசிசத் தலைவர்களுக்கு சி.பி.எம். கட்சி ஒளிவட்டம் சூட்டி துதிபாடியதும், சி.பி.எம். கட்சியின் பச்சையான பிழைப்புவாதத்தை நாட்டு மக்களிடம் அம்பலப்படுத்திக் காட்டிவிட்டது. இவையெல்லாம் சேர்ந்து சி.பி.எம். கட்சியை நாடாளுமன்றத் தேர்தலில் பாதாளத்துக்குள் தள்ளி விட்டுள்ளது.

இருப்பினும் இப்படுதோல்வியிலிருந்து சி.பி.எம் மீண்டுவிட முடியுமா? தலைமையை மாற்றி, கவர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் மக்கள் நம்பிக்கையைப் பெற்று 2011-ல் நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தல்களில் பழைய நிலையைத் தக்க வைத்துக் கொள்ளத்தான் முடியுமா? ஒருக்காலும் முடியாது.

ஏனெனில் தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் எனும் ஆளும் வர்க்கங்களின் மறுகாலனியாதிக்கக் கொள்கைக்கு எதிரான மாற்றுக் கொள்கையோ - திட்டங்களோ சி.பி.எம். கட்சியிடம் இல்லை. இதே கொள்கைகளை மனித முகம் கொண்டதாக, மக்களைக் கடுமையாகப் பாதிக்காத வகையில் செயல்படுத்த வேண்டும் என்பதுதான் சி.பி.எம். கூறும் மாற்றுக் கொள்கை. சுருக்கமாகச் சொன்னால், ஆளும் வர்க்கக் கட்சிகளுக்கும் சி.பி.எம். கட்சிக்கும் அடிப்படையில் எந்த வேறுபாடும் இல்லாமல் போய் விட்டது. இதுவும் போதாதென்று இதர ஆளும் வர்க்கக் கட்சிகளைப் போல சி.பி.எம். கட்சியும் கோடீசுவரக் கட்சியாக மாறியிருப்பதோடு, பாசிச குண்டர்படையும் கட்டியமைத்துள்ளது. இனியும் இக்கட்சி, உழைக்கும் மக்களை அணிதிரட்டி அவர்களின் விடுதலைக்காகப் போராடும் என்று நம்புவதற்கு அடிப்படையில்லை. புதைந்து கொண்டிருக்கும் சி.பி.எம். கட்சியை நம்பி ஏமாற, புரட்சியை நேசிக்கும் உழைக்கும் மக்களும் இனி தயாரில்லை.

• குமார்

## பன்றிக் காய்ச்சல்:

# பன்றிகளைக் குற்றவாளியாக்காதீர்கள்!

கடந்த நூற்றாண்டில், உலகை ஆட்டிப்படைத்த பெரியம்மை, பிளேக், போன்ற கொள்ளை நோய்கள், அறிவியல் முன்னேற்றத்தின் காரணமாக முற்றிலும் ஒழிக்கப்பட்டுவிட்டன. இருப்பினும் அவ்வப்போது தோன்றும் புதுப்புது கொள்ளை நோய்கள், உலகையே அச்சுறுத்தி வருகின்றன. கடந்த 10 ஆண்டுகளில் பறவைக் காய்ச்சல், சிக்குன் குனியா என வகை வகையான நோய்கள் தோன்றிப் பரவின. இந்நோய்களால் பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டனர். இந்த வரிசையில் வந்திருக்கும் புதுவித நோய்தான் பன்றிக் காய்ச்சல். அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் போன்ற வளர்ந்த நாடுகளை இந்த நோய் ஆட்டிப் படைக்கிறது. இந்நோய்க்குப் பயந்து பல நாடுகள் தங்களது எல்லைகளை மூடி வருகின்றன. பத்திரிக்கைகளும், இதர செய்தி ஊடகங்களும் இந்த நோய் குறித்து மக்களை எவ்வளவு பயமுறுத்த முடியுமோ அந்தளவுக்குப் பயமுறுத்தி வருகின்றன. அமெரிக்கா சென்று திரும்பிய சில இந்தியர்களுக்கு இந்தக் காய்ச்சல் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

பன்றிக் காய்ச்சல் பற்றிய செய்திகள் பரவியதால், மக்களிடையே பெரும்பீதி கிளம்பியுள்ளது. விமான நிலையங்களில் பயணிகளைத் தீவிரமாகக் கண்காணிக்கிறார்கள். அவர்களில் உடல் வெப்ப நிலை அதிகமாக உள்ளவர்களைத் தனியறையில் (குவாரண்டைன்) தடுத்து வைத்து விடுகிறார்கள். சாதாரணமாக ஒருவர் தும்மினாலோ, இருமினாலோ, புளூக்காய்ச்சலாக இருக்குமோ எனும் அச்சத்திற்காளாகிறார்கள்.

பொதுவாக, இன்புளுயன்சா என்னும் வைரஸ் தாக்குவதால் மனிதர்களுக்குச் சாதாரணமாக ஏற்படும் நோய்தான் புளூ காய்ச்சல் . இது கடுமையான காய்ச்சலையும், மூச்சுத் திணறலையும் ஏற்படுத்தக் கூடிய தொற்றுநோயாகும். ஆண்டு தோறும் இது பல லட்சம் பேரைத் தாக்குகிறது. அவர்களில் குறிப்பாகக் குழந்தைகள், கர்ப்பிணிகள், முதியோர்கள் ஆகியோரை இது கடுமையாகப் பாதிக்கிறது. இதனால் சிலர் இறந்தும் போகிறார்கள். ஆனால், பன்றிக் காய்ச்சல் எனப்படும் 'ஸ்வைன் புளூ' பன்றிகளிடையே தோன்றி, அவற்றிற்கு அருகில் வேலை செய்து, தொடர்ந்து அங்கேயே வசிக்கும் மனிதர்களுக்குப் பரவுகிறது. இந்நோய் மனிதனைத் தாக்கும் போது சுவாசத்தைப் பாதித்து மரணத்தை ஏற்படுத்துகிறது.


மெக்சிகோவின் கிழக்குப் பகுதி நகரான லா கிளோரியாவில்தான் முதன் முதலாக இந்த நோய் தோன்றியது. அந்நகரில் உள்ள பன்றிப் பண்ணை ஒன்றிலிருந்து நகருக்குப் பரவிய வைரஸ் மெக்சிகோ முழுவதும் பரவி, அண்டை நாடுகளான அமெரிக்கா, கனடா ஆகியவற்றுக்கும் பரவி, தற்போது ஐரோப்பாவிற்குள்ளும் ஊடுருவிவிட்டது.

முதலாளித்துவ நாடுகளின் நவீன பண்ணைகளில் பல லட்சம் பன்றிகள் ஒன்றாக அடைத்து வைத்து வளர்க்கப்படுகின்றன. லாப வெறியோடு, சிறிய இடத்தில் நகரக் கூட இடமில்லாமல் இவற்றை ஆண்டுக்கணக்காக வைத்திருக்கின்றனர். பன்றிகளைக் கொழுக்க வைப்பதற்கெனக் கொடுக்கப்படும் இரசாயனம் கலந்த உணவுகளும், அப்புறப்படுத்தப்படாமல் கிடக்கும் டன் கணக்கிலான கழிவுகளும், இத்தகைய பண்ணைகளை கிருமிகளின் உற்பத்திச் சாலைகளாக மாற்றியுள்ளன. மெக்சிகோவில் நோய் தோன்றிய பண்ணை ஸ்மித் பீல்டு நிறுவனத்திற்குச் சொந்தமானது. இந்தப் பண்ணையிலிருந்து மட்டும் ஆண்டு தோறும் 10 லட்சம் பன்றிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்த நிறுவனம் 2006-ஆம் ஆண்டில் மட்டும் ஒட்டு மொத்தமாக 2 கோடியே 60 லட்சம் பன்றிகளை ஏற்றுமதி செய்துள்ளது. தங்களது பண்ணையின் சுகாதாரத்தைப் பறைசாற்ற இந்த நிறுவனம் பல்வேறு தரச் சான்றிதழ்களைக் காட்டினாலும், சுகாதாரம் என்னவோ காகிதத்தில் மட்டுமே உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



**பன்றிக் காய்ச்சல் கிருமிகளின் உற்பத்திக் கூடம்: சுகாதாரமற்ற - இலாபவெறி பிடித்த முதலாளித்துவ பன்றிப் பண்ணைகள்.**

இந்த நிறுவனத்தைப் போல அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் நூற்றுக் கணக்கான நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் கோடிக்கணக் கான பன்றிகள் இந்த லட்சணத்தில்தான் வளர்க்கப்படுகின்றன. பன்றிக்காய்ச்சலைப் பற்றிப் பக்கம் பக்கமாக எழுதும் பத்திரிக்கைகள் எதுவும் 'இன்டென்சிவ் பார்மிங்' எனும் அதிதீவிர உற்பத்தி முறையைப் பற்றியோ, அதனைக் கையாளும் முதலாளிகளின் லாப வெறிதான் இந்த நோய்க்குக் காரணம் என்பதைப் பற்றியோ எழுதுவதே இல்லை.


இந்நோய் தோன்றிய ஒரு சில வாரங்களிலேயே மெக்சிகோ முழுவதும் பரவி அந்நாட்டையே செயலிழக்க வைத்து விட்டது. நாடு முழுவதும் அறிவிக்கப்படாத ஊரடங்கு நிலவுகிறது, எல்லா நிறுவனங்களும் காலவரையின்றி மூடப்பட்டுள்ளன. மே 1 அன்று நடக்கும் தொழிலாளர் பேரணி கூட அங்கு நடைபெற வில்லை. அதே சமயம் இந்நோயைக் கட்டுப்படுத்த அரசால் முடியவில்லை. இந்த நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்குக் கூட நோய்த்தடுப்பூசி போட முடியாத நிலையில்தான் மெக்சிகோ அரசு உள்ளது. மெக்சிகோவின் எல்லையைத் தாண்டி அமெரிக்காவிற்குள் நுழைந்துள்ள இந்தக் காய்ச்சலை அமெரிக்காவாலும் தடுக்க இயலவில்லை. அமெரிக்க அரசு ஏற்கெனவே எல்லா சமூக நலத் திட்டங்களையும் ஒழித்துக் கட்டிவிட்டதுடன், சுகாதாரத் துறையை முற்றிலும் தனியார்மயமாக்கிவிட்டது. நோயிலிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ளும் பொறுப்பு மக்களிடமே விடப்பட்டுள்ளது. மக்களோ மருத்துவக் காப்பீட்டு நிறுவனங்களின் பிடியில் உள்ளனர். ஏற்கெனவே பொருளாதார வீழ்ச்சியில் சிக்கித் தவிக்கும் அமெரிக்க மக்களைத் தற்போது பன்றிக் காய்ச்சல் பாடாய்ப் படுத்துகிறது.

எல்லா அழிவுகளிலும் லாபம் தேடும் முதலாளித்துவம் பன்றிக்காய்ச்சலையும் விட்டு வைக்கவில்லை, புளு வைரஸிற்கு மருந்துகளை தயாரித்து விற்கும் பன்னாட்டு மருந்துக் கம்பெனிகளுக்கு அடித்தது யோகம். அவை மருந்துகளையும், தடுப்பூசிகளையும் உற்பத்தி செய்து குவிக்கின்றன. ஊடகங்களைத் தங்கள் பக்கம் வளைத்துக் கொண்டு உலகம் முழுவதும் இந்நோய் தாக்குவது உறுதி என்று பீதியூட்டி தங்களது சந்தையை விரிவுபடுத்தி வருகின்றன. பன்றிக்காய்ச்சல் பரவத் தொடங்கியதும் இந்த மருந்து தயாரிப்பு நிறுவனங்களின் பங்கு மதிப்பு மிகப்பெரிய அளவில் அதிகரித்துள்ளதே இதற்குச் சாட்சி. கடந்த முறை பறவைக் காய்ச்சல் வந்த போதும் இவற்றின் மதிப்பு இதே போல உயர்ந்தது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு ஒருபுறம் மருந்துக் கம்பெனிகள் லாபம் ஈட்டினாலும், மற்றொரு புறம் பன்றி இறைச்சியினால் நோய் பரவும் என்ற பீதியின் காரணமாக, பன்றி இறைச்சி ஏற்றுமதி கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இதனால் பன்றி இறைச்சி ஏற்றுமதியாளர்களைக் காக்க உலக சுகாதார நிறுவனம் களத்தில் இறங்கியது. பன்றி இறைச்சியின் மூலம் காய்ச்சல் பரவாது என்று பிரச்சாரம் செய்தது. பன்றிக் காய்ச்சல் என்ற பெயரையே 'மெக்சிகன் காய்ச்சல்' என்று மாற்றிவிட்டது. இதன் மூலம் காய்ச்சல் பரவுவதற்குக் காரணம் மெக்சிகர்கள்தானே ஒழிய, பன்றிகள் அல்ல என்று மறைமுகமாகக் கூறுகிறது.

கனடா நாட்டைச் சேர்ந்த ஒரு பண்ணையில் 220 பன்றிகளுக்கு இந்தக் காய்ச்சல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. உடனே அந்தப் பண்ணை நிர்வாகமும், கனடா அரசும் பண்ணையில் வேலை பார்த்த ஒரு மெக்சிகத் தொழிலாளியிடமிருந்துதான் பன்றிகளுக்குக்

**மெக்சிகோ நாட்டைக் கவ்விய பீதி: பன்றிக் காய்ச்சல் நோயிலிருந்து தற்காத்துக் கொள்ள முகமூடியணிந்து பணியாற்றும் தொழிலாளர்கள்.**





படிப்பகம்

www.padippakam.com

காய்ச்சல் பரவியதாகக் கூறியது. 'ஏன் பன்றிகளிடமிருந்து அந்தத் தொழிலாளிக்கு நோய் பரவியிருக்கக்கூடாது' எனக் கேட்டால் கனடா பன்றிகளுக்குத் தானாக புளூ காய்ச்சல் வராது, அவற்றிற்கு தொழிலாளர்களிடமிருந்துதான் பரவியிருக்கும் எனக் கூறித் தொழிலாளியைப் பன்றியை விடக் கேவலமாகச் சித்தரிக்கின்றனர்.

பன்றிக் காய்ச்சல் பன்றிகளிடமிருந்து தோன்றி மனிதர்களுக்குப் பரவியதாகக் கூறினாலும், இது வல்லரசுகள் நடத்தும் உயிரியல் ஆயுதப் போருக்கானதொரு சோதனை எனவும் கூறுகின்றனர். தற்போது அனைத்து முதலாளித்துவ நாடுகளும் இச்சோதனைகளின் மூலம் பல்வேறு புதிய வைரஸ்களை உருவாக்குவது குறித்து ஆராய்ச்சி செய்து வருகின்றன. அவற்றைச் சோதித்துப் பார்க்க அமெரிக்காவே கூட மக்களிடையே பரவச் செய்திருக்கக்கூடும். ஆனால் இது போன்ற சோதனைகளை தேச நலன் என்ற பெயரில் மூடி மறைத்துவிடுகின்றனர்.

மே 5-ஆம் தேதி வரை உலகம் முழுவதும் 1500 பேர் இந்தக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தனர். 30 பேர் இறந்திருந்தனர். அமெரிக்காவில் மட்டும் 109 பேர் பாதிக்கப்பட்டிருந்தனர், ஒருவர் உயிரிழந்திருந்தார். இப்போது இந்நோய் கட்டுப்படுத்த முடியாதபடி பரவி வருகிறது.

உலகப் பணக்கார நாடான அமெரிக்காவிற்கே இந்த நிலையென்றால், ஏழை நாடுகளை இந்நோய்த் தாக்கும்போது அம்மக்களின் கதி என்ன ஆவது? ஏற்கெனவே அமெரிக்கா தனது ஆலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகளை மூன்றாம் உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. அத்துடன் மருத்துவக் கழிவுகளையும், ரசாயனக் கழிவுகளையும் அந்நாடுகளில் கொட்டி, சுற்றுச் சூழலையும் சுகாதாரத்தையும் மாசுபடுத்தி வருகிறது. தூத்துக்குடியிலும், சென்னையிலும் அமெரிக்காவிருந்து கொண்டுவந்து கொட்டப்பட்ட குப்பைகளில் வெடி மருந்துகளும், வெடிக்காத குண்டுகளும் பல ஆண்டுகளாகக் கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அதேபோல, கொச்சி துறைமுகத்திலிருந்து கோவைக்குக் கொண்டுவந்து கொட்டப்பட்ட கழிவுகளில் பயன்படுத்தப் பட்ட ஊசி, குளுகோஸ் பாட்டில் உட்பட மருத்துவக் கழிவுகள் மலை மலையாகக் குவிக்கப்பட்டிருந்தன. இவ்வாறு தனது கழிவுகளை ஏழை நாடுகளுக்குப் பரிசளித்துப் பழகிய அமெரிக்கா, பன்றிக் காய்ச்சலை மட்டும் அந்த நாடுகளுக்குப் பரவாமல் கட்டுப்படுத்தி விடுமா?

இந்தியாவில் சுகாதாரத்துறையை வேகமாகத் தனியார்மயப்படுத்தி வருகின்றனர். மக்களுக்கு கிடைத்து வந்த கொஞ்ச நஞ்ச மருத்துவ உதவிகளையும் அரசு திட்டமிட்டு நிறுத்திவருகிறது. அரசு-தனியார் கூட்டுச் சுகாதாரத் திட்டம் என்ற பெயரில் அரசு மருத்துவமனைகள் கொஞ்சம் கொஞ்சமாக விற்கப்படுகின்றன. இந்நிலையில் இங்கு பன்றிக் காய்ச்சல் பரவினால் அதன் விளைவுகள் மிகவும் பயங்கரமானதாக இருக்கும். இந்திய சுகாதார அதிகாரிகள், பன்றிக்காய்ச்சலை இந்தியா எளிதில் எதிர்கொள்ள முடியும் என்றும், அதுபற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை என்றும் பேட்டியளித்துள்ளனர். ஆனால் தமிழக மக்களைத் தாக்கிய சாதாரண சிக்குன் குனியா நோயையே தடுத்து நிறுத்த முடியாத இவர்கள்தான், பன்றிக் காய்ச்சல் போன்ற வெகு வேகமாகப் பரவும் நோய்களிலிருந்து மக்களைக் காக்கப் போகிறார்களாம்.

> “முதலாளித்துவ அதிதீவிர பெரும்பண்ணை உற்பத்தி முறையும், முதலாளிகளின் இலாபவெறியும்தான் பன்றிக் காய்ச்சல் நோய் தோன்றுவதற்கும் பரவுவதற்கும் முதன்மையான காரணம்.”

காற்று, நிலம், நீர் என அனைத்தும் மாசுபட்டு, சுற்றுச் சூழல் நாசமானாலும் பரவாயில்லை, புதிது புதிதாகக் கொடிய நோய்கள் உருவாகி மக்களெல்லாம் செத்து மடிந்தாலும் பரவாயில்லை. தங்களது லாபம் மட்டும் குறையாமல் இருந்தால் போதும் — என லாபம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு முதலாளித்துவம் இயங்கி வருகிறது. அரசும், முதலாளிகளின் நலனைக் காப்பதிலேயே குறியாய் உள்ளது, மக்களின் அழிவில் கூட முதலாளிகள் லாபம் சம்பாதிக்க உதவுகிறது.

இந்நிலையில் நாம் என்ன செய்யப் போகிறோம்? இவ்வளவு பிரச்சனைகளுக்கும் காரணமான முதலாளித்துவத்தை ஒழித்துக் கட்டப் போராடப் போகிறோமா? அல்லது இப்போதைக்குப் பன்றிக்காய்ச்சல் தடுப்பூசி போட்டுக் கொண்டு அடுத்து வரவிருக்கும் புது நோய் ஒன்றிற்காகக் காத்திருக்கப் போகிறோமா?

• மருது

**உலகை உலுக்கும் அச்சம்: பன்றிக் காய்ச்சல்**
**அபாயத்திலிருந்து தப்பிக்க முன்னெச்சரிக்கையுடன் முகமூடி அணிந்து ஜப்பானில் நகரும் அன்றாட வாழ்க்கை.**





படிப்பகம்

www.padippakam.com

## பெரும் இருபது நாடுகள் (G-20) மாநாடு:

# அமெரிக்காவின் நயவஞ்சகம் இந்தியாவின் துரோகம்

உலகத்தின் அனைத்து நாடுகளையும் பிடித்தாட்டும் பொருளாதாரத் தேக்கத்தினை உடைக்க ஏகாதிபத்திய நாடுகளும் இந்தியா, சீனா, பிரேசில் உள்ளிட்ட சில "வளர்ந்து" வரும் நாடுகளும் இணைந்து கடந்த ஏப்ரல் மாதம் இங்கிலாந்து தலைநகர் இலண்டனில் மாநாடு ஒன்றினை நடத்தின. "பெரும் இருபது நாடுகள் மாநாடு" (G 20) என அழைக்கப்பட்ட இம் மாநாட்டினை முதலாளித்துவவாதிகள் வாராது வந்த மாமணி போலக் கூத்தாடி வரவேற்க, உழைக்கும் மக்கள் இம்மாநாட்டிற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களும், ஊர்வலங்களும் நடத்தினர்.

"இப்பொருளாதார மந்தத்தினால் பாதிக்கப்பட்ட ஏழை நாடுகளுக்குச் சலுகை அடிப்படையில் கடன்; மேற்குலக நாடுகளின் சந்தையை எவ்விதத் தடையுமின்றி ஏழை நாடுகளுக்குத் திறந்து விடுவது; சுவிஸ் வங்கிகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கருப்புப் பணத்தை வேட்டையாடிக் கொண்டு வருவது; தேவைப்படும் நிதி ஆதாரங்களைச் சந்தையில் கொட்டுவது" என இம்மாநாட்டில் தீர்மானங்கள் இயற்றப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

இம்மாநாடு நடந்து முடிந்த பின் பங்குச் சந்தையில் "காளைகள்" புகுந்து விளையாடின. தண்ணியடித்தவன் போதையேறி "அலப்பரை" பண்ணிவிட்டுப் பின் "பிளாட்" ஆகிவிடுவது போல பங்குச் சந்தையும் ஒரு வார காலம் ஆட்டம்காட்டி விட்டுப் பின் படுத்துவிட்டது. இதைத் தவிர, இம்மாநாடு உலகின் பொருளாதாரத் தேக்கத்தை உடைக்க வேறெந்தச் சாதனையையும் செய்யவில்லை.

இதனை வைத்துக்கொண்டு இம்மாநாடு தோல்வியடைந்துவிட்டதாக ஒதுக்கித் தள்ளிவிடவும் முடியாது. ஏகாதிபத்திய நிதியாதிக்கக் கும்பல் எதைச் சாதிக்க விரும்பியதோ, அதை இந்த மாநாட்டின் மூலம் சாதித்துக் கொண்டன என்பதுதான் உண்மை.

கூடுதலான நிதி ஆதாரங்களைச் சந்தையில் கொட்டுவது என்ற இம்மாநாட்டில் எடுத்த முடிவின்படி 1,10,000 கோடி அமெரிக்க டாலர் (ஏறத்தாழ 50 முதல் 55 இலட்சம் கோடி ரூபாய்) பெறுமான நிதியுதவி உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய வளர்ச்சி வங்கி உள்ளிட்ட பல்வேறு நிதி நிறுவனங்களுக்கு வழங்கப்படும். இந்த நிதியுதவியை ஏகாதிபத்திய நாடுகள் மட்டும் கொடுக்கப் போவதில்லை. இந்த நிதி நிறுவனங்களில் உறுப்பினர்களாக இருக்கும் ஏழை நாடுகளும் தங்களின் "தகுதி"க்கு ஏற்ப வழங்க வேண்டும். குரங்கு ஆப்பத்தைப் பங்குபோட்டு விழுங்கிவிட்ட கதையைப் போல, இந்தக் கூடுதல் நிதி ஆதாரங்களை ஏகாதிபத்திய நாடுகளைச் சேர்ந்த வங்கிகள் வளைத்துப் போட்டுக் கொள்ளும் சதிதான் இந்த மாநாட்டில் நடந்துள்ளது.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால், 1990-ஆம் ஆண்டுகளில் தென்கிழக்காசிய நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியாலும், தற்பொழுது ஏற்பட்டுள்ள உலகளாவிய பொருளாதார நெருக்கடியாலும் சர்வதேச நாணய நிதியம் நிதி நெருக்கடியில் சிக்கிக் கொண்டு உயிர் வாழப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறது. அதற்கு உயிர் தண்ணீர் ஊற்றுவது போல, இந்த 55 இலட்சம் கோடி ரூபாயில் இருந்து 37,50,000 கோடி ரூபாய் (750 கோடி அமெரிக்க டாலர்) சர்வதேச நாணய நிதியத்தின் மடியில் கொட்ட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அந்நிறுவனம் இந்தப் பணத்தில் 500 கோடி அமெரிக்க டாலரை பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்குக் கடன் வழங்கப் பயன்படுத்திக் கொள்ளுமாம். குறிப்பாக, இப்பொருளாதார நெருக்கடியால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள கிழக்கு ஐரோப்பாவைச் சேர்ந்த முன்னாள் சோசலிச நாடுகளுக்குக் கடன் வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்படுமாம். அந்நாடுகள் இக்கடனைக் கொண்டு தாங்கள் ஏற்கெனவே வாங்கிய கடனை அடைத்துக் கொள்ள வேண்டுமாம். தலையைச் சுற்றி மூக்கைத் தொடாமல் நேரடியாகச் சொன்னால், முன்னாள் சோசலிச நாடுகளுக்குக் கடன் வழங்கிய மேற்கு ஐரோப்பிய வங்கிகளை மீட்பதுதான் இதன் பின் மறைந்துள்ள சங்கதி.

குரங்கு ஆப்பத்தைப் பங்கு போட்டுக் கொண்ட கதை இதோடு முடியவில்லை. மீதமுள்ள 250 கோடி அமெரிக்க டாலரை (12,50,000 கோடி ரூபாய்) சர்வதேச நாணய நிதியத்தில் உறுப்பினராக உள்ள நாடுகள் அனைத்தும் தங்களுக்கு அந்நிதியத்தில் அளிக்கப்பட்டுள்ள உரிமைகளுக்கு ஏற்ப, நிதியுதவியாகப் பெற்றுக் கொள்ளும் திட்டமும் வகுக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தில் ஏகாதிபத்திய நாடுகளுக்கும் ஏழை நாடுகளுக்கும் சம உரிமை வழங்கப்படவில்லை. அந்நிதியத்தில் வல்லான் வகுத்ததுதான் வாய்க்கால். இக்கணக்கின்படி பார்த்தால், இந்த 37,50,000 கோடி ரூபாயில் நூற்றுக்கும் மேற்பட்ட ஏழை நாடுகளுக்கு நிதியுதவியாகவோ கிடைக்கப் போவது வெறும் 3,50,000 கோடி ரூபாய்தான்.

ஏகாதிபத்திய நாடுகள் தங்களின் பொருளாதார சுமையை ஏழை நாடுகள் மீது நைச்சியமாக ஏற்றி வைக்கும் இந்த வஞ்சகத்தைப் பற்றி இந்தியா வாய் திறக்கவேயில்லை. மாறாக, ஏகாதிபத்திய நாடுகள் இந்த மாநாட்டிற்குத் தன்னை அழைத்ததையே பெரும் பாக்கியமாகக் கருதி வருகிறது. ஏகாதிபத்திய நாடுகள் மட்டுமே பங்கு கொண்டு வந்த ஜி 8 கூட்டணி, இப்போது ஜி 20 கூட்டணியாக மாறியிருப்பதாகவும், இது இந்தியா, பிரேசில், சீனா போன்ற "வளர்ந்து" வரும் நாடுகளின் பொருளாதார பலம் அதிகரித்து வருவதை ஏகாதிபத்திய நாடுகள் ஏற்றுக் கொண்டு விட்டதைக் காட்டுவதாகவும் முதலாளித்துவ அறிஞர்கள் குதூகலிக்கின்றனர். மேலும், "வளர்ந்து" வரும் நாடுகளின் இப்பொருளாதார பலத்திற்கு ஏற்ப சர்வதேச நாணய நிதியத்தை "ஜனநாயக"ப்படுத்தவும் ஏகாதிபத்திய நாடுகள் ஒத்துக்கொண்டிருப்பதையும் இவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

வட்டிக் கடையை "ஜனநாயக"ப்படுத்துவதால், ஏழைகளுக்கு என்ன பலன் கிடைத்துவிடும்? "ஆடுகளின் பாதுகாப்பை ஓநாயிடம் ஒப்படைக்கும் பித்தலாட்டம் இது" என இந்த இலண்டன் மாநாட்டு நிதியுதவித் திட்டத்தை அம்பலப்படுத்தியிருக்கிறார், பொலிவியா நாட்டின் அதிபர் இவா மோரலெஸ். இந்தியா, சீனா, பிரேசில் ஆகிய நாடுகளிடம் பல இலட்சம் கோடி ரூபாய் பெறுமான அமெரிக்க டாலர் அந்நியச்



படிப்பகம்

www.padippakam.com

செலாவணி கையிருப்பாகக் குவிந்து கிடக்கிறது. இந்தக் கையிருப்பை தங்களின் நெருக்கடியைத் தீர்க்கப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்தின் அடிப்படையில்தான், ஏகாதிபத்திய நாடுகள் இலண்டன் மாநாட்டிற்கு சில ஏழை நாடுகளை வலியப் போய் அழைத்தன.

இலண்டன் மாநாட்டிற்கு முன்பாக, அமெரிக்க டாலர் சர்வதேச செலாவணியாக இருப்பதை மாற்றக் கோரி சீனா சில ஆலோசனைகளை முன் வைத்தது. ஏகாதிபத்திய நாடுகள் இந்த ஆலோசனைகளை மாநாட்டில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளாமல் திட்டமிட்டே புறக்கணித்தன. ஏகாதிபத்திய நாடுகளுக்கு ஒத்தூதுவதைத் தவிர, வேறெந்த உரிமையும் ஏழை நாடுகளுக்குக் கிடையாது என்பதுதான் ஏகாதிபத்தியவாதிகளின் கொள்கை. இதை நன்கு புரிந்து வைத்திருப்பவர்தான் திருவாளர் மன்மோகன் சிங். இம்மாநாட்டில் சீனாவின் கோரிக்கையைப் பற்றி வாய்திறக்கவே மறுத்துவிட்டார், அவர்.

அது மட்டுமல்ல, இம்மாநாடு நடந்து கொண்டிருந்த பொழுது, ஐரோப்பாவைச் சேர்ந்த உழைக்கும் மக்கள் ''வங்கிகளை முற்றுகையிடுவோம்'' என்ற முழக்கத்தை முன்வைத்து ஆர்ப்பாட்டங்களை நடத்தி வந்தனர். மன்மோகன் சிங்கோ, இந்த நெருக்கடிக்கு வங்கி அதிபர்களையோ, அதிகாரிகளையோ பொறுப்பாக்கக் கூடாது எனப் பேசி, திருடர்களுக்கு வக்காலத்து வாங்கினார்.

இப்பொருளாதார நெருக்கடியை ஆராய்ந்து தீர்வு சொல்வதற்காக ஐ.நா. மன்றத்தால் அமைக்கப்பட்ட கமிட்டி, தனது அறிக்கையில் இப்பொருளாதார நெருக்கடிக்கு ஏகாதிபத்திய நாடுகள்தான் காரணம் எனக் குற்றம் சுமத்தியிருப்பதோடு, இந்த நெருக்கடியைச் சமாளிக்க ஏழை நாடுகளுக்கும் உழைக்கும் மக்களுக்கும் பலன் தரக்கூடிய வகையில் சில சீர்திருத்த சலுகை நடவடிக்கைகளை எடுக்கக் கோரி ஆலோசனைகளை வழங்கியுள்ளது. அந்த அறிக்கையை அமுக்கிவிட வேண்டும்; ஏகாதிபத்திய நாடுகளைச் சேர்ந்த நிதியாதிக்கக் கும்பல்களின் மேலாதிக்கத்தைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில்தான் இலண்டன் மாநாடு நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. ஏகாதிபத்திய கும்பலின் இத்தீய எண்ணத்தை, இந்தியா, பிரேசில், சீனா உள்ளிட்ட சில ஏழை நாடுகள் வழிமொழிந்துள்ளன என்பதுதான் கசப்பான உண்மை.

• திப்பு

# ரமாபாய் நகர் துப்பாக்கிச் சூடு தீர்ப்பு: தானாகக் கனியவில்லை!

## தாழ்த்தப்பட்ட மக்கள் நடத்திய போராட்டங்கள்தான் நீதியை நிலையாட்டியிருக்கிறது!

ஜூலை 11, 1997 - இந்த நாளை மகாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்களால் மறக்கவே முடியாது. இந்து மதவெறி பா.ஜ.க.-சிவசேனா கூட்டணி மகாராஷ்டிர மாநிலத்தை ஆண்டு கொண்டிருந்த காலமது. அன்று அம்மாநிலத் தலைநகர் மும்பயில், காட்கோபர் என்ற பகுதியில் உள்ள மாதா ரமாபாய் அம்பேத்கர் நகரைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோர் மீது மும்பய் போலீசைச் சேர்ந்த ரிசர்வ் படையணி நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 14 வயது சிறுவன் உள்ளிட்ட பத்து தாழ்த்தப்பட்டோர் கொல்லப்பட்டனர்; 26 பேர் படுகாயமுற்றனர்.

இந்து மதவெறிக் கும்பல் ஆட்சியிலிருப்பதைச் சாதகமாக்கிக் கொண்டு ''யாரோ'' சில சமூக விரோத சக்திகள் அக்காலனியில் இருக்கும் அம்பேத்கர் சிலைக்குச் செருப்பு மாலை அணிவித்து அவமானப்படுத்தினர். ஆதிக்க சாதி திமிர் பிடித்த அக்கிரிமினல்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்கக் கோரி ரமாபாய் நகரைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களின் உரிமைக்காகப் போராட்டத்தில் இறங்குவதை இந்து மதவெறிக் கும்பலால் சகித்துக் கொள்ள முடியுமா? சட்டம்-ஒழுங்கைப் பாதுகாப்பது என்ற பெயரில் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி, அப்போராட்டத்தை ஒடுக்கியது, இந்து மதவெறிக் கூட்டணி அரசு.

இச்சம்பவம் நடந்து முடிந்து ஏறத்தாழ 12 ஆண்டுகள் கழித்து, மே 7, 2009 அன்று அத்துப்பாக்கிச் சூட்டைத் தலைமையேற்று நடத்திய துணை ஆய்வாளர் மனோகர் கதமுக்கு ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. இந்தத் தண்டனையை அப்போலீசு பயங்கரவாதிக்குப் பெற்றுத் தரத் தாழ்த்தப்பட்ட மக்கள் பெரும் போராட்டமே நடத்த வேண்டியிருந்தது. போலீசுக்கு எதிராக, காக்கிச் சட்டை கிரிமினல்களைக் காப்பாற்ற முயன்ற அரசு இயந்திரத்துக்கு எதிராகச் சாமானிய மக்கள், அதிலும் தாழ்த்தப்பட்டோர் போராடி வெற்றி பெறுவது எளிதான ஒன்றா?

இந்த அரசு பயங்கரவாத படுகொலையை விசாரித்த குண்டேவர் கமிசன், இந்தத் துப்பாக்கிச் சூட்டை நியாயப்படுத்தி போலீசு அவிழ்த்துவிட்ட அண்டப் புளுகுகளை ஏற்றுக் கொள்ள மறுத்ததோடு, போலீசார் மீது கிரிமினல் வழக்குப் பதிவு செய்யப் பரிந்துரைத்தது. எனினும், இவ்வழக்கைப் பதிவு செய்வது, சாட்சியங்களிடம் வாக்குமூலங்களைப் பெற்றுப் பதிவு செய்வது, குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்வது என இவ்வழக்கு தொடர்பான ஒவ்வொரு விசயத்திற்காகவும் நாங்கள் தொடர்ந்து போராட வேண்டியிருந்தது எனச் சுட்டிக் காட்டுகிறார், சிறப்பு அரசு வழக்குரைஞர் பி.ஜி. பன்ஸோட்.

வழக்கு விசாரணையை இழுத்தடிக்க வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு, அரசு வழக்குரைஞரை நியமிப்பதற்கு நான்கு ஆண்டுகள் எடுத்துக் கொண்டது, மகாராஷ்டிர அரசு. துப்பாக்கிச் சூட்டை நியாயப்படுத்த பொய் சாட்சியங்களை உருவாக்கும் கிரிமினல் வேலைகளில் போலீசு இறங்கியது. குறிப்பாக, போராட்டம் நடத்திய தாழ்த்தப்பட்ட மக்கள் பெட்ரோல் ஏற்றி வந்த டாங்கர் லாரி ஒன்றை எரித்துவிட முயன்றதாகவும், அது மட்டும் நடந்திருந்தால், ரமாபாய் நகரைச் சுற்றியுள்ள பகுதிகள் எரிந்து சாம்பலாகியிருக்கும் என்றும் அதைத் தடுக்கவே உடனடியாகத் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டியதாகிவிட்டது என்றும் கடைசி வரை புளுகி வந்தது, போலீசு. இப்புளுகை நிரூபிக்க சிலர் பெட்ரோல் லாரி மீது ஏறி தீ வைக்க முயலுவதைப் போல ஒரு வீடியோ படத்தைத் தயாரித்து, அதனைப் பத்திரிகையாளர்கள் உள்ளிட்டுப் பலருக்கும் போட்டுக் காண்பித்தும் வந்தது.

பெட்ரோல் இல்லாத காலி டாங்கர் லாரியொன்றினை போலீசே ரமாபாய்


படிப்பகம்

www.padippakam.com

நகருக்கு அருகே கொண்டுவந்து நிறுத்தி வைத்து இந்த நாடகத்தை அரங்கேற்றியதை வழக்கு விசாரணையின்பொழுது தாழ்த்தப்பட்ட மக்கள் நிரூபித்தனர். போராடிய தாழ்த்தப்பட்ட மக்களைப் போக்கிரிகள், பொறுக்கிகள், பொறுப்பில்லாதவரகள் என அவதூறு செய்து அவமானப்படுத்துவதை வழக்கு விசாரணை நெடுகிலும் வாடிக்கையாகக் கொண்டிருந்தது, போலீசு. எல்லாவற்றுக்கும் மேலாக, இத்துப்பாக்கிச் சூட்டில் பாதிப்படைந்தவர்கள் மீதே கலவரத்தில் ஈடுபட்டதாகப் பொய் வழக்குப் போட்டு மிரட்டிப் பார்த்தது, போலீசு.

இத்தீர்ப்பை வரவேற்கும் அதே சமயம், பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இத்தீர்ப்பு முழுமையான நியாயத்தை வழங்கவில்லை என்பதையும் சுட்டிக் காட்டித்தான் ஆக வேண்டும்: இத்துப்பாக்கிச் சூட்டைக் கொலை வழக்குக் குற்றப்பிரிவுகளின் கீழ் விசாரிக்க மறுத்துவிட்டது, நீதிமன்றம். ரமாபாய் நகரைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் கொல்லப்பட்ட விதத்தைத் தெரிந்து கொண்டால் தான், நீதிமன்றம் இழைத்துள்ள அநீதியைப் புரிந்துகொள்ள முடியும்.

ரமாபாய் நகரில் உள்ள அம்பேத்கர் சிலையை வணங்கிவிட்டு வேலைக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்த கௌசல்யாபாய் அன்று (ஜூலை 11, 1997) காலை 6 மணிக்கு அம்பேத்கர் சிலையை வணங்க வந்தபொழுது, அச்சிலைக்குச் செருப்பு மாலை அணிவித்திருப்பதைக் கண்டு மனம் உடைந்து போனார். அவர் இந்த அக்கிரமத்தை உடனடியாக அருகிலுள்ள புறக் காவல் நிலையத்தில் புகாராகச் சொன்னார். அம்பேத்கர் சிலை அவமதிக்கப்பட்டதைக் கேள்விப்பட்டவுடனேயே ரமாபாய் நகரைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் சாலை மறியலில் இறங்கினர். விசாரணைக்கு வந்த போலீசு அதிகாரிகள் 7.30 மணியளவில் செருப்பு மாலையை அகற்றினர். ரிசர்வ் போலீசு படை 7.45 மணியளவில் ரமாபாய் நகருக்கு 150 மீட்டர் தூரத்தில் குவிக்கப்பட்டது. அடுத்த சில நிமிடங்களிலேயே, எவ்வித முன்னெச்சரிக்கையும் செய்யாமல் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

நிராயுதபாணியாகப் போராடிக் கொண்டிருந்த அம்மக்களை அப்படியே கொன்றுவிட வேண்டும் என்ற நோக்கத்தோடுதான், போலீசு ஏறத்தாழ 15 நிமிடங்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியது. கொல்லப்பட்ட அனைவருமே தலையில், நெஞ்சில், வயிற்றில் குண்டடிப்பட்டு அதே இடத்திலேயே சுருண்டு விழுந்து இறந்து போனார்கள். அம்பேத்கர் சிலைக்குச் செருப்பு மாலை அணிவிக்கப் பட்டிருப்பதை போலீசிடம் புகார் செய்த கௌசல்யாபாயும் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டார். ரோட்டில் வெடி வெடிக்கிறார்களோ என வேடிக்கை பார்க்க வீட்டில் இருந்து வெளியே ஓடி வந்த 14 சிறுவன் தலையில் குண்டடி பட்டு இறந்து போனான். போலீசின் கொலைவெறியை நிரூபிப்பதற்கு இத்தடயங்களே போதுமானது. "சுட்டுக் கொல்" என மேலிடத்தில் இருந்து வந்த உத்தரவினால்தான், போலீசார் எவ்வித முன்னெச்சரிக்கையும் செய்யாமல் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக அச்சமயத்தில் செய்திகள் பரவிக் கிடந்தன. இத்துணை சாட்சியங்கள் இருந்தும் நீதிமன்றம் இதனைக் கொலைக் குற்றமாகக் கருதவில்லையென்றால், அதனின் உள்நோக்கத்தைக் கேள்விக்குள்ளாக்கித்தான் தீர வேண்டும்.



**போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இறந்து போன தாழ்த்தப்பட்டோரின் உடல்கள் இறுதிச் சடங்கிற்கு எடுத்துச் செல்லப்படுவதைக் கண்டு கதறியழும் உறவினர்கள்.** (கோப்புப் படம்).

ரமாபாய் நகரத் தாழ்த்தப்பட்ட மக்கள் ரிசர்வ் போலீசு படையைச் சேர்ந்த துணை ஆய்வாளர் மனோகர் கதமுக்குத் தூக்கு தண்டனை விதிக்க வேண்டும் எனக் கோருகிறார்கள். இதுவொன்றும் அநியாயமான கோரிக்கையல்ல. நாடாளுமன்றத்தின் மீது தாக்குதல் நடத்தியதற்காக, அம்மோதலில் ஒன்பது-பத்து போலீசார் உயிர் இழந்ததற்காக அப்சல் குருவுக்குத் தூக்கு தண்டனை விதிக்கலாம் என்றால், மனோகர் கதமுக்கு மட்டும் விதிக்கக் கூடாதா? அந்தக் கட்டிடத்தைவிட, அந்த போலீசுக்காரர்களின் உயிரைவிட தாழ்த்தப்பட்ட மக்களின் உயிர் மலிவானதில்லையே!

ஆந்திராவைச் சேர்ந்த இரு தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் வறுமையின் காரணமாக ஒரு பேருந்தை வழிமறித்துக் கொள்ளையடிக்க முயன்றபொழுது, எதிர்பாராதவிதமாக நடந்துவிட்ட விபத்தால் அப்பேருந்தில் பயணம் செய்த சில பயணிகள் இறந்துவிட்டனர். அவ்விளைஞர்களின் அறியாமை, வறுமை ஆகிய காரணிகளையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ள மறுத்துவிட்ட நீதிமன்றம் அவ்விளைஞர்களுக்குத் தூக்கு தண்டனையை உறுதி செய்தது. ஆனால், அதிகாரத் திமிரோடும், சாதித் திமிரோடும் நடந்த இக்கொலை வழக்கிலோ மனோகர் கதமுக்கு கருணை காட்டப்பட்டிருக்கிறது. துப்பாக்கிச் சூடு நடத்தச் சொல்லி அவருக்கு உத்தரவு போட்ட மேலதிகாரிகள், இந்து மதவெறிக் கூட்டணியைச் சேர்ந்த அமைச்சர் பெருமக்கள் வழக்குக் கூண்டில் ஏறாமலேயே தப்பிவிட்டார்கள். நீதிமன்றம் இப்படி இக்குற்றவாளிகளிடம் கருணையோடு நடந்து கொண்டதற்கு மேல்சாதிப் பாசமும், வர்க்கப் பாசமுமன்றி வேறென்ன காரணமாக இருந்துவிட முடியும்?

• குப்பன்


படிப்பகம்




"முதலாளிகளின் நெருக்கடிக்கு எங்கள் உழைப்பையும் ஊதியத்தையும் நாங்கள் தரமாட்டோம்!"
— ஜி - 20 நாடுகளின் மாநாட்டுக்கு எதிராக இலண்டன் மாநகரில் நடந்த மாபெரும் ஆர்ப்பாட்டம்.

# பற்றிப் பரவுகிறது வர்க்கப் போராட்டம்! அஞ்சி நடுங்குகிறது ஆளும் வர்க்கம்!!

சென்ற ஆண்டில் அமெரிக்காவில் தொடங்கிய முதலாளித்துவத்தின் நெருக்கடி என்று மறைக்கப்படும் முதலாளித்துவத்தின் அழிவுப் பாதை, தனது தடத்தை எல்லா நாடுகளிலும், குறிப்பாக உழைக்கும் மக்கள் மீது ஏற்றி வருகிறது. இதில் வளர்ந்த நாடு, வளரும் நாடு என வேறுபாடில்லாமல் முழு உலகமே பாதிப்படைந்து வருகிறது. போரை ஒத்த அழிவினை ஏற்படுத்தும் இந்த பொருளாதாரச் சுனாமியில், முதலாளிகளைக் காப்பாற்றுவதற்கு மட்டும் மேற்குலகின் அரசாங்கங்கள் கோடி கோடியாக மக்கள் பணத்தினை இனாமாக வழங்கின.

ஆனால், இந்தப் பிரச்சினையை ஒட்டி எல்லா நாடுகளிலும் ஏராளமானோர் வேலையிழந்தும், குறைந்தபட்ச வாழ்க்கை வசதிளைக் கூடப் பெறமுடியாமலும் தவித்து வருகின்றனர். தங்களது இலாபத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் முகமாக, எல்லா நிறுவனங்களும் ஆட்குறைப்பை அதிவேகமாக செய்து வரும் வேளையில் திடீரென்று வேலையிழந்து தெருவில் நிற்கும் இம்மக்களைப் பற்றி அக்கறைப்பட எந்த அரசாங்கமும் தயாராக இல்லை. இந்த அநீதியைக் கண்டு தற்போது மேலைநாடுகளில் காட்டுத்தீயாய் மக்கள் போராட்டம் பற்றி வருகின்றது.

கலிஃபோர்னியா மாநிலத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அளிக்கும் உணவை வாங்கிச் செல்லக் காத்திருக்கும் அமெரிக்க ஏழை மக்கள்.



திவாலான ஏ.ஐ.ஜி என்ற அமெரிக்க காப்பீட்டு நிறுவனத்திற்கு அரசு அளித்த உதவிப் பணம், அந்நிறுவனத்தின் உயர் மட்ட அதிகாரிகளுக்கு போனஸ் என்ற பெயரில் வழங்கப்பட்டதை எதிர்த்து அங்கே நடந்த போராட்டத்தைக் கண்டு அஞ்சிய ஒபாமா நிர்வாகம், அந்த போனசுக்கு 90% வரி விதித்திருக்கிறது. அமெரிக்காவில் மட்டும் பல இலட்சம்பேர் வேலையிழந்தும், வீடிழந்தும் தவித்து வருகின்றனர். ஐரோப்பா போல இங்கு மக்கள் சேமநலத் திட்டங்கள், ஒதுக்கீடு எதுவுமில்லை. ஒருவர் வேலையிழந்தால் மருத்துவம், வீடு, கல்வி எதுவும் அவருக்கு கிடைக்காது.

www.padippakam.com

பிரான்சில் அதிபர் சர்கோசி இந்த பொருளாதார நெருக்கடியிலிருந்து நிதித்துறை மற்றும் ஆட்டோமொபைல் நிறுவனங்களைக் காப்பாற்ற பெரும் நிதி ஒதுக்கியிருக்கிறார். மேலும், பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார்மயப்படுத்தும் வேலையையும் கருமமாக செய்து வருகிறார். இதன் சங்கிலித் தொடர் விளைவாக பிரான்சில் வேலையிழந்தோர் விகிதம் விரைவில் பத்து சதவீதத்தை எட்டிவிடுமென்று தெரிகிறது. குறிப்பாக, இளைஞர்கள் இந்த வேலையின்மையால் பாதிக்கப்பட்டிருப்பது ஒரு சமூகக் கொந்தளிப்பாக மாறியிருக்கிறது.

கடந்த ஜனவரி, மற்றும் மார்ச் மாதங்களில் பிரான்சில் நடந்த பொது வேலை நிறுத்தத்தில் முன்னதில் பத்து இலட்சம் பேரும், பின்னதில் முப்பது இலட்சம் பேரும் கலந்து கொண்டிருக்கின்றனர். அதிபர் சர்கோசி இந்த எதிர்ப்பியக்கத்தைப் பார்த்து தனது நாடு ஆட்சி செய்வதற்கு மிகவும் சிரமமானது எனத் திருவாய் அருளியிருக்கிறார்.

பிரான்சிலும், இங்கிலாந்திலும் வேலையிழந்த சில தொழிற்சாலை தொழிலாளர்கள் தங்களது நிறுவனத் தலைவர்களை அறையில் முடக்கி முற்றுகைப் போராட்டத்தை பல மணிநேரம் நடத்தியிருக்கின்றனர். நேட்டோ அமைப்பின் அறுபதாவது ஆண்டை ஐரோப்பிய நாடுகளின் அரசுகள் கொண்டாடி வரும் வேளையில், மக்களோ தமது முதலாளித்துவ எதிர்ப்பைக் காட்டுவதற்கு அந்த தினத்தை பயன்படுத்தினர். ஜெர்மனியிலும், பிரான்சிலும் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் பல பன்னாட்டு நிறுவனங்களின் அலுவலகங்கள் அடித்து நொறுக்கப்பட்டன.

இந்தச் சூழலில்தான் உலகப் பொருளாதாரப் பிரச்சினையைத் தணிப்பதற்கு, வளர்ந்த மற்றும் வளரும் நாடுகள் பங்கேற்ற ஜி-20 கூட்டமைப்பின் சந்திப்பு இலண்டனில் நடந்தது. இந்த மாநாட்டில் பன்னாட்டு நிதி நிறுவனத்துக்கு நூறாயிரம் கோடி டாலர் பணம் ஒதுக்கி, வளரும் நாடுகளுக்கு கடன் கொடுக்க வளர்ந்த நாடுகள் சம்மதித்திருக்கின்றனவாம். மேலும், இனிமேல் இரகசியமான வங்கி முறையைக் கைவிட்டு வெளிப்படையான உலகமெங்கும் ஒரே விதிமுறைகளைக் கொண்ட வங்கி முறையை ஏற்படுத்தப் போகிறார்கள் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இவையெல்லாம் மக்களைக் காப்பாற்றுவதற்காக இல்லை, முதலாளிகள் அளவு கடந்து சூதாடக்கூடாது என கடிவாளம் இடுவதற்குத்தான். எனினும், சூதாட்ட மற்றும் குமிழ் பொருளாதார நிலைக்கு வந்து விட்ட முதலாளித்துவம் தனது கோரப் பிடியை மேலும் இறுக்க முடியுமே ஒழிய, அதிலிருந்து விடுபட முடியாது. இறுதியில், இந்தச் சுமை மக்களின் மேல் சுமத்தப்படும். அதற்குத்தான் ஐ.எம்.எப்.பின் முதலீட்டைக் கூட்டி, வளரும் நாடுகளைக் கடனின் பெயரால் அச்சுறுத்துவதற்கு முன்னேறிய நாடுகள் முடிவு செய்தன.



ஆர்ப்பாட்டக்காரர்களை மிருகத்தனமாக ஒடுக்கும் பிரிட்டிஷ் போலீசின் வெறியாட்டம்.

இலண்டனில் ஏப்ரல் இரண்டாம் தேதி நடந்த இந்த அரசாங்கங்களின் சந்திப்பை எதிர்த்து மாபெரும் மக்கள் போராட்டம் நடந்திருக்கிறது. இந்தப் போராட்டத்தைக் கடும் போலீசு அடக்குமுறை மூலம் இங்கிலாந்து அரசு ஒடுக்கப் பார்த்தது. இதில் ஒருவர் இறந்து போக, பலர் காயமுற்று, நூறுக்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். போராட்டக்காரர்களை ஒரே இடத்தில் பல மணிநேரம் முடக்கி, கண்ணீர் குண்டு, ரப்பர் தோட்டாக்களால் சுட்டு ஒடுக்கியும் போலீசு வெறியாட்டம் நடத்தியது. ஆனாலும் இந்த அடக்குமுறைக்கு அஞ்சாமல் மக்கள் ''முதலாளித்துவம் ஒழிக! சோசலிசமே மாற்று'' என கம்பீரத்துடன் முழக்கமிட்டனர்.

கூட்டமைப்பின் சந்திப்பை வெற்றிகரமாக நடத்துவதை விட, போராட்டக்காரர்களை ஒடுக்குவதற்கு இங்கிலாந்து அரசு திணறியது. இந்த போலீசு ஒடுக்கு முறையை இலண்டன் மேயர் நியாயப்படுத்தியிருக்கிறார். இதன் மூலம் முதலாளித்துவத்தின் நெருக்கடியை எதிர்த்து போராடினால், போலீசு இராச்சியம்தான் தீர்வு என்பதை மேற்கத்திய நாடுகள் அமல்படுத்தத் துவங்கலாம். முதலாளித்துவ பொருளாதாரம் சீர்குலைந்தால், அதன் ஜனநாயகமும் பாசிச அவதாரமெடுப்பதுதானே விதி!

வேலை பாதுகாப்பு, ஓய்வூதியம் உள்ளிட்ட உரிமைகளைக் கோரி, பிரான்சு நாட்டைச் சேர்ந்த கான்டினென்டல் டயர் கம்பெனி தொழிலாளர்கள் மே தினத்தன்று நடத்திய ஆர்ப்பாட்ட பேரணி.




ஆனாலும் அமெரிக்கா தொடங்கி ஐரோப்பா வரை அன்றாடம் வலுக்கும் இந்த மக்கள் போராட்டம், நிச்சயம் ஒருநாள் முதலாளித்துவத்தின் கழுத்தை நெரிப்பது உறுதி. ''பிரான்டியர்'' ஆங்கில வார ஏடுக்குக் கடிதம் எழுதிய ஒரு அமெரிக்க அஞ்சல்துறை ஊழியர், '' இரசியாவில் குறுகிய காலத்திலேயே அரசியல் விழப்புணர்வைப் பெற்ற தொழிலாளி வர்க்கத்தைப் போல, தற்போது அமெரிக்காவில் முதலாளித்துவத்தின் நெருக்கடியைப் பட்டு அனுபவித்து அரசியல் விழப்புணர்வைத் தொழிலாளி வர்க்கம் அடையத் தொடங்கியிருக்கிறது'' என குறிப்பிட்டிருக்கிறார். உண்மைதான்! கம்யூனிசம் பல காலம் போதித்து வரும் பிரச்சினையை, தற்போது முதலாளித்துவத்தின் தயவில் தொழிலாளிகளும், பிற மக்களும் வேகமாக உணரத் துவங்கியிருக்கின்றனர். இந்த உணர்தல் அரசியல் சக்தியாக உருப்பெற்று, குறிப்பான இலக்குடன் போராடும் போது, நிச்சயமாக மேலை நாடுகளின் அரசாங்கங்கள் அமைதியாகக் காலம் கழிக்க முடியாது.

● சுப்பு



படிப்பகம்

www.padippakam.com

## நேபாள ஆட்சிக் கவிழ்ப்பு:

# இந்திய மேலாதிக்கச் சதி ஓட்டுக் கட்சிகளின் துரோகம்

**நேபாள புரட்சியை சீர்குலைக்கும் சதிகளை, மக்கள் போராட்டங்களின் மூலம் மாவோயிஸ்டுகள் முறியடிப்பார்கள்!**

அண்டை நாடான நேபாளத்தில் இடைக்கால அரசின் பிரதமரான தோழர் பிரசண்டா கடந்த மே 4-ஆம் தேதியன்று பதவி விலகியதையடுத்து, அந்நாட்டில் கொந்தளிப்பான அரசியல் போராட்டங்கள் தொடர்கின்றன. மன்னராட்சி ஒழிக்கப்பட்டு அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல் முடிந்து, ஜனநாயகக் குடியரசை நிறுவுவதற்கான பாதையில் அந்நாடு அமைதியாகப் பயணித்துக் கொண்டிருப்பதாக நிலவும் கருத்தைத் தகர்த்து, அந்நாடு மீண்டும் அரசியல் போராட்டங்களால் குலுங்குகிறது. இந்தியாவின் மேலாதிக்கச் சதிகளுக்கும் இந்தியக் கைக்கூலி அரசியல் சக்திகளுக்கும் எதிராக, ''அந்நிய எஜமானர்களிடம் சரணடையாதே! நாட்டு விரோத சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் கைக்கூலி இராணுவத் தளபதியைப் பதவி நீக்கம் செய்! சதிகார அதிபர் ஒழிக!'' என்ற முழக்கங்களுடன் வீதியெங்கும் மக்கள் நடத்தி வரும் ஆர்ப்பாட்டங்களாலும் சாலை மறியல் போராட்டங்களாலும் அந்நாடு அதிர்கிறது.

நேபாள மன்னராட்சிக் கொடுங்கோன்மைக்கு எதிராக மாவோயிஸ்டுகள் பத்தாண்டு காலத்திற்கும் மேலாக நடத்திய ஆயுதப் போராட்டத்தின் விளைவாக, 2006-ஆம் ஆண்டில் மன்னராட்சிக்கு எதிராக மாபெரும் எழுச்சியில் மக்கள் இறங்கினர். ''மன்னராட்சி ஒழிக்கப்பட வேண்டும்; அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல் நடத்தி புதிய அரசியலமைப்புச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, அதனடிப்படையில் நேபாள ஜனநாயகக் குடியரசு நிறுவப்பட வேண்டும்'' என்ற மாவோயிஸ்டுகளின் கோரிக்கையை இம்மக்கள் எழுச்சி எதிரொலித்தது.

இதைத் தொடர்ந்து அன்றைய நாடாளுமன்றத்தின் ஏழு அரசியல் கட்சிகள், விரைவில் அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல் நடத்த உறுதியளித்து மாவோயிஸ்டுகளுடன் இணைந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. அதைத் தொடர்ந்து ஐ.நா. மன்றத்தின் மூலம் இந்தியாவின் மேற்பார்வையில் சமாதான ஒப்பந்தம் கையெழுத்தாகியது. மாவோயிஸ்டுகள் அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலில் பங்கேற்று, இதர கட்சிகளை விட அதிக இடங்களில் வெற்றி பெற்று புதிய இடைக்கால அரசை கடந்த ஆண்டு ஏப்ரலில் நிறுவினர்.

2006-ஆம் ஆண்டில் போடப்பட்ட ஒப்பந்தப்படி, மாவோயிஸ்டுகளின் மக்கள் விடுதலைப்படை (PLA) எவ்விதத் தாக்குதலிலும் ஈடுபடாமல் ஐ.நா. மன்றத்தின் மேற்பார்வையில் பாசறையில் இருக்க வேண்டும்; ஏறத்தாழ 23,000 பேர் கொண்ட இச்செம்படை, படிப்படியாக நேபாள இராணுவத்தில் இணைக்கப்பட்டு, புதிய நேபாள குடியரசுப் படையாக மாற்றியமைக்கப்படவும் வேண்டும். ஏற்கெனவே மன்னராட்சியின் கீழிருந்த ராயல் நேபாள் ஆர்மி என்றழைக்கப்படும் படையும் செம்படையும் இணைந்த புதிய படையே புதிய நேபாளக் குடியரசின் தேசிய இராணுவப் படையாகத் திகழும். மக்கள் எழுச்சி ஓங்கியிருந்த நிலையில், அன்று நாடாளுமன்றத்தின் ஏழு அரசியல் கட்சிகளின் கூட்டணியும் இந்த ஒப்பந்தத்தை ஆதரித்தன.

இந்த ஒப்பந்தப்படி மாவோயிஸ்டுகளின் மக்கள் விடுதலைப் படை ஐ.நா. மன்ற மேற்பார்வையில் பாசறைகளில் இருத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒப்பந்தப்படி, மக்கள் விடுதலைப்படை நேபாள இராணுவத்துடன் இணைப்பது மட்டும் இன்னும் நிறைவேறவில்லை. இதற்குப் பெருந்தடையாக இருப்பவர், தற்போதைய இடைக்கால அரசின் பொறுப்பிலுள்ள முன்னாள் மன்னராட்சிப் படையின் தலைமைத் தளபதியான ருக்மாங்கத் கடுவால்.

மக்கள் விடுதலைப் படையினரின் ஒரு பிரிவை இராணுவத்தில் இணைக்குமாறு மாவோயிஸ்டுகளின் தலைமையிலான இடைக்கால அரசு உத்தரவிட்ட போதிலும், இன்றுவரை அவர் அதை நிறைவேற்றவில்லை. போர்க் கலையில் முறைப்படி தேர்ச்சி பெற்றுள்ள மக்கள் விடுதலைப் படையின் 4000 கொரில்லாப் போராளிகளை மட்டும் இராணுவத்தில் இணைக்குமாறும், எஞ்சியோரை துணை இராணுவ-போலீசு படைகளில்

**''இந்தியாவின் மேலாதிக்கத்துக்கு அடிபணிய மாட்டோம்!'' - நேபாள மாவோயிஸ்டு கட்சித் தலைவரும், பதவி விலகிய முன்னாள் பிரதமருமான தோழர் பிரசண்டா.**





படிப்பகம்

www.padippakam.com

இணைக்குமாறும் நேபாள பிரதமர் தோழர் பிரசண்டா கடந்த ஆண்டில் நடந்த ஐ.நா. மன்றக் கூட்டத்திலேயே வலியுறுத்தியுள்ளார். ஆனாலும் ஐ.நா. மன்றம் சமாதான ஒப்பந்தப்படி குறைந்தபட்ச நடவடிக்கையைக் கூட மேற்கொள்ளவில்லை.

கடந்த ஆண்டு டிசம்பரில் தலைமைத் தளபதி ருங்மாங்கத் கடுவால், 2800 பேரை புதிதாக இராணுவப் படையில் தன்னிச்சையாகச் சேர்த்தார். அமைச்சரவையின் உத்தரவோ ஒப்புதலோ இல்லாமல் இப்படி இராணுவத்துக்கு ஆளெடுத்துச் சேர்த்துக் கொள்வது சட்டப்படி குற்றம் என்று சுட்டிக் காட்டி, மாவோயிஸ்டுகளின் இடைக்கால அரசு விளக்கம் கோரியது. அதற்கு தலைமைத் தளபதி இன்றுவரை எந்த விளக்கமும் அளிக்கவில்லை.

இதுதவிர, இவ்வாண்டின் தொடக்கத்தில் பணி ஓய்வு பெறும் பிரிகேடியர் ஜெனரல் பதவி வகித்த 8 இராணுவ அதிகாரிகளுக்கு தன்னிச்சையாக பணி நீட்டிப்பைச் செய்தார். இவ்வாறு செய்வது சட்டவிரோதமானது என்று மாவோயிஸ்டுகள் பிறப்பித்த உத்தரவை அவர் உதாசீனம் செய்துள்ளார். மேலும், நேபாளத்திலுள்ள இதர நாடுகளின் இராணுவ - தூதரகங்களுக்கு, மாவோயிஸ்டுகள் தமது இராணுவ பலத்தைக் கொண்டு சர்வாதிகார ஆட்சியை நிறுவ சதிகளில் ஈடுபட்டு வருவதாக அவதூறு செய்து பீதியூட்டி இத்தளபதி இரகசிய கடிதத்தையும் அனுப்பியுள்ளார்.

நேபாள இராணுவத் தளபதி, மாவோயிஸ்டுகளின் அரசுக்குக் கட்டுப்பட்டவரா? அல்லது அரசுக்கு மேலானவரா? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு அதிகாரம் உள்ளதா; அல்லது இராணுவத் தளபதிக்கு அதிகாரம் உள்ளதா? அல்லது இரட்டை அதிகாரம் நீடிக்க வேண்டும் என்று மக்கள் தீர்ப்பளித்துள்ளார்களா? - இந்தக் கேள்விகளை நாட்டின் முன்வைத்த மாவோயிஸ்டுகளின் இடைக்கால அரசு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்குக் கட்டுப்பட மறுத்துச் சட்டவிரோதமாகவும் தன்னிச்சையாகவும் செயல்படும் தலைமைத் தளபதி ருங்மாங்கத் கடுவாலை பதவி நீக்கம் செய்து உத்தரவிட்டது.

•••

ராயல் நேபாள் ஆர்மி என்றழைக்கப்பட்ட மன்னராட்சிப் படையின் தலைமைத் தளபதியான ருங்மாங்கத் கடுவால், முன்னாள் மன்னர் மகேந்திராவின் (மக்கள் எழுச்சியில் தூக்கியெறியப்பட்ட மன்னர் ஞானேந்திராவின் தந்தை) வளர்ப்பு மகன். இந்தியாவின் நேஷனல் டிபன்ஸ் அகாடமி, இந்தியன் மிலிடெரி அகாடமி ஆகியவற்றில் போர்க்கலை பயிற்சி பெற்றவர். இந்தியாவின் நம்பகமான விசுவாசி. மன்னராட்சியின் விசுவாசமான அடியாள். ''ஆரவாரக் கூச்சல் மிக்க ஜனநாயகத்தை விட அறிவார்ந்த மன்னராட்சி முறையே மேலானது'' என்று 2002-இல் மன்னர் ஞானேந்திரா, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றத்தைக் கலைத்த போது, அதை நியாயப்படுத்தி வாதிட்டவர். மன்னராட்சிக்கு எதிரான மக்கள் போராட்டங்களையும், 2006-இல் நடந்த மாபெரும் மக்கள் எழுச்சியையும் கொடூரமாக ஒடுக்கிய போர்க் குற்றவாளி, மன்னராட்சி வீழ்த்தப்பட்ட பிறகு நிறுவப்பட்ட ரேமஜ்கி கமிசன், இவர் மீதும் இவர் தலைமையிலான இராணுவப் படையின் மீதும் போர்க் குற்றங்கள் - அட்டூழியங்களுக்கு எதிராக விசாரணையும் நடத்தி வருகிறது.



**மன்னராட்சியின் எடுபிடி; இந்திய மேலாதிக்கவாதிகளின் கைக்கூலி: நேபாள இராணுவத் தலைமைத் தளபதி ருக்மாங்கத் கடுவால்.**

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட குடியாட்சிக்குக் கட்டுப்பட மறுத்து, குடியாட்சிக்கு மேலான அதிகாரமாகத் தன்னைக் கருதிக் கொண்டு சட்டவிரோதமாகவும் தன்னிச்சையாகவும் ருங்மாங்கத் கடுவால் செயல்படுவதற்குக் காரணமே, இந்தியாவின் ஆதரவுதான். இந்தியா திரைமறைவில் இருந்து கொண்டு கொடுக்கும் தைரியத்தில்தான் அவர் இப்படி ஆட்டம் போடுகிறார்.

பிரதமர் பிரசண்டா, தலைமைத் தளபதி சட்டவிரோதமாகச் செயல்படுவதைச் சுட்டிக்காட்டி விளக்கம் கோரும் நோட்டீசு அனுப்பியபோது, அவ்வாறு செய்யக்கூடாது என்று இந்தியா, நேபாள மாவோயிஸ்டு அரசுக்கு எச்சரிக்கை விடுத்தது. மறுபுறம், மாவோயிஸ்டுகளைத் தனிமைப்படுத்தி முடக்கும் நோக்கத்துடன் நேபாளத்துக்கான இந்தியத் தூதர் நேபாள அரசியல் கட்சிகளிடம் திரைமறைவு பேரங்களை நடத்தி வந்தார். இவற்றின் வெளிப்பாடாக, தலைமைத் தளபதியைப் பதவி நீக்கம் செய்து பிரதமர் பிரசண்டா பிறப்பித்த உத்தரவை நேபாள இடைக்கால அரசின் அதிபரான ராம்பரன் யாதவ் ரத்து செய்து, தலைமைத் தளபதி தொடர்ந்து பதவியில் நீடிக்குமாறு உத்தரவிட்டார். இதன் மூலம் நேபாளத்தில் ஓர் ஆட்சிக் கவிழ்ப்பை அவர் அரங்கேற்றி, இடைக்கால அரசுக்கும் அரசியல் நிர்ணய சபையின் செயல்பாடுகளுக்கும் பெரும் முட்டுக் கட்டை போட்டுள்ளார்.

இடைக்கால அரசில் மாவோயிஸ்டுகளுக்கு அடுத்த இரண்டாவது பெரிய கட்சி என்ற முறையில் யு.எம்.எல். எனப்படும் போலி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரான ராம்பரன் யாதவ் அதிபராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். சட்டப்படி, பிரதமரின் உத்தரவை ரத்து செய்யும் அதிகாரம் அதிபருக்குக் கிடையாது. நாடாளு

**ஆட்சிக் கவிழ்ப்பை அரங்கேற்றிய சதிகார அதிபர் ராம்பரன் யாதவை முடமான பொம்மை அதிபராகச் சித்தரித்து, மாவோயிஸ்டு கட்சியின் இளைஞர் கழகத்தினர் நடத்தும் காட்சி விளக்க ஊர்வலம்.**





படிப்பகம்

www.padippakam.com

மன்றத்துக்கு மட்டுமே உள்ளது. பிரதமரின் உத்தரவின் மீது அதிபருக்கு உடன்பாடு இல்லாதபட்சத்தில் தனது மாற்றுக் கருத்தைக் குறிப்பிட்டு, நாடாளுமன்றத்தில் விவாதிக்கக் கோரி உத்தரவிடும் அதிகாரம் மட்டுமே அவருக்கு உள்ளது. இருப்பினும், சட்டவிரோதமான வழியில் அவர் பிரதமரின் உத்தரவை ரத்து செய்து, தலைமைத் தளபதியைப் பதவியில் நீடிக்க உத்தரவிட்டுள்ளார். தலைமைத் தளபதியைப் பதவி நீக்கம் செய்து பிரதமர் பிரசண்டா உத்தரவிட்ட உடனேயே, நேபாள நாடாளுமன்றக் கட்சிகள் பிரசண்டாவுக்கு எதிராக தலைநகர் காத்மண்டுவில் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தத் தொடங்கின.

சதிவேலைகள் வேகமான நடந்தன. மக்கள் எழுச்சியில் தூக்கியெறியப்பட்ட முன்னாள் மன்னன் ஞானேந்திரா, டெல்லிக்கு பறந்து வந்து சோனியாவைச் சந்தித்தார். திரைமறைவில் ஓர் ஆட்சிக் கவிழ்ப்பு அரங்கேறிக் கொண்டிருந்தது. இடைக்கால அரசின் நாடாளுமன்றப் பிற்போக்குக் கட்சிகள் நேபாள இராணுவத்துடன் கூட்டுச் சேர்ந்து இந்தியாவின் ஆசியுடனும் ஆதரவுடனும் ஆட்சிக் கவிழ்ப்புக்கான சதியில் ஈடுபடுவதைக் கண்ட மாவோயிஸ்டுகள், தமது அமைச்சரவை பதவி விலகுவதாக அறிவித்தனர். இருப்பினும் நாடாளுமன்றத்தில் தமது கட்சி ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாகச் செயல்படும் என்றும், அரசியல் நிர்ணய சபையின் பணிகளுக்குத் தடையாக இருக்காது என்றும் இந்தியாவின் மேலாதிக்க நோக்கங்களையும் ஆட்சிக் கவிழ்ப்பு சதிகளையும் நாட்டு மக்களுக்குப் பகிரங்கமாக தோழர் பிரசண்டா அறிவித்தார். நேபாளத்தின் மக்களாட்சியை கருவிலேயே கொல்வதற்கு இந்தியா சதி செய்கிறது என்று மாவோயிஸ்டுகள் வெளிப்படையாகக் குற்றம் சாட்டுகின்றனர்.

மாவோயிஸ்டுகளுக்கும் மக்களாட்சிக்கும் எதிராக இந்தியா நீண்ட காலமாகவே சதிகளில் ஈடுபட்டு வருகிறது. 2006-ஆம் ஆண்டில் மன்னராட்சிக் கொடுங்கோன்மைக்கு எதிராக நடந்த மக்கள் பேரெழுச்சியின் பலன்களை அம்மக்கள் அனுபவிக்க விடாமல் தடுப்பதில் அமெரிக்காவும் இந்தியாவும் மும்முரமாக இருந்தன. மாவோயிஸ்டுகளைப் பயங்கரவாதிகளாகச் சித்தரித்து, அமெரிக்கா வெளிப்படையாகவே மன்னராட்சியை ஆதரித்து நின்று ஆயுத உதவிகளைச் செய்தது. மன்னராட்சியுடன் கூடி நாடாளுமன்ற ஜனநாயகம் எனும் ''இரட்டைத் தூண்'' கொள்கையுடன் இந்தியா மன்னராட்சியை முட்டுக் கொடுத்து ஆதரித்தது. உலகின் ஒரே இந்து நாடு என்று கூறிக் கொண்டு இந்து வெறி ஆர்.எஸ்.எஸ். பயங்கரவாதப் பரிவாரங்கள் மன்னராட்சியை ஆதரித்து நின்றன. மாவோயிஸ்டுகளைப் பயங்கரவாதக் கும்பலாகக் காட்டி மன்னராட்சியுடன் சீனா கூடிக் குலாவியது.

**இந்தியா திணித்த பொம்மையாட்சியின் புதிய பிரதமர் மாதவ குமார் நேபாள்.**



நேபாள ஓட்டுக் கட்சிகள் இப்பிற்போக்குச் சக்திகளுடன் சமரசமாக நடந்து கொண்டு மன்னராட்சிக்கு எதிரான மக்கள் போராட்டத்தைச் சீர்குலைக்க முயற்சித்தன. இவையனைத்தையும் எதிர்கொண்டு முறியடித்து, மக்கள் எழுச்சிக்குத் தலைமை தாங்கி நேபாளத்தின் தீர்மானகரமான அரசியல் சக்தியாக மாவோயிஸ்டுகள் உயர்ந்து நின்றனர். அதன்பிறகு, அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலின் போது அதைச் சீர்குலைக்க நேபாளத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள மாதேசி பிரிவினருக்கு இரகசிய ஆயுத உதவிகள் செய்து இந்தியா தாக்குதல்களை நடத்தியது. நேபாளத்தில் மாவோயிஸ்டுகள் தலைமையில் இடைக்கால அரசு நிறுவப்பட்ட பின்னரும், பசுபதிநாதர் கோயில் தலைமைப் பூசாரி நியமனம் உள்ளிட்டு இந்தியாவின் சீர்குலைவு சதி வேலைகள் குறையவில்லை.



**சதிகார அதிபருடன் இந்தியக் கைக்கூலி இராணுவத் தளபதி: நேபாளத் துரோகிகள்!**

''பாசறைகளில் இருத்தி வைக்கப்பட்டுள்ள மக்கள் விடுதலைப் படையை நேபாள இராணுவத்தில் இணைப்பதன் மூலம், இராணுவத்தைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தி, தமது ஏகபோக சர்வாதிகாரத்தை நிலைநாட்ட மாவோயிஸ்டுகள் முயற்சிக்கிறார்கள். நேபாளத்தைத் தளமாகக் கொண்டு இந்திய மாவோயிஸ்டுகளுக்கு ஆயுதப் பயிற்சியும் உதவியும் செய்து இந்தியாவின் ஒருமைப்பாட்டைச் சீர்குலைக்க சதி செய்கிறார்கள். சீனாவுடன் கூட்டுச் சேர்ந்து இந்தியாவை முற்றுகையிட்டுச் சிதைக்கத் துடிக்கிறார்கள்'' என்று 'தேசிய' பத்திரிகைகள் வாயிலாக இந்திய அரசு அவதூறு செய்து பீதியூட்டி வருகிறது. இந்துவெறி பா.ஜ.க.வினர் இந்தக் கருத்துக்களை தமது பத்திரிகைகளில் வெளிப்படையாகவே எழுதி வருகின்றனர்.

இவையெல்லாம் இட்டுக்கட்டப்பட்ட அவதூறுகள் என்பதை தோழர் பிரசண்டா ''இந்து'' நாளேட்டுக்கு அளித்துள்ள பேட்டியே மெய்ப்பித்துக் காட்டுகிறது. மாவோயிஸ்டு போராளிகள் நேபாள இராணுவத்தில் இணைக்கப்பட்டாலும், சட்டப்படி அந்த இராணுவம் குடியாட்சிக்கும் நாடாளுமன்றத்துக்கும் கட்டுப்பட்டுத்தான் செயல்படுமே தவிர, ஒரு கட்சிக்கு ஆதரவாகச் செயல்பட முடியாது என்பதையும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

•••

**சீ**ன முதலாளித்துவ அரசு நேற்றுவரை நேபாள மன்னராட்சியுடன் கூடிக் குலாவி மாவோயிஸ்டுகளை பயங்கரவாதிகளாகச் சித்தரித்து வந்தது. இந்திய மேலாதிக்கத்தை அங்கீகரித்து வந்த அன்றைய நேபாள மன்னராட்சி, சீனாவுடனும் ஒப்பந்தம் போட்டுள்ளது. இன்று மாவோயிஸ்டுகள் தலைமையில் ஆட்சி அமைந்த பின்னர், இந்த ஆட்சியையும் அங்கீகரித்து சீன அரசு நட்புறவு ஒப்பந்தம் போடுகிறது. அன்றைய மன்னராட்சி, சீனாவுடன் ஒப்பந்தம் போட்டது பிரச்சினை இல்லை; மாவோயிஸ்டு அரசு ஒப்பந்தம் போடுவதுதான் அபாயம் என்கிறது இந்தியா. இந்த ஒப்பந்தம், நாட்டுக்கும் மக்களுக்கும் நன்கு தெரிந்த வர்த்தக-நட்புறவு ஒப்பந்தம்தானே தவிர, அதிலே இரகசியங்களோ, திரைமறைவுச் சதிகளோ எதுவுமில்லை.


படிப்பகம்

www.padippakam.com

ஆசிய கண்டத்தில் வளர்ந்து.வரும் வல்லரசாக உருப்பெற்றுள்ள சீன முதலாளித்துவ அரசு, தனது சந்தைக்காக தெற்கு - தென்கிழக்காசிய நாடுகளின் பிற்போக்கு - பாசிச ஆட்சிகளை வெட்கமின்றி ஆதரித்து நிற்கிறது. குறிப்பாக, ஏகாதிபத்திய உலகப் பொருளாதாரச் சரிவுக்குப் பின்னர், தெற்காசிய சந்தையைக் கைப்பற்ற இந்தியாவுடன் அது மூர்க்கமான போட்டாபோட்டியில் இறங்கியுள்ளது.

ஈழத் தமிழர்களைக் கொன்றொழிக்க அதிநவீன ஆயுதங்களை சிங்கள இனவெறி பாசிச ராஜபக்சே அரசுக்கு சீனா வழங்கியுள்ள போதிலும், அதை அங்கீகரிக்கும் இந்தியா, நேபாள மாவோயிஸ்டு அரசு அண்டை நாடான சீனாவுடன் நட்புறவு ஒப்பந்தம் போடுவதை அபாயமாகச் சித்தரிக்கிறது. இலங்கை அரசைப் போல இந்திய மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டு, சீனாவுடன் ஒப்பந்தம் போட்டுக் கொண்டு ஆயுதங்களை வாங்கிக் குவித்து ஈழத் தமிழர்களைக் கொன்றொழித்தால் பிரச்சினை இல்லை; அதற்கு மாறாக இந்திய மேலாதிக்கத்தை ஏற்க மறுத்து சுயேட்சையாக சீனாவுடன் நேபாள அரசு ஒப்பந்தம் போட்டால், அது இந்தியாவுக்கு ஆபத்து என்பதுதான் இந்திய மேலாதிக்கவாதிகளின் அறிவிக்கப்படாத கொள்கை.

அணுஆயுத பலமும், பெரும் இராணுவ பலமும் கொண்ட இந்தியா மற்றும் சீனாவுக்கு இடையேயுள்ள சிறிய நாடுதான் நேபாளம். எனினும் நேபாள மாவோயிஸ்டுகள் இந்திய மேலாதிக்கத்தையோ அல்லது சீன மேலாதிக்கத்தையோ ஏற்றுக் கொண்டு நாட்டையும் மக்களையும் அடிமைப்படுத்தத் தயாராக இல்லை. எனவேதான், இந்தியாவின் மேலாதிக்கத்தைத் திணிக்கும் ஏற்கெனவே உள்ள இந்திய - நேபாள ஒப்பந்தத்தை ரத்து செய்து விட்டு, புதிய ஒப்பந்தத்தை - நேபாளத்தின் சுதந்திரத்தையும் இறையாண்மையையும் நிலைநாட்டும் ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டுமென்றும் மாவோயிஸ்டுகள் கோருகிறார்கள்.




''நேபாள புரட்சியை அழிக்கும் இந்திய மேலாதிக்க அரசின் சதியை முறியடிப்போம்!''- மாவோயிஸ்டுகளின் தலைமையில் மக்களின் ஆர்ப்பாட்டப் பேரணி.

தனது மேலாதிக்க நோக்கங்கள் ஈடேறாமல் தொடர்ந்து அம்பலப்படுவதால் கீழ்த்தரமான சதிகளில் இறங்கிய இந்திய அரசு, தலைமைத் தளபதி விவகாரத்தை வைத்து ஓர் ஆட்சிக் கவிழ்ப்பை நேபாளத்தில் அரங்கேற்றியிருக்கிறது. மன்னராட்சிக்கு எதிரான மக்கள் எழுச்சி உச்சத்தில் இருந்தபோது, மாவோயிஸ்டுகளுடன் ஓடோடி வந்து கூட்டணி கட்டிக் கொண்ட நேபாள அரசியல் கட்சிகள் இன்று பதவி சுகத்துக்காக இந்திய மேலாதிக்கச் சதிகளுக்குத் துணை நின்று துரோகமிழைக்கின்றன. மாவோயிஸ்டுகள் பதவி விலகிய பிறகு, கூட்டுச் சேர்ந்து ஆட்சியமைக்கக் கூட அக்கட்சிகளுக்கு அருகதையில்லை. ஏறத்தாழ இரண்டு வாரங்களாக இக்கட்சிகளுக்கிடையே பதவிக்கான நாய்ச்சண்டைகள் நடந்து, நீண்ட இழுபறி - சமரசங்களுக்குப் பிறகுதான் யு.எம்.எல் என்ற போலி கம்யூனிஸ்ட் கட்சியின் மற்றொரு தலைவரான மாதவ குமார் நேபாள் பிரதமராக்கப்பட்டுள்ளார்.

இத்தகைய துரோகங்களும் சதிகளும் மாவோயிஸ்டுகள் எதிர்பாராததல்ல. இப்படியெல்லாம் நடக்கக் கூடும் என்று தெரிந்துதான் அவர்கள் அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலில் பங்கேற்று, அதிக இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியையும் அமைத்தார்கள். ஒரு புறம், மேலிருந்து அதிகாரம் செலுத்துவது என்ற செயலுத்தியைப் பின்பற்றிய அதேசமயம், கீழிருந்து அரசியல் போராட்டங்களைக் கட்டியமைக்கும் நடைமுறையையும் அவர்கள் மேற்கொண்டார்கள். இதனால்தான் மேலிருந்து அதிகாரம் செலுத்துவதற்கான வாய்ப்புகள் குறுகிவிட்ட நிலையில், கீழிருந்து மக்களைத் திரட்டி வெகுவிரைவாக அரசியல் போராட்டங்களை அவர்களால் கட்டியமைக்க முடிகிறது.

இந்தியாவின் மேலாதிக்கம், ஈழத் தமிழர்களின் மீதான சிங்கள இனவெறி பாசிசப் போரில் மட்டுமின்றி, வடக்கிலுள்ள அண்டை நாடான நேபாளத்திலும் விரிவடையத் துடிக்கிறது. கிழக்கே வங்கதேசம் தொடங்கி, மேற்கே ஆப்கானிஸ்தான் வரை அதன் மேலாதிக்கக் கொடுங்கரங்கள் நீள்கின்றன. அன்றைய ஜாரிஸ்டு ரஷ்யா எவ்வாறு உலகின் பிற்போக்கின் கோட்டையாக இருந்து, புரட்சிகர - ஜனநாயக சக்திகளை ஒடுக்கியதோ, அதைப் போலவே இன்றைய இந்தியா திகழ்கிறது. அன்றைய ஜார் ஆட்சியை, தோழர் லெனின் தலைமையில் கம்யூனிஸ்டுகளும் புரட்சிகர - ஜனநாயக சக்திகளும் எவ்வாறு புரட்சியில் இறங்கி வீழ்த்தினார்களோ, அதைப் போலவே இந்திய மேலாதிக்கத்தை வீழ்த்த கம்யூனிசப் புரட்சியாளர்களும் புரட்சிகர ஜனநாயக சக்திகளும் ஓரணியில் திரண்டெழுந்து போராடுவதைத் தவிர இனி வேறு வழியில்லை.

• பாலன்



படிப்பகம்

www.padippakam.com

# கூலித் தொழிலாளர்களைக் கொன்றது

# சுடு நெருப்பா? இலாப வெறியா?

நாமக்கல் நகருக்கு அருகே இயங்கி வரும் வைகை எம்.பி.ஆர். அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் (பி) லிமிடெட் என்ற ஆலையில் கடந்த 06.05.2009 அன்று இரவு நடந்த தீ விபத்து 17 தொழிலாளர்களின் உயிரைக் காவுவாங்கிவிட்டது. இந்த ஆலை தவிட்டில் இருந்து எண்ணெய் எடுக்கும் ஆலையாகும். தவிட்டு மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த கிடங்கில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கிக் கொண்ட தொழிலாளர்களுள் 9 பேர் தப்பி வர வழியில்லாமல் தீக்குள்ளேயே சிக்கி எரிந்து கரிக்கட்டையாகிப் போனார்கள். தீக்காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட தொழிலாளர்களுள் 8 பேர் சிகிச்சைப் பலன் அளிக்காமல் ஒருவர் பின் ஒருவராக அடுத்தடுத்து இறந்து போனார்கள். அநியாயமாக இறந்து போன இத்தொழிலாளர்களுள் சண்முகம் என்பவர் மட்டும் தான் நாமக்கல்லுக்கு அருகிலுள்ள வளையப்பட்டியைச் சேர்ந்தவர். மீதமுள்ள அனைவரும் பீகார் மாநிலத்தில் இருந்து பிழைப்பு தேடித் தமிழகத்திற்கு வந்த அயல் மாநிலத் தொழிலாளர்கள்.

இவ்வாலையில் கண்காணிப்பாளராக வேலை பார்த்து வந்த சண்முகத்திற்கு ஒன்பது வயதில் மகள் இருப்பதோடு, அவரது மனைவி வளர்மதி தற்பொழுது கருவுற்றிருக்கிறார். இறந்து போன பீகார் தொழிலாளர்கள் அனைவரும் அவ்வாலையில் தவிட்டு மூட்டைகளை ஏற்றி இறக்கும் சுமைக்கூலித் தொழிலாளர்களாக வேலை பார்த்து வந்தனர். அத்தொழிலாளர்களுள் ஒருவரின் வயது 17தான் இருக்கக்கூடும் எனக் கூறப்படுகிறது; மற்ற அனைவரும் 20 முதல் 25 வயதிற்குட்பட்ட இளம் தொழிலாளர்கள்.

தீ விபத்திற்கு என்ன காரணம்? தீ பிடித்த பின் கிடங்கிற்குள் இருந்த தொழிலாளர்களால் ஏன் தப்பித்து வெளியே வர முடியவில்லை? இக்கேள்விகளுக்கு, "கொதிகலனைக் குளிர்விக்கும் சாதனம் பழுதடைந்து சில மாதங்கள் ஆகிவிட்டது; ஆலையில் தீயணைப்புச் சாதனங்கள் போதுமளவிற்கு இல்லை; ஆபத்துக்கான அவசர வழியில் தவிட்டு மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டு, அவ்வழி தடுக்கப்பட்டிருந்தது; தவிட்டு மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் இரண்டு கிடங்குகளிலும் போதிய காற்றோட்ட வசதிக்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை" என போலீசும், தீயணைப்புத் துறை அதிகாரிகளும் காரணங்களைக் 'கண்டுபிடித்து' அடுக்கி வருகின்றனர்.

எளிதில் தீப்பற்றக்கூடிய தவிடைப் பயன்படுத்தும் இவ்வாலையில் தீ விபத்து ஏற்படாமல் தடுப்பதற்கு, திடீரென விபத்து நடந்துவிட்டால் சேதம் அதிகமின்றித் தப்பித்துக் கொள்வதற்கு என்னென்ன பாதுகாப்பு ஏற்பாடுகள் இருக்க வேண்டுமோ, அவை எதுவுமேயின்றி இவ்வாலை இயங்கி வந்திருப்பதைத்தான் அதிகாரிகள் ஒப்புதல் வாக்குமூலமாகத் தந்திருக்கிறார்கள். ஆலை முதலாளிகளின் இலாபவெறியும், அம்முதலாளியிடம் கையூட்டு வாங்கி வந்த அதிகாரிகளின் அலட்சியமும்தான் 17 தொழிலாளர்களின் உயிர் பறிபோனதற்குக் காரணம். எனவே, இதனை அப்பட்டமான கொலைக்குற்றமாகக் கருத இடமிருக்கிறது.

ஆனால், போலீசோ இந்தச் சாவுகளைக் கொலைக் குற்றமாகப் பதிவு செய்யவில்லை. கவனக் குறைவால் நேர்ந்துவிட்ட விபத்தாகவும், அதனால் நேர்ந்துவிட்ட மனிதச் சாவாகவும் வழக்குப் பதிவு செய்திருக்கிறது, போலீசு. எவ்விதப் பாதுகாப்பு ஏற்பாடுகளும் இன்றி இவ்வாலை இயங்கி வந்ததை வேடிக்கை பார்த்து வந்த அதிகாரிகளுள் ஒருவரின் பெயர்கூட போலீசின்



**தவிட்டு எண்ணெய் ஆலை முதலாளியின் இலாபவெறிக்குப் பலியான பீகார் தொழிலாளர்களின் சடலங்கள், இறுதிச் சடங்கிற்கு எடுத்துச் செல்லப்படும் அவலக் காட்சி.**

முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. அவ்வறிக்கையில் ஆலையின் முதலாளி மணியின் பெயர் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. அவரையும் இதுநாள் வரை கைது செய்ய முடியாமல் போலீசு தேடிக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. அம்முதலாளியோ, 'தலைமறைவாக' இருந்து கொண்டு போலீசார் தன்னைக் கைது செய்யக்கூடாது எனக் கோரி, முன் ஜாமீன் கேட்டு நீதிமன்றத்தில் மனு போட்டிருக்கிறார்.

இவ்வாலையில் தவிட்டு மூட்டைகளை ஏற்றி இறக்கும் வேலையில் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த தொழிலாளர்களும்,



படிப்பகம்

www.padippakam.com



இறந்து போன தொழிலாளர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கக் கோரி, மனித உரிமைப் பாதுகாப்பு மையம் நாமக்கல்லில் நடத்திய ஆர்ப்பாட்டத்தில், அத்தீ'விபத்தில்' பலியான தனது கணவர் சண்முகத்தின் மரணத்திற்கு நீதி கேட்டுக் கதறும் அவரது மனைவி வளர்மதி.

நாமக்கல்லுக்கு அருகிலுள்ள எம்.மேட்டுப்பட்டியிலுள்ள அகதி முகாமைச் சேர்ந்த ஈழத் தமிழர்களும் மட்டுமே ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவ்வேலையைச் செய்யும் தொழிலாளர்களின் பெயர், முகவரி; அவர்கள் வேலை செய்யும் 'ஷிப்டு' விபரம்; அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் உள்ளிட்ட எந்தப் பதிவும் இல்லாமல் இத்தொழிலாளர்களைக் கசக்கிப் பிழிந்து வந்திருக்கிறது, நிர்வாகம். இதனால், தீயில் எரிந்து கருகிப் போன தொழிலாளர்களை அடையாளம் காணவும், இறந்து போன மற்றும் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த தொழிலாளர்களின் உறவினர்களுக்குத் தகவல் கொடுக்கவும் முடியாமல் அரசாங்கம் திணறிப் போய்விட்டது.

ஊரு விட்டு ஊரு வந்து இறந்து போன பீகார் தொழிலாளர்களுக்காகத் தமிழகத்தில் யாரும் குரல் கொடுக்க மாட்டார்கள் என்ற மிதப்பில் ஆலை நிர்வாகம் பீகாரிலிருந்து வந்த அத்தொழிலாளர்களின் உறவினர்களிடம் வெறும் இருபதாயிரம் ரூபாயை நட்ட ஈடாகக் கொடுத்துக் கைகழுவியது. அதிகாரிகளோ இதுவே அதிகம் என்பது போல நடந்து கொண்டனர். குறிப்பாக, மோகனூர் போலீசு நிலைய ஆய்வாளர் சி.பெரியசாமி, "20 ஆயிரம் ரூபாய் போதாதா? கொடுப்பதை வாங்கிச் செல்லுங்கள்" என இறந்து போன சண்முகத்தின் மனைவி வளர்மதியிடமும், பீகார் தொழிலாளர்களின் உறவினர்களிடமும் அதிகாரத் திமிரோடு உபதேசித்துள்ளார். வாய்க்கரிசி போடுவதற்கு ஏற்பாடு செய்ததையே பெரிய மனிதாபிமான உதவியாகக் காட்டிக் கொண்ட தமிழக அரசு, அதற்கு மேற்பட்டு எந்தவொரு நிவாரண உதவியும் செய்ய மறுத்து விட்டது.

இந்த 'விபத்து' நாடாளுமன்றத் தேர்தலுக்கு ஒரு வாரம் முன்னதாகத்தான் நடந்தது. தீயில் சிக்கிக் கொண்டு மாண்டு போனவர்கள் தமிழகத்தைச் சேர்ந்த தொழிலாளர்களாக இருந்திருந்தால், ஓட்டுக்கட்சிகளிடையே ஒப்பாரி வைப்பதில் பெரும் போட்டியே நடந்திருக்கும். பீகார் தொழிலாளர்களின் பிணங்களோ ஓட்டு பொறுக்குவதற்குப் பயன்படாத பிணங்களாகப் போய்விட்டதால், போலி கம்யூனிஸ்டுகள்கூட இப்பிரச்சினையைச் சீந்தாமல் விட்டுவிட்டனர்.

பல ஆண்டுகளுக்கு முன் தலைநகர் தில்லியில் உபஹார் என்ற திரையரங்கில் தீ விபத்து ஏற்பட்டு, அத்திரையரங்கில் படம் பார்த்துக் கொண்டிருந்த பலரும் தீயில் சிக்கி மாண்டு போயினர். முதலாளித்துவ பத்திரிகைகள் அனைத்தும் இவ்விபத்தை மாபெரும் 'தேசிய' சோகமாகச் சித்தரித்து எழுதியதோடு, அத்திரையரங்க உரிமையாளர்கள் தண்டிக்கப்படும் வரை அவ்விபத்து குறித்து தொடர்ந்து எழுதி வந்தன. ஆனால், நாமக்கல்லில் 17 தொழிலாளர்கள் தீயில் கருகி இறந்து போனதோ வெறும் மாவட்டச் செய்தியாகச் சுருக்கப்பட்டு விட்டது.

ஓட்டுக்கட்சிகளும், முதலாளித்துவப் பத்திரிகைகளும் அலட்சியப்படுத்தி ஒதுக்கித்தள்ளிய இச்சாவுகளை, அதற்குப் பின்னே மறைந்துள்ள முதலாளித்துவ இலாபவெறியை நாமக்கல்லில் செயல்பட்டு வரும் மனித உரிமைப் பாதுகாப்பு மையம்தான் மக்கள் மத்தியில் எடுத்துச் சென்று அம்பலப்படுத்தியது. இத்தீ விபத்தில் இறந்து போன தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ரூ.5 இலட்சம் நிவாரணமாக வழங்கக் கோரியும், அந்த ஆலையின் முதலாளியை மட்டுமின்றி, பாதுகாப்பற்ற முறையில் ஆலை இயங்கி வந்ததைக் கண்டும் காணாமல் இருந்த அதிகாரிகளையும் கைது செய்யக் கோரியும் நாமக்கல்லில் 18.5.2009 அன்று மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் சார்பாக ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டது. இந்தப் பிரச்சினையைக் கமுக்கமாக அமுக்கிவிட வேண்டும் என்பதில் குறியாக இருந்த மோகனூர் போலீசு ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி தராமல் இழுத்தடித்ததை இங்கு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் விடுதலை முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி ஆகிய அமைப்புகளைச் சேர்ந்த தோழர்கள் மட்டுமின்றி, இறந்து போன தொழிலாளர்களின் உறவினர்களும் கலந்து கொண்டனர். குறிப்பாக, இறந்து போன தொழிலாளி சண்முகத்தின் மனைவி வளர்மதி, தனது கணவரை ஆலை நிர்வாகம் இரவு பகல் பாராமல் கசக்கிப் பிழிந்து வேலை வாங்கி கொன்று போட்டதைக் கண்ணீர் மல்க எடுத்துரைத்தார். மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் வழக்குரைஞர் சி.ராசு, சேலம் மாவட்டச் செயலர் வழக்குரைஞர் மாயன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். ஆர்ப்பாட்டதில் வலியுறுத்திய கோரிக்கைகளை நிறைவேற்றித் தர தமிழக அரசிற்கு உத்திரவிடக் கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கும் தொடுத்துள்ளது, மனித உரிமைப் பாதுகாப்பு மையம்.

இது உலகமயக் காலக்கட்டம். கண்டம் விட்டுக் கண்டம் தாண்டி இந்தியாவிற்குள் நுழையும் வெளிநாட்டு மூலதனத்தைப் பாதுகாப்பதற்குப் புதிது புதிதாகச் சட்டங்கள் போடப்படுகின்றன. ஆனால், வேலை தேடி ஊரு விட்டு ஊரு செல்லும் தொழிலாளிக்கோ குறைந்தபட்ச பாதுகாப்புகூடக் கிடைப்பதில்லை. இந்த உலகமயத்திற்குச் சேவை செய்வதற்காகவே, தொழிலாளர்கள் வேலை உத்திரவாதம் பற்றிக் கேட்கக்கூடாது எனத் தொழிலாளர் நலச் சட்டங்கள் திருத்தப்படுகின்றன. இனி, தொழிலாளர்கள் பணியிடங்களில் உயிர் உத்திரவாதம் பற்றியும் கேட்கக் கூடாது என்றுகூடச் சட்டங்கள் திருத்தப்படலாம். எனவே, தொழிலாளி வர்க்கம் ஒன்றிணைந்து இந்த அபாயத்திற்கு எதிராகப் போராடாவிட்டால், தொழிலாளர்கள் கொத்தடிமைகளைப் போல நடத்தப்படுவதை ஒழித்துக்கட்ட முடியாது.

**— மனித உரிமைப் பாதுகாப்பு மையம், நாமக்கல்.**


படிப்பகம்

www.padippakam.com

## தாய்லாந்து:

# பாசிச ஆட்சிக்கெதிராக ஏழைகளின் போர்

**ஓட்டுச்சீட்டு ஜனநாயகத்தைக்கூட தனியார்மயம் சகித்துக் கொள்ளத் தயாராக இல்லை.**

ஏப்ரல் 11-ஆம் தேதி தாய்லாந்தின் பாட்டயா எனும் சுற்றுலா விடுதி நகரில் ''ஏசியான்'' எனும் தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பிற்கும் இந்தியாவிற்கும் நடக்க இருந்த சந்திப்பு, போராட்டக்காரர்களின் கலவரத்தால் ஒத்திப் போடப் பட்டது. இதில் பங்கேற்க சென்றிருந்த இந்தியாவின் வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சர் கமல்நாத்தும் மற்ற பிற நாட்டுத் தலைவர்களும் பாதுகாப்பாக தாய்லாந்து தலைநகர் பாங்காங் திரும்பினர். பல்வேறு உலகத் தலைவர்கள் சந்திக் கும் கூட்டங்களில் உலகமயத்திற்கு எதிராகப் போராடும் மக்கள் தமது எதிர்ப்பை காட்டுவது வழக்கம்தான்; அதுவும், ஜனநாயகத்தின் ஒரு அங்கம் என்று ஏற்றிருந்தார்கள். ஆனால், இங்கே ஒரு கூட்டமே ரத்து செய்யப்படும் அளவுக்கு நடந் ததை பல நாடுகளால் ஜீரணிக்க முடியவில்லை. அப்படி தாய் லாந்தில் என்னதான் பிரச்சினை?

இதுவரை பதினாறுக்கும் மேற்பட்ட இராணுவப் புரட்சிகள் நடந்திருக்கும் தாய்லாந்தில் இன்னும் மன்னர் பரம்பரையினர் அங்கீகாரத்தோடு வாழ்கின்றனர். ஏழ்மையும், செல்வமும் கூரிய முரண்பாடுடன் பிரிந்திருக்கும் நாட்டில், ஏழைகளுக்கு எந்தக் காலத்திலும் பெயரளவு ஜனநாயகம்கூடக் கிடைத்த தில்லை.

ஐந்து வருடங்களுக்கு முன்னர் தாக்சின் என்பவரது தலை மையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் ஆட்சி செய்தது. தாக்சினும் கூட அந்நாட்டில் பிரபலமான தொழில்துறை முதலாளி என்றாலும், இவரது ஆட்சிக்காலத்தில் ஓரளவுக்கு ஜனநாயகமும், சுதந்திரமும் இருந்தது. ஒப்பீட்டளவில் ஊடகங் களுக்கும் கூட சுதந்திரம் இருந்தது. மேலும் ஏழைகளுக்கு ஆறுதல் தரும் அளவில் பல சமூகநலத் திட்டங்களும் இவர் காலத்தில் அமலுக்கு வந்தன. நமது நாட்டில் இருக்கும் கவர்ச்சித் திட்டங்கள் போலத்தான் இவை என்றாலும், அந்நாட்டு மக்களுக்கோ அவையே ஏக்கப் பெருமூச்சாக இருந் தன. இதைத்தவிர, தாக்சின் ஆட்சியில் நாட்டின் தெற்கு பகுதி யில் இருக்கும் மலாய் முசுலீம் சிறுபான்மையினர் மீது போதை கடத்தலுக்கெதிரான போர் என்ற பெயரில் ஏறக்குறைய 3000 பேர் வரை கொல்லப்பட்டனர். இந்த அடக்குமுறையெல்லாம் பிரச்சினை என்று பார்க்காத எதிர்க்கட்சிகள், தாக்சின் அரசு செய்த ஏழைகளுக்கான சேமநலத்திட்டங்களை மட்டும் கடுமை யாக எதிர்த்தன.

இந்நிலையில்தான், 2006-ஆம் ஆண்டில் இவரது ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு இராணுவம் ஆட்சிக்கு வந்தது. இதற்கு முன் 2005-ஆம் ஆண்டிலிருந்தே ஜனநாயகத்திற்கான மக்கள் கூட்டமைப்பு எனும் எதிர்க்கட்சிகளின் கூட்டணி தாக் சின் அரசின் ஊழலை எதிர்ப்பதாகப் போராடி வந்தன. ஆனால் இவர்கள், தாக்சின் தென்னாட்டில் நடத்திய மனித உரிமை மீறலைப் பற்றி வாய்திறக்கவில்லை. இதன் விளைவாக தாக் சின் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு மறுதேர்தலுக்கு உத்திரவிட்டார். இதையும் எதிர்க்கட்சிகள் ஏற்றுக்கொள்ள வில்லை.

ஏனெனில், தாக்சினின் மக்கள் நலத்திட்டங்களின் பயனால் மக்கள் அவரை மீண்டும் தேர்வு செய்வார்கள் என்பதால் இந்த எதிர்ப்பு. மேலும், ஏழைகளுக்கு ஜனநாயகத்தின் அருமை தெரி யாதென்றும், அவர்கள் தாக்சினால் விலைக்கு வாங்கப்பட்டி ருப்பதாகவும் இந்த மேன்மக்கள் திமிருடன் பேசிவந்தனர். இந்த மக்கள் விரோத கருத்துக்கு பல அறிவாளிகளும், தன்னார்வக் குழுக்களும் ஆதரவாக இருந்தனர். இந்நிலையில் தாய்லாந்தின் மன்னரை வைத்து தாக்சினின் அரசை நீக்குவ தற்கு இவர்கள் செய்த முயற்சிக்கு மன்னர் ஒத்துழைக்க மறுத்து விட்டார். இவ்வளவிற்கும் தாக்சினின் ஆட்சியில் மன்னருக்கும் நாட்டுபற்று கொண்டோருக்கும் — அதாவது, மேட்டுக்குடியி னருக்கும் மதிப்பில்லை என்பதே இந்தக்கட்சிகளின் பிரச்சாரம். இந்த எதிர்க்கட்சிகள் அனைத்தும், பணக்காரர்கள், மேல்தட்டு நடுத்தர வர்க்கம், நடுத்தரவர்க்கம் ஆகியோரையே பிரதிநிதித் துவம் செய்யும் போது, தாக்சின் பெரும்பான்மையான மக்களைப் பிரதிநிதித்துவம் செய்தார். இப்படி தாய்லாந்து, வர்க்கப் பகைமை யின் முரண்பாட்டில் கனல் போல குமைந்து கொண்டி ருந்தது.

மன்னர் மறுத்து விட்டபடியால், அந்த எதிர்க்கட்சிகள் இரா ணுவத்துக்கு சைகை காட்ட தாக்சின் அரசு கவிழ்க்கப்பட்டு, இராணுவம் ஆட்சி யைப் பிடித்தது. இப்படி மேட்டுகுடி யின் ஆசையை இரா ணுவம் நிறைவேற்றி யது. பதவிக்கு வந்த இராணுவம் முதலில் செய்த காரியம், இது வரை தாய்லாந்து







படிப்பகம்

www.padippakam.com

கண்டவற்றில் சிறந்ததாயிருந்த அரசியலமைப்புச் சட்டத்தை நீக்கி, அவர்களுக்கு - அதாவது, பணக்காரர்களுக்குச் சாதகமான சட்டம் கொண்டுவந்ததுதான். இதற்கு மக்கள் ஒப்புதல் வேண்டுமென்பதால், அதற்கும் தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தல் இராணுவத்தின் துப்பாக்கி முனையில், மேட்டுக்குடியினரையும் இராணுவத்தையும் ஆதரிக்கும் எதிர்க்கட்சிகளின் ஆதரவில், ஊடக முதலாளிகளின் ஒட்டுமொத்த ஆதரவில் நடைபெற்றாலும், சிறுபெருபான்மைதான் இராணுவத்தின் புதிய சட்டத் திருத்தத்திற்கு ஆதரவாக கிடைத்தது.




தாய்லாந்தின் பாட்டயா எனும் நகரில் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மாநாடு நடைபெற இருந்த அரங்கைச் சுற்றி வளைத்துக் கொண்டுப் போராடி, அம்மாநாடு நடைபெறுவதையே தடுத்துவிட்ட தாய்லாந்தின் முன்னாள் பிரதமர் தாக்சின் ஷினாவாத்ராவின் ஆதரவாளர்கள்.

இந்தப் புதிய சட்டத்தின் அம்சங்களைப் பார்த்தால், தாய்லாந்து மத்திய காலத்திற்கு திரும்புகிறதா என்று கூடத் தோன்றும். இதன்படி செனட்டின் பாதி உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படுவதற்குப் பதில் இராணுவத்தால் நியமிக்கப்படுவார்களாம். இப்படி அரசியல் கட்சிகளின் செயல்பாட்டிற்கு மறைமுகமாகத் தடை விதிக்கப்பட்டது. மற்றபடி முதலாளிகளும், பணக்காரர்களும் தங்களை தாங்களே செனட்டிலும் நீதிமன்றத்திலும் நியமித்துக் கொள்வதற்கு இந்தப் புதிய சட்டம் வழிவகை செய்தது. மற்றபடி, நாட்டின் வரவு-செலவுத்திட்டத்தில் இராணுவத்திற்கான பங்கு பெருமளவு அதிகரிக்கப்பட்டது. இது அப்படியே இராணுவத்தின் அதிகார வர்க்கத்திற்கு செல்லும் என்பதை விளக்கத் தேவையில்லை. முக்கியமாக இந்தப் புதிய அரசியலமைப்புச் சட்டம், இராணும் ஆட்சி கவிழ்ப்பு நடத்தினால், அதை எதிர்ப்பதற்கு மக்களுக்கு வழங்கப்பட்டிருந்த உரிமையை ரத்து செய்ததுடன், இனி மேல் இராணுவம் நடத்தவிருக்கும் ஆட்சிக் கவிழ்ப்புகளுக்கும் சட்டபூர்வ உரிமையை வழங்கியது.

அதாவது, நாட்டின் அரசியல் சரியில்லை என எப்போதெல்லாம் இராணுவம் கருதுகிறதோ, அப்போதெல்லாம் ஆட்சிக் கவிழ்ப்புகள் செய்யலாம். அதற்குச் சட்டப்படியே உரிமை உண்டு. மேலும் புதிய சட்டத்திற்கு ஒத்ததாக நீதிமன்றங்களும் மாற்றப்பட்டன. அல்லது நீதிமன்றங்கள் எப்போதும் இப்படி மேட்டுக்குடி, அதிகார வர்க்கம், இராணுவம் முதலியவற்றிற்குத்தான் அடிபணியும். இராணுவம் 2006-இல் ஆட்சியைப் பிடித்ததும் தாக்சினின் ஆட்சியை நீதிமன்ற உதவியுடன் கலைத்து விட்டு மறு தேர்தலுக்கு உத்தர விட்டது. அந்த தேர்தலிலும் தாக்சினின் ''தாய் ராக் தாய்'' கட்சி வென்றது. உடனே இராணுவம் நீதிமன்றத்தின் உதவியுடன் ஆட்சியை மீண்டும் கலைத்தது என்பதிலிருந்து நீதிமன்றங்களின் யோக்கியதையை புரிந்து கொள்ளலாம். ஆனால், தாக்சினின் ஆட்சியை எதிர்த்து இராணுவத்திற்கும் மேட்டுக்குடியினருக்கும் ஆதரவான எதிர்க்கட்சிகள் நடத்திய கலவரம், 2008 டிசம்பரில் பன்னாட்டு விமான நிலையங்களை இரண்டுநாள் கைப்பற்றி முடக்கியது போன்றவையெல்லாம் நீதிமன்றத்தால் தண்டிக்கப்படவில்லை.

2006 ஆட்சிக் கவிழ்ப்பிற்கு பின்னர் இந்த எதிர்க்கட்சியினர் ஆயுதம் தாங்கிய குழுக்களை அமைத்துக் கொண்டு நாடெங்கும் வன்முறையில் ஈடுபட்டனர். மக்கள் மத்தியில் வளரும் எதிர்ப்புணர்வை மிரட்டுவதற்கும் இந்தக் குழுக்களை ராணுவமும் அனுமதித்தது. இப்போது இருக்கும் தாய்லாந்தின் வெளியுறவுத் துறை அமைச்சரும் இப்படிப்பட்ட வன்முறைக் கும்பலிலிருந்து வந்தவர்தான்.

கடைசியாக, 2008-ஆம் ஆண்டு இறுதியில் இராணுவம் தாக்சின் கட்சியில் இருக்கும் பிழைப்புவாதத் தலைவர்களை ஊழலின் மூலம் விலைக்கு வாங்கி, எதிர்க்கட்சிகளை - குறிப்பாக ஜனநாயகக் கட்சியை ஆதரிக்குமாறு ஏற்பாடு செய்தது. இப்படித்தான் ஆக்ஸ்போர்டில் கல்வி கற்ற அபிசிட் இப்போது தாய்லாந்தின் பிரதமராக இருக்கிறார். இவரது காலத்தில் தாக்சினின் ஆட்சியிலிருந்த சமூக நலத்திட்டங்கள் ரத்து செய்யப்பட்டன. இத்தனைக்கும் தாக்சினின் ''தாய் ராக் தாய்'' கட்சியினர் சோசலிசக் கொள்கை கொண்டவர்களெல்லாம் இல்லை. தாராளமயத்தையும், உலகமயத்தையும் தீவிரமாக அமல்படுத்திக்கொண்டே, உள்ளூரில் சில இலவசத் திட்டங்களை அள்ளி வழங்கியதைக்கூட எதிர்க்கட்சிகள் ஏற்கத் தயாரில்லை.

இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பில் தூக்கியெறியப்பட்ட முன்னாள் பிரதமர் தாக்சின் ஷினாவாத்ரா.




படிப்பகம்

www.padippakam.com



இராணுவ - மேட்டுக்குடி கும்பலின் ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பின் புதிய பிரதமராகியுள்ள அபிசிட்.

இப்போது தாய்லாந்தில் முழு சர்வாதிகாரம் நிலவுகிறதென்றால் மிகையில்லை. அரசையும், இராணுவத்தையும் ஒருவர் குறை கூறினால் தேசத்துரோகி எனவும், மன்னரை அவமதித்தார் எனவும் தண்டிக்கப்படுவார். பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி அனைத்தும் தணிக்கை செய்யப்பட்டே இயங்குகின்றன. அப்படி தணிக்கைக்கு அவசியமே இல்லாமல் இவைகளெல்லாம் இராணுவத்திற்கு ஆதரவாக செயல்படுவது வேறு கதை. இணையத்தில் அரசுக்கெதிராக வாசகர் கருத்து தெரிவிப்பவர்கள்கூட அவர்களது கணினி ஐ.பி எண்ணை வைத்து கண்டுபிடிக்கப்பட்டு, எந்த வழக்குமில்லாமல் சிறையில் அடைக்கப்படுகிறார்கள் என்றால், மற்றவர்களின் கதியைப் புரிந்து கொள்ளலாம்.

> **"இந்த சிவப்புச் சட்டை தொண்டர் படை, தாக்சினின் வரம்புகளை மீறி உண்மையான ஜனநாயகத்திற்காகவும், இதில் தோற்றால் நாம் நிரந்தர அடிமைகளாகி விடுவோம் என்பதைப் புரிந்து கொண்டும் போராடுகிறது."**

மன்னருக்கும், இராணுவத்திற்கும் மேட்டுக்குடியினருக்கும் ஆதரவான கட்சிகளின் தொண்டர்கள் மஞ்சள் சட்டை அணிந்து கொண்டு இந்த பாசிசத்தை ஏவி வருகின்றனர். இதை எதிர்த்து தாக்சினின் கட்சிக்கு ஆதரவான சிவப்பு சட்டை அணிந்த தொண்டர் படை போராடி வருகிறது. உண்மையில் இங்கே கட்சி நடத்த முடியாது என்பதை புரிந்து கொண்ட தாக்சின், வெளிநாடு சென்று அங்கிருந்து தனது கட்சியினரிடம் பேசி வருகிறார். ஆனால், இந்த சிவப்பு தொண்டர் படை, தாக்சினின் வரம்புகளை மீறி உண்மையான ஜனநாயகத்திற்கான போராட்டத்தை வீச்சாக நடத்தி வருகிறது.

இப்படித்தான் ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்குமான பகைமை தாய்லாந்தில் ஒரு பாரிய வர்க்கப் போராட்டத்தை பரப்பி வருகிறது. உலகமயத்தின் காலத்தில் உள்ளூரில் பெயரளவு ஜனநாயகம் கூடத் தேவையில்லாமல், அதுவும் உலகமயம் வற்புறுத்தும் ஏழைகளுக்கான சேமநலத்திட்டங்களைக் கூட சகிக்க முடியாமல் தாய்லாந்தில் இராணுவம், பணக்காரர்கள், நீதிமன்றங்கள், ஊடகங்கள் கூட்டு சேர்ந்து கொண்டு பெரும்பான்மை மக்களின் மேல் பெரும் அடக்குமுறையை ஏவி வருகின்றன. இதற்கு அறிவாளிகளும், தன்னார்வக் குழுக்களும் கூட ஆதரவு தெரிவிக்கிறார்கள் என்றால் செல்வந்தர்களின் வலிமையையும், ஏழைகளுக்கெதிரானவர்கள்தான் இவர்கள் என்பதையும் புரிந்து கொள்ளலாம்.

இந்தக் கட்டுரையின் தொடக்கத்தில் ''ஏசியான்'' கூட்டமைப்பின் சந்திப்பை முடக்கிய அந்த கலகக்காரர்கள் வேறு யாருமல்ல, இந்த சிவப்பு ப்டையினர்தான். பல நாட்டு மந்திரிகளை வெளியேற்றி, உள்துறை அமைச்சகத்தின் அதிகாரிகளை பணயக்கைதிகளாகப் பிடித்து போர்க்குணமிக்க முறையில் அந்த போராட்டம் நடைபெற்றது. இதை வைத்து அரண்டு போன இராணுவ கைக்கூலி அரசாங்கம், நாட்டில் அவசர நிலையைப் பிரகடனம் செய்து துருப்புக்களின் ஆயுத வலிமையைக் கொண்டு அடக்குமுறையை ஏவி வருகிறது. ஆனால், அந்த செஞ்சட்டைப் படை அடிபணிவதாக இல்லை. இதில் தோற்றால் நாம் நிரந்தர அடிமைகளாக நிலைபெறுவோம் என்பதை புரிந்து கொண்ட தாய்லாந்து நாட்டின் ஏழைகள் - அதாவது, பெரும்பான்மை மக்கள், செஞ்சட்டை போராட்டத்தில் நாள்தோறும் அணி திரண்டவாறு போராடுகிறார்கள். ஒரு சிலரை சுட்டுக் கொன்று போராட்டத்தை முடக்க நினைத்த இராணுவம், பெரும் திரளான மக்கள் வருவதைக் கண்டு மிரண்டு போயிருக்கிறது.

தாய்லாந்தின் இராணுவ - மேட்டுக்குடி கும்பலின் பாசிச ஆட்சிக்கெதிராக சிவப்புச் சட்டையணிந்த ஏழைகளின் போராட்டம்.



விரைவில் இந்த பாசிச அதிகாரவர்க்கம் தண்டிக்கப்பட்டு தாய்லாந்தில் புதிய மக்களாட்சி நிலைபெறும் என்பதில் ஐயமில்லை. உரிமைகளை இழந்து மந்தைகளைப் போல இவ்வளவுநாள் நடந்து கொண்டதை அறிந்துள்ள மக்கள், இந்த முறை தோற்றால் எழுவதற்கு வெகுநாள் பிடிக்கும் என்பதையும் புரிந்து கொண்டு போராடுகிறார்கள். விரைவில் மஞ்சள் சட்டைப் படையை புறமுதுகு காணச் செய்து, செஞ்சட்டைப் படை வெல்லும். அதையும் நாம் பார்க்கத்தான் போகிறோம்.

● பச்சையப்பன்



படிப்பகம்

www.padippakam.com

## குஜராத் இனப் படுகொலை:

# பாதிக் கிணறு தாண்டும் நீதிமன்றத் தீர்ப்புகள்

**குஜராத் இனப்படுகொலை வழக்குகளை விசாரிப்பதில், நீதிமன்றங்கள் மெத்தனமாகவே நடந்து கொள்கின்றன.**

குஜராத்தில் 2002-ஆம் ஆண்டு நடந்த முசுலீம் இனப் படுகொலை தொடர்பாக உச்சநீதி மன்றத்தாலும் குஜராத் உயர் நீதி மன்றத்தாலும் சமீபத்தில் அளிக்கப்பட்டுள்ள மூன்று தீர்ப்புகள் இந்து மதவெறி கும்பலுக்கு, குறிப்பாக அப்படுகொலையை நடத்திய நாயகன் மோடிக்கு எதிராக அமைந்திருப்பதோடு, இந்த இனப்படுகொலை தொடர்பாக இந்து மதவெறிக் கும்பல் நடத்திவரும் பொய்ப் பிரச்சாரங்களையும் அம்பலப்படுத்தியுள்ளன.

கோத்ரா ரயில் நிலையத்தில் சபர்மதி விரைவு வண்டியின் எஸ் 6 பெட்டி எரிந்து போனதை, பாகிஸ்தான் ஆதரவோடு நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதல் என ஊதிப் பெருக்கி, அவ்வழக்கை காலாவதியாகிப்போன பொடா சட்டத்தின் கீழ் நடத்தி வந்தது, குஜராத் அரசு. "இச்சம்பவத்தைத் தீவிரவாதத் தாக்குதலாகக் கருத முடியாது; எனவே, இவ்வழக்கு தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள முசுலீம்களை பொடா சட்டத்தின் கீழ் விசாரிக்க முடியாது" என குஜராத் உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. கோத்ரா சம்பவம் தொடர்பான தனது பித்தலாட்டங்களை எப்படியாவது நிரூபித்து விட வேண்டும் என்ற வெறியோடு இருக்கும் மோடி அரசு, தனது கைக்கூலிகளைத் தூண்டி விட்டு இத்தீர்ப்புக்கு எதிராக உச்சநீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்து, இடைக்காலத் தடையைப் பெற்றுவிட்டது.

கோத்ரா ரயில் நிலையத்தில் சபர்மதி விரைவு வண்டியின் எஸ்-6 பெட்டி எரிந்துபோன வழக்கு மற்றும் அகமதாபாத்தியிலுள்ள நரோடா பாட்டியா, நரோடா கிராமம், குல்பர்க் சொசைட்டி ஆகிய முசுலீம் குடியிருப்புகளில் இந்து மதவெறிக் கும்பல் நடத்திய கொலைவெறித் தாக்குதல்கள் தொடர்பான வழக்குகள் உள்ளிட்ட 10 வழக்குகளை விசாரிக்க ஆறு விரைவு நீதிமன்றங்களை அமைக்க வேண்டும்; இவ்வழக்கு விசாரணையை உச்சநீதி மன்றத்தால் உருவாக்கப்பட்டுள்ள சிறப்புப் புலனாய்வுக் குழு கண்காணித்து, மூன்று மாதத்திற்கு ஒருமுறை விசாரணை தொடர்பான அறிக்கையை உச்சநீதி மன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என உத்தரவிட்டுள்ளது, உச்சநீதி மன்றம்.

இந்து மதவெறிக் கும்பல் நடத்திய தாக்குதல்கள் தொடர்பான வழக்குகளில் ஏறத்தாழ 2,000 வழக்குகளைப் போதிய சாட்சியம் இல்லை என்று கூறி, கலவரம் நடந்து முடிந்த கையோடு கைகழுவி விட்டது, மோடி அரசு. இந்த 2,000 வழக்குகளையும் மீண்டும் விசாரிக்க உத்தரவிட்டுள்ள உச்ச நீதி மன்றம், இந்தக் குறிப்பிட்ட 10 வழக்குகளைத் தனது கண்காணிப்பின் கீழ் எடுத்துக் கொண்டுள்ளது.

இந்து மதவெறிக் கும்பல் குல்பர்க் சொசைட்டி குடியிருப்பைத் தாக்கியபொழுது மிகக் கொடூரமான முறையில் கொல்லப்பட்ட காங்கிரசு கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஹ்ஸான் ஜாப்ரியின் மனைவி ஜாகியா ஜாப்ரி, இந்த இனப்படுகொலையில் குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடிக்குள்ள தொடர்பை விசாரிக்கக் கோரி நடத்தி வந்த வழக்கில், "சிறப்புப் புலனாய்வுக் குழு குஜராத் இனப் படுகொலையில் முதலமைச்சர் நரேந்திர மோடிக்குள்ள தொடர்பை மூன்று மாதத்திற்குள் விசாரித்து அறிக்கை தர வேண்டும்" என உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. ஜாகியா ஜாப்ரியின் இவ்வழக்கை குஜராத் உயர்நீதி மன்றம் ஏற்றுக் கொள்ள மறுத்து ஏற்கெனவே தள்ளுபடி செய்து விட்டது என்பதை இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

இத்தீர்ப்புகள் வரவேற்கப்படத் தக்கவைதான் என்றபோதும், உச்சநீதி மன்றம்கூட குஜராத் முசுலீம் இனப் படுகொலை தொடர்பான வழக்குகளை பத்தோடு பதினொன்றாகத்தான் நடத்தி வருகிறது என்பதையும் இங்கு அழுத்தமாகச் சொல்லித் தான் தீர வேண்டும்.

இந்த இனப்படுகொலை நடந்து முடிந்து ஏழு ஆண்டுகள் கடந்து விட்டன. இந்த இனப்படுகொலையின்பொழுது உயிர் தப்பிப் பிழைத்த ஆயிரக்கணக்கான முசுலீம் குடும்பங்கள் இன்றும்கூட தாங்கள் வாழ்ந்து வந்த பகுதிகளுக்குள் - கிராமங்களுக்குள் நுழைய முடியாமல் அகதிகளாக வாழ்க்கையை ஓட்டி வருகின்றனர். இந்த இனப்படுகொலை தொடர்பாகப் பதியப்பட்ட 2,000 வழக்குகளில் வெறும் 2 வழக்குகளில்தான் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டுள்ளனர்; மீதி வழக்குகள் அனைத்தும் நீதிமன்ற விசாரணை என்ற நிலையிலேயே ஊறப்போட்டு வைக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு வழக்குகளிலும்கூட நீதிமன்றம் தன்முனைப்போடு செயல்பட்டுக் குற்றவாளிகளைத் தண்டித்துவிடவில்லை. மோடி கும்பல் நடத்திய தாக்குதலில் நேரடியாகப் பாதிக்கப்பட்ட பில்கிஸ் பானு போன்ற அப்பாவி முசுலீம்களும் மனித உரிமை அமைப்புகளும் நடத்திய பெரும் போராட்டத்திற்குப் பிறகுதான் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டனர்.

இந்த இனப்படுகொலையைத் தலைமையேற்று நடத்திய நரேந்திர மோடியையும், அவரது தளபதிகளாகவும் அடியாட்களாகவும் செயல்பட்ட இந்து மதவெறி பாசிசக் குண்டர்கள் அனைவரையும், யூத இனப்படுகொலையை நடத்திய பாசிச நாஜிக் கும்பலைத் தண்டித்ததைப் போல, தனி விசாரணை மன்றம் அமைத்து, தனிச் சட்டம் இயற்றி இந்நேரம் தண்டித்திருக்க வேண்டும். முசுலீம் தீவிரவாதிகள் கடந்த நவம்பரில் மும்பய் நகர் மீது தாக்குதல் நடத்தியவுடனேயே, இது போன்ற தாக்குதல்களை எதிர்கொள்ள சட்டவிரோத நடவடிக்கைகள்


படிப்பகம்

www.padippakam.com

தடுப்புச் சட்டத்தில் பல்வேறு திருத்தங்களைச் செய்த இந்திய அரசு, மோடி போன்ற இந்து மதவெறி தீவிரவாதிகளை எதிர் கொள்ள தனிச் சட்டம் இயற்ற மறுத்து வருகிறது. இந்த இனப் படுகொலை தொடர்பான 2,000 வழக்குகளில் வெறும் 10 வழக் குகளை மட்டும் தனது கண்காணிப்பின் கீழ் கொண்டுவந்துள்ள உச்சநீதி மன்றம், இந்தப் பத்து வழக்குகளை வெளி மாநில நீதிமன்றங்களில் விசாரிக்க வேண்டும் என்ற கோரிக்கையைத் தனது தீர்ப்பில் உதறித் தள்ளி விட்டது.

குஜராத்தில் அமைக்கப்பட்டுள்ள விரைவு நீதிமன்றங்களில் நடக்கும் விசாரணையைக் கண்காணித்து உச்சநீதி மன்றத்திற்கு அறிக்கை அனுப்புவது; இந்தப் பத்து வழக்குகளில் சம்பந்தப் பட்டுள்ள சாட்சிகளுக்குப் போதிய பாதுகாப்பு அளிப்பது; சிறப்புப் புலனாய்வுக் குழுவோடு கலந்தாலோசித்து, அரசு வழக்குரைஞர்களை நியமிப்பது ஆகிய பொறுப்புகள் சிறப்புப் புலனாய்வுக் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளதால், இந்தப் பத்து வழக்குகளும் இந்து மதவெறிக் கும்பலின் அச்சுறுத்தலின்றி நடைபெறும் என நம்பச் சொல்கிறது, உச்சநீதி மன்றம்.

2,000 வழக்குகளில் இந்தப் பத்து வழக்குகளில் மட்டும் விரைவாகவும் நியாயமாகவும் நீதி கிடைத்துவிட்டால் போதும் என்று இருந்துவிட முடியாது; இரண்டாவதாக, இந்து மதவெறிக் கும்பல் சட்டத்தின் ஓட்டைகளுக்குள் புகுந்துகொண்டு இந்த பத்து வழக்குகளையும் இழுத்தடிக்கும் நரித்தனத்தில் இறங்காது என்பதற்கும் எந்த உத்தரவாதமும் கிடையாது.

குஜராத் அரசில் மகளிர் நலத் துறையில் இணை அமைச்ச ராக இருந்த மாயாபென் கோத்நானியும், விசுவ இந்து பரிசத் தின் பொதுச் செயலாளராக இருந்த ஜெய்தீப் படேலும்தான், நரோடா பாட்டியாவிலும், நரோடா கிராமத்திலும் நடந்த தாக் குதல்களுக்குத் தளபதிகளாகச் செயல்பட்டவர்கள். இவர்கள் இருவரும் கைபேசிகள் மூலம் கொடுத்த உத்தரவுகளின்படி தான் இந்து மதவெறிக் கும்பல் அந்தத் தாக்குதலை நடத்தினார் கள் என்பதற்கு அசைக்க முடியாத ஆதாரங்கள் இருந்தபொழு தும், இவர்கள் மீது வழக்குப் பதிவு செய்ய மறுத்துவிட்டதோடு, நரோடா பாட்டியா மற்றும் நரோடா கிராம கொலைச் சம்பவ வழக்குகளைப் போதிய சாட்சியமில்லை என்ற பொய்யைச் சொல்லிக் கைகழுவி விட்டது, மோடி அரசு.

உச்சநீதி மன்ற உத்தரவுப்படி இந்த இரண்டு வழக்குகளை யும் மீண்டும் புலனாய்வு செய்த சிறப்புப் புலனாய்வுக் குழு, அமைச்சர் மாயாபென்னையும், ஜெய்தீப் படேலையும் விசார ணைக்கு அழைத்தது. அவர்கள் இருவருமே மோடிக்குள்ள அதிகாரத்தைக் கேடயமாகப் பயன்படுத்திக் கொண்டு, விசார ணைக்குப் போகாமல் காலத்தைக் கடத்தினர். இதனையடுத்து, சிறப்புப் புலனாய்வுக் குழு அவர்கள் இருவரையும் தலைமறை வாகத் திரியும் குற்றவாளிகள் என அறிவித்தது. அவர்களோ குஜராத்திலுள்ள கீழ் நீதிமன்றமொன்றில் மனுப் போட்டு, சிறப்புப் புலனாய்வுக் குழு தங்களைக் கைது செய்துவிடாத வண் ணம் பிணை வாங்கிக் கொண்டனர். அந்த நீதிமன்றம் சமூகத் தில் உயர்ந்த அந்தஸ்தில் இருக்கும் இவர்கள் சாட்சியத்தைக் கலைத்துவிட மாட்டார்கள் என இக்கிரிமினல்களுக்குச் சான்றி தழ் அளித்தது. இதன்பின், சிறப்புப் புலனாய்வுக் குழு குஜராத் உயர்நீதி மன்றத்தை அணுகி கீழ் நீதிமன்றம் வழங்கிய பிணையை ரத்துசெய்ய வைத்து, அதன் பிறகு அவர்கள் இரு வரையும் கைது செய்து சிறையில் அடைத்தது. எனினும், கைது செய்யப்பட்ட சில நாட்களிலேயே அவ்விருவருக்கும் பிணை வழங்கி விட்டது, குஜராத் நீதிமன்றம்.





**சிறப்புப் புலனாய்வுக் குழுவின் விசாரணைக்கு அழைத்து வரப்படும் குஜராத் மாநில மகளிர் நலத்துறை இணை அமைச்சர் மாயாபென் கோத்நானி (மேல் படம்) - மற்றும் விசுவ இந்து பரிசத்தின் குஜராத் மாநிலப் பொதுச் செயலாளர் ஜெய்தீப் பட்டேல்.**

இப்படிப்பட்ட இழுத்தடிப்புகளை இந்து மதவெறிக் கும்பல் மட்டுமல்ல, உச்சநீதி மன்றம்கூட ''சட்டப்படி'' செய்து வருகி றது என்பதும் உண்மை.

சிறப்புப் புலனாய்வுக் குழுவின் வசமுள்ள இந்தப் பத்து வழக்குகளையும் குஜராத்திற்கு வெளியே விசாரிக்க வேண் டும் எனக் கோரி மனித உரிமை அமைப்புகள் 2003-ஆம் ஆண்டு உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தன. இவ் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உச்சநீதி மன்றம் இந்த வழக்குகளின் மீது குஜராத் நீதிமன்றங்களில் நடந்துவந்த விசாரணைகளுக்கு இடைக்கால தடை விதித்தது. மனித உரிமை அமைப்புகளின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள


படிப்பகம்

www.padippakam.com

> வருண்காந்தி மீதான தேசியப் பாதுகாப்புச் சட்ட வழக்கை உடனடியாகத் தள்ளுபடி செய்த உச்சநீதி மன்றம், குஜராத் இனக் கலவரம் தொடர்பான வழக்குகளை இழுத்தடிப்பது ஏன்?

மறுத்துவிட்ட உச்சநீதி மன்றம், இந்த பத்து வழக்குகளை குஜராத்திலேயே விரைவு நீதிமன்றங்களை அமைத்து விசாரிக்கலாம் என இப்பொழுது தீர்ப் பளித்திருக்கிறது. இந்த ''பரபரப்பான'' தீர்ப்பை உச்சநீதி மன்றம் வழங்குவ தற்குள் ஏறத்தாழ ஆறு ஆண்டு காலம் உருண்டோடிவிட்டது. இந்து மதவெறி யன் வருண் காந்தி மீது போடப்பட்ட தேசிய பாதுகாப்புச் சட்ட வழக்கை கைசொடுக்கும் நேரத்திற்கள் தள்ளு படி செய்துவிட்ட உச்சநீதி மன்றம், இந் தப் பஞ்சு மிட்டாய் தீர்ப்பை வழங்கு வதற்கு இத்துணை காலதாமதம் ஏன் செய்தது? இப்படி இழுத்தடிப்பதில் நீதி பதிகளுக்கு ஏதாவது உள்நோக்கம் இருக்குமா? என்ற கேள்விகளை எழுப் பினால், நீதிமன்ற அவமதிப்பு வழக்கு நம் மீது பாய்ந்து விடும்.

சபர்மதி விரைவுவண்டி கோத்ரா ரயில் நிலையத்தைக் கடந்து சென்ற ஒருசில நிமிடங்களிலேயே, அவ்வண்டியின் எஸ்-6 பெட்டி தீக்கிரையானது. இது தொடர்பாக கோத்ராவைச் சேர்ந்த 135 முசுலீம்களின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. இவர்களுள் 22 பேர் தலைமறைவாகிவிட 100 பேர் கைது செய் யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இந்த 100 பேரில் 16 பேருக்கு மட்டும் பிப்ரவரி 14, 2003 அன்று குஜராத் உயர்நீதி மன்றம் பிணை வழங்கியது. இந்தத் தீர்ப்பு வந்த மறுநிமிடமே, அதுவரை சாதாரண குற்றவியல் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப் பட்ட இந்த வழக்கை பாசிச பொடா சட்டத்தின் கீழ் கொண்டு வந்தார், மோடி. இந்த வழக்கின் கீழ் கைது செய்யப்பட்டவர் களுக்கு எளிதாகப் பிணை கிடைத்துவிடக் கூடாது என்ற 'நல்லெண்ணம்'தான் இதற்குக் காரணம்.

இவ்வழக்கில் கைது செய்யப்பட்டவர்களுக்குப் பிணை வழங்க வேண்டும் எனக் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, கடந்த ஐந்தாண்டுகளாக முறையாக விசாரிக்கப்படாமல் உச்ச நீதி மன்றத்தால் முடக்கி வைக்கப்பட்டுள்ளது. சபர்மதி விரைவு வண்டியின் எஸ்-6 பெட்டி தீக்கிரையான வழக்கு பொடாவின் கீழ் வராது என குஜராத் உயர்நீதி மன்றம் தீர்ப்பளிப்பதற்கு முன்பாகவே, மைய அரசால் அமைக்கப்பட்ட பொடா மறு ஆய்வுக் கமிட்டி 2004-ஆம் ஆண்டிலேயே இப்படியான தீர்ப்பை அளித்துவிட்டது. பொடாவின் கீழ் கைது செய்யப்பட் டவர்களுக்குப் பிணை கோரி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய் யும் உரிமை உண்டு என 2006-ஆம் ஆண்டில் உச்சநீதி மன் றம் தெளிவுபடுத்தியிருக்கிறது. இத்தனை சாதகமான அம்சங் கள் இருந்தும், கோத்ரா ரயில் எரிப்பு வழக்கில் கைது செய் யப்பட்டு, கடந்த ஏழு ஆண்டுகளாகச் சிறையில் வாடி வரும் 84 முசுலீம்களுக்குப் பிணை வழங்கும் மனுவை முறையாக விசாரிக்காமல் தள்ளிப்போட்டுக்கொண்டே போகிறது, உச்ச நீதி மன்றம்.

உச்சநீதி மன்றத்தின் இந்த அநீதியான மற்றும் பாரபட்சமான போக்கை வெட்கக்கேடு என விமர்சித்தார், மனித உரிமைப் போராளியும் வழக்குரைஞருமான தீஸ்தா செதல்வாட். உச்ச நீதி மன்றத்தின் முதல் ''தலித்'' தலைமை நீதிபதியான கே.ஜி. பாலகிருஷ்ணன் இந்த அநீதிக்காக வெட்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அவரோ, தீஸ்தா செதல்வாட் உச்சநீதி மன்றத்தின் பாரபட்சமான சிவப்பு நாடாத்தனத்தை அம்பலப் படுத்தியதற்காக ஆத்திரமடைந்தார். கடந்த ஆண்டு பிப்ரவரி 19-ஆம் தேதி 84 முசுலீம்களின் பிணை மனு விசாரணைக்கு வந்தபொழுது, ''யார் இந்த தீஸ்தா செதல்வாத்? உங்களில் யாராவது எந்த வகையிலாவது அவருடன் தொடர்புடையவர்களா? அவருடன் தொடர்புடைய யாராவது பிணை மனு தாக்கல் செய்திருந்தால், அதனை இந்த அமர்வு நீதிமன்றம் கேட்க விரும்பவில்லை'' எனக் கீழ்த்தரமான முறையில் மனுதாரர்களுக்கு மிரட்டல் விடுத்தார்.

குஜராத் இனப் படுகொலையின் பொழுது நடந்த கொடூரங்களை வெளிக் கொண்டு வந்ததிலும், பெஸ்ட் பேக்கரி மற்றும் பில்கிஸ் பானு தொடர்பான வழக்குகளில் இந்து மதவெறிக் கிரிமினல்கள் தண் டிக்கப்பட்டதிலும் தீஸ்தாவின் பங்கு அளப்பரியது எனத் தெரிந்திருந்தும், ''யார் இந்த தீஸ்தா?'' என உச்சநீதி மன்றம் வினவியது, அம்மன்றத்தின் அதிகாரத்திமிரைத் தான் வெட்ட வெளிச்சமாக்கியது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்க வேண்டும் என்பதைவிட, தனது அதிகாரத் திமி ரையும் பாரபட்சமான, தன்னிச்சையான போக்கையும் யாரும் கேள்வி கேட்கக் கூடாது என்பதில்தான் உச்சநீதி மன்றம் குறி யாக இருந்து வருகிறது.

மனுதாரர்கள் தங்களுக்குப் பிணை கிடைக்க வேண்டும் என்ற பதைபதைப்பில், உச்சநீதி மன்றத்தின் மிரட்டலுக்கு அடி பணிந்து, தீஸ்தாவுடன் தொடர்பு வைத்துக் கொள்வதைக் கைவிடுவதாக அறிவித்தனர். எனினும், உச்சநீதி மன்ற நீதிபதி கள் அவர்களுக்குப் பிணை வழங்காமல், விசாரணையை ஒத்தி வைத்து, அம்முசுலீம்களின் வாழ்க்கையோடு விளையாடிப் பார்த்து மகிழ்ந்தனர். இந்தக் குரூரத்தை யாரால்தான் சகித்துக் கொள்ள முடியும்? தனது அரசால் கைது செய்யப்பட்டுள்ள முசுலீம்களுக்கு நீதி மட்டுமல்ல, பிணைகூடக் கிடைத்துவிடக் கூடாது என விரும்புகிறார், மோடி. மோடியைப் போலவே நீதிபதிகளும் எண்ணுகிறார்கள் என்று ஏன் சொல்லக்கூடாது?

''தாமதமாக வழங்கப்படும் நீதி, நீதி மறுக்கப்படுவதற்குச் சம்மானது'' என்ற பொன்மொழியை உச்சரித்துக் கொண்டே, குஜராத் முசுலீம்களுக்கு 'நீதி' வழங்குவதை இழுத்தடிக்கும் திருப்பணியை இந்திய நீதிமன்றங்கள் சட்டப்படியே செய்து வருகின்றன. சில சமயங்களில் குஜராத் முசுலீம்களுக்குச் சாதகமாக வழங்கப்படும் தீர்ப்புகள்கூட, அவர்களுக்கு முழுமையான நியாயத்தை வழங்கிவிடுவதில்லை. பில்கிஸ் பானு வழக்கில் (பார்க்க; புதிய ஜனநாயகம் பிப்ரவரி 2008) பாலியல் வன்முறை தாக்குதலையும், படுபாதக கொலைகளை யும் நடத்திய இந்து மதவெறி கிரிமனல்களுள் ஒருவனுக்குக் கூடத் தூக்குத் தண்டனை தரப்படவில்லை. இக்கிரிமினல் குற்றங்களை மூடிமறைக்கத் துணையாக நின்ற போலீசு அதிகாரி கள், அரசு மருத்துவர்களில் ஒருவருக்குக்கூட ஒருநாள் சிறை தண்டனைகூட வழங்கப்படவில்லை.

இச்சூழ்நிலையில், இந்து மதவெறிக் கும்பலுக்கு எதிராக வழங்கப்படும் தீர்ப்புகளில் உள்ள ஓட்டைகளை அம்பலப் படுத்தும் அதேசமயம், இந்த இனப்படுகொலையின் நாயகன் மோடி தண்டிக்கப்படும் வரையிலும், ஒவ்வொரு வழக்கிலும் விரைவாகவும், நியாயமாகவும் தீர்ப்பு வழங்கப்படும் வரை யிலும் போராடுவது ஒன்றுதான் மதச்சார்பின்மையை நேசிக் கும் இந்திய மக்களின் முன் உள்ள ஒரே வழியாகும்.

● செல்வம்



படிப்பகம்

www.padippakam.com

## பாக். இராணுவம் - தாலிபான் மோதல்:

# நிழலா? நிஜமா?

**மதவாதத்திற்குள் மூழ்கிப் போன சமூகக் கட்டமைப்பை ஒழிக்காமல், தாலிபான்களை ஒழிக்க முடியாது.**

வரம் கொடுத்த சிவன் தலையிலேயே கைவைக்க முயன்ற பத்மாசுரன் பற்றிய இந்து மதப் புராணக் கதையை அறியாதவர்கள் இருக்க முடியாது. பாகிஸ்தானின் இன்றைய நிலை அப்புராணக் கதையைத்தான் நினைவுபடுத்துகிறது. அந்நாட்டிலுள்ள வடமேற்கு எல்லைப்புற மாநிலத்திலுள்ள மாலாகண்ட் பகுதியில் ''அமைதியை'' ஏற்படுத்த, அப்பகுதியில் செயல்பட்டு வரும் ***தெஹ்ரிக் இநிபாஸ் ஹரியத் இ முஹமதி*** என்ற இசுலாமியத் தீவிரவாத அமைப்போடு பாகிஸ்தான் அரசு ஓர் உடன்பாடு செய்துகொண்டது. இதன்படி, மாலாகண்ட் பகுதியில் ஸ்வாட் சமவெளியையும் உள்ளிட்ட ஏழு மாவட்டங்களில் ***நிஜாம் இ அத்ல்*** என்ற ஷரியத் நீதிமன்றங்களை அமைத்துக் கொள்ள அனுமதி வழங்கப்படும். இதற்கு கைமாறாக, தெஹ்ரிக் இநிபாஸ் அமைப்பு தனது சகோதர அமைப்பான ***தெஹ்ரிக் இ தாலிபான் பாகிஸ்தான்*** அமைப்பினை ஆயுதப் போராட்டத்தைக் கைவிடுமாறு செய்ய வேண்டும். ஆனால், நடந்ததோ பாகிஸ்தான் அரசாங்கத்தின் எதிர்பார்ப்பிற்கு நேர்மாறாக அமைந்துவிட்டது.


இந்த அமைதி ஒப்பந்தம் பிப்ரவரி 2009-இல் கையெழுத்தானது. பாகிஸ்தான் அரசு ஒப்பந்தப்படி ஷரியத் நீதிமன்றங்களை அமைத்து, அதற்குரிய நீதிபதிகளை (காஸி) நியமித்துக் கொண்டிருந்த வேளையில், பாகிஸ்தானைச் சேர்ந்த தெஹ்ரிக் இ தாலிபான் அமைப்பு ஆயுதங்கள் ஒப்படைக்க மறுத்ததோடு, மாலாகண்ட் பகுதியில் ஸ்வாட் சமவெளியை ஒட்டியுள்ள புனேர், தீர் மாவட்டங்களுக்குள் அணிஅணியாக ஊடுருவியது. தாலிபான் அமைப்பால் அம்மாவட்டங்களைச் சேர்ந்த பல பகுதிகளில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டன; ரோந்து படைகள் ஏற்படுத்தப்பட்டன. அம்மாவட்டங்களில் பாகிஸ்தானின் அதிகாரம் இனி செல்லுபடியாகாது என்ற தோற்றம் உருவாக்கப்பட்டது.

பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத், புனேர் மாவட்டத்தில் இருந்து 100 கி.மீ. தொலைவிற்குள் அமைந்திருப்பதால், அடுத்து இஸ்லாமாபாத்திற்குள்ளும் தாலிபான் ஊடுருவிவிடும் என்ற பீதி பொதுமக்கள் மத்தியில் உருவானது. இஸ்லாமாபாத்தைச் சேர்ந்த சில தனியார் பள்ளிக்கூடங்கள் தங்கள் பள்ளிக் கட்டிடத்தின் சுற்றுச்சுவரை உயர்த்திக் கட்டும் நடவடிக்கைகளில் இறங்கியதாகவும், சில தனியார் பள்ளிக்கூடங்கள் பெண்கள் பள்ளிக்கூடத்திற்கு இறுக்கமான உடைகளையோ, ஜீன்ஸ் ஆடையையோ அணிந்து வரக் கூடாது எனக் கட்டளையிட்டதாகவும், தாராளவாத சிந்தனை கொண்ட கனவான்கள் தங்களின் பாதுகாப்புக்குத் துப்பாக்கி வாங்கி வைத்துக் கொள்ள அலைந்ததாகவும் பத்திரிகைகள் இந்தப் பீதியைப் படம் பிடித்துக் காட்டின.

இஸ்லாமாபாத்தில் பீதி பரவி வந்த நேரத்தில் புனேர் மாவட்டத்தில் பொதுமக்கள் தாலிபானின் ஊடுருவலை எதிர்க்கத் தொடங்கியிருந்தனர். அரசு தாலிபானுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறி, பாகிஸ்தானின் பல பகுதிகளிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறத் தொடங்கின. அமைதி ஒப்பந்தத்தை ஆதரித்து வந்த அமெரிக்கா, புனேர் ஊடுருவலுக்குப் பிறகு நிலைமை கைமீறிப் போவதை உணர்ந்து, பாகிஸ்தான் அரசு தாலிபானுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்ற நிர்பந்தம் கொடுக்கத் தொடங்கியது. ''இந்தியா பாகிஸ்தானை அச்சுறுத்தும் எதிரி கிடையாது; உள்நாட்டு தீவிரவாதிகள்தான் பாகிஸ்தானின் அபாயகரமான எதிரிகள்'' என பாகிஸ்தானுக்குப் புதிய உபதேசத்தை வழங்கியது, அமெரிக்கா.

இத்தகைய உள்நாட்டு மற்றும் மேற்குலக நாடுகளின் நெருக்குதல்கள் ஒருபுறமிருக்க, வளர்த்த கடா மார்பில் பாய்ந்துவிடக் கூடாது என்பதையும், தாலிபானுக்கு எதிராக ஏதாவதொரு நடவடிக்கை எடுத்தால்தான் அமெரிக்காவில் இருந்து நிதியுதவி கிடைக்கும் என்பதையும் புரிந்து கொண்ட பாகிஸ்தான் அரசு, மிகவும் தாமதமாகத் தாலிபானுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளில் இறங்கியது. பாகிஸ்தானுக்குத் தனது பலத்தைப் புரிய வைத்த தாலிபான், புனேர் மாவட்டத்திலிருந்து தானே பின்வாங்கிக் கொண்டது.


அதேசமயம், அமைதி ஒப்பந்தம் நடைமுறையில் இருப்பதால் மாலாகண்ட் பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் தாக்குதல் நடத்தாது என எதிர்பார்த்தது. ஆனால், பாகிஸ்தானோ இஸ்லாமியத் தீவிரவாதத்திற்கு எதிராகத் தான் உறுதியான நடவடிக்கை எடுத்து வருவதைக் காட்டிக் கொள்வதற்காக மாலாகண்ட் பகுதியில் இராணுவத் துருப்புகளையும் ஆயுதங்களையும் குவித்துத் தாக்குதலை நடத்தி வருகிறது. இதனால் மாலாகண்ட் பகுதியைச் சேர்ந்த






படிப்பகம்

www.padippakam.com



ஸ்வாட் சமவெளியில் உள்ள மிங்கோரா நகரைச் சேர்ந்த மக்கள், இராணுவக் குண்டு வீச்சில் இருந்து தப்பிக்க அகதிகளாக வெளியேறிச் செல்லும் அவலம்.

கைகோர்த்துக் கொண்டும் போட்டி போட்டுக் கொண்டும் அந்நாட்டில் மிகப் பெரும் மனிதப் பேரழிவை மிகவும் அமைதியாக நடத்தி வருகின்றன என்பதே உண்மை.

தாலிபான்களைத் துடைத்துவிட்டுத் தான் மறுவேலை எனக் காட்டிக் கொள்வதற்காக, பாகிஸ்தான் அதிபர் ஆசிஃப் அலி ஜர்தாரி இத்தாக்குதலை பாகிஸ்தானின் ஆன்மாவை மீட்பதற்கான யுத்தம் எனப் பலமான பீடிகை போட்டு வருணித்து வருகிறார். ஆனால், முசுலீம் தீவிரவாத அமைப்புகளுக்கும், பாகிஸ்தான் அரசு, இராணுவம் மற்றும் அதன் சர்வதேச உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ.க் கும் இடையே இருந்து வரும் நெருக்கமான உறவுகளை வைத்துப் பார்க்கும்பொழுது அதிபர் ஜர்தாரியின் வார்த்தைகளை எவ்வளவு தூரத்திற்கு நம்ப முடியும் எனத் தெரியவில்லை.


இதற்கு ஆதாரமாக "அரசு முசுலீம் தீவிரவாத அமைப்போடு போட்டுக்கொண்ட அமைதி ஒப்பந்தத்தை ரத்து செய்யாமல் இருப்பது; இதுவரை இத்தாக்குதலில் 700-க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டபோதும், பாகிஸ்தானில் பதுங்கிக் கொண்டு செயல்பட்டு வரும் பல்வேறு தீவிரவாத அமைப்புகளின் தலைவர்களைக் கைது செய்யாமல்கூட விட்டு வைத்திருப்பது; குறிப்பாக, ஆப்கான் மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த பல்வேறு தீவிரவாத அமைப்புகளின் புகலிடமாக இருக்கும் ஆப்கான் எல்லையையொட்டியுள்ள பழங்குடியினப் பகுதிகளை பாகிஸ்தான் அரசு கண்டு கொள்ளாமல் இருப்பது" ஆகியவற்றை பாகிஸ்தான் மக்களே சுட்டிக் காட்டுகின்றனர். ஒரு காலத்தில் பாகிஸ்தான் மக்களால் "சகோதரர்கள்" என அழைக்கப்பட்ட முசுலீம் தீவிரவாத அமைப்புகள் இன்று அம்மக்களால் கொலைகாரர்களாகப் பார்த்து வெறுக்கப்படுவதாக பாகிஸ்தான் பத்திரிகைகள் குறிப்பிடுகின்றன.

இலட்சக்கணக்கான மக்கள் தாங்கள் வாழ்ந்து வந்த பகுதியில் இருந்து வெளியேறி, உள்நாட்டிலேயே அகதிகளாக அலையும் அவலநிலை உருவாகியுள்ளது.

அமைதி ஒப்பந்தம் உருவாவதற்கு முன் மாலாகண்ட் பகுதியில் நடந்த சண்டையினால் வெளியேறிவர்கள், தற்போது வெளியேறி வருபவர்கள் என எல்லாமுமாகச் சேர்த்து ஏறத்தாழ 15 இலட்சம் மக்கள் மாலாகண்ட் பகுதியில் இருந்து வெளியேறி, பாகிஸ்தானின் பல்வேறு பகுதிகளில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்திருக்கலாம் என ஐ.நா. மன்றம் மதிப்பிட்டுள்ளது. வெளியேறிச் சென்றவர்களுள் 20 சதவீத மக்கள்தான் அகதி முகாம்களில் தஞ்சம் அடைந்துள்ளனர். மீதமுள்ள 80 சதவீத மக்கள் உறவினர்கள், நண்பர்களிடம் அடைக்கலம் அடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அகதி முகாம் என்ற பெயரில் வெறும் துணிக் கூடாரத்தைத்தான் அமைத்திருக்கிறது, பாகிஸ்தான் அரசு. குடிநீர் வசதியற்ற, மின்சார வசதியற்ற, கழிப்பிட வசதியற்ற இம்முகாம்களில் நாங்கள் மிருகங்களைப் போல வாழ்ந்து வருவதாகக் குறிப்பிடுகிறார், அஸ்மத்துல்லா கான். ஏற்கெனவே திவாலாகிப் போய்விட்ட பாகிஸ்தான் அரசு, இந்த அகதி முகாம்களை இதற்கு மேல் "வசதியாக"ப் பராமரித்துவிட முடியாது. பாகிஸ்தான் ஆளுங் கும்பலின் அமெரிக்க அடிவருடித்தனம், அமெரிக்கா ஊட்டி வளர்த்த இராணுவ சர்வாதிகாரம், முசுலீம் தீவிரவாதம் இவை ஒன்றோடொன்று

மக்கள் வசிக்கும் பகுதிகளின் மீது பாக். இராணுவம் குண்டு வீசி வருவதைக் கண்டித்து நடந்த ஆர்ப்பாட்ட பேரணி.





படிப்பகம்

www.padippakam.com

மாலாகண்ட் பகுதியைச் சேர்ந்த மக்கள் விரும்பியதால் தான் முசுலீம் தீவிரவாத அமைப்போடு ஒப்பந்தம் போட்டுக் கொண்டதாகவும், ஷரியத் நீதிமன்றங்களை அமைத்து வருவதாகவும் பாகிஸ்தான் அரசும் இராணுவமும் கூறி வருகின்றன. மாலாகண்ட் பகுதியைச் சேர்ந்த பழங்குடி இன மக்கள் பாகிஸ்தான் அரசின் மீதும், அதன் ஊழல் நிறைந்த நீதி பரிபாலன முறையின் மீதும் கொண்டிருந்த வெறுப்பை பாகிஸ்தான் அரசும் இராணுவமும் முசுலீம் தீவிரவாத அமைப்புகளும் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டன என்பதே உண்மை.

வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தை ஆண்டு வரும் அவாமி கட்சி இராணுவத்தின் நிர்பந்தத்தின் காரணமாகத்தான் முசுலீம் தீவிரவாதிகளோடு ஒப்பந்தம் போட்டுக் கொண்ட உண்மையைப் போட்டு உடைத்து விட்டது. ''பாகிஸ்தான் இராணுவம் முசுலீம் தீவிரவாத அமைப்புகள் தனது அதிகாரத்தைக் கேள்விக்குள்ளாக்கும் அளவிற்கு வளர்ந்து விடவில்லை எனக் கருதுவதால்தான், தாலிபான் புனேர் மாவட்டத்திற்குள் ஊடுருவியதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை'' என பாகிஸ்தான் பத்திரிகைகள் குற்றஞ்சுமத்தி வருகின்றன.

பாகிஸ்தானின் ஆளும் கும்பல்களுள் ஒன்றான பெரும் நிலப்பிரபுக்களுக்கும் முசுலீம் மத குருமார்களுக்கும் இடையே இருந்து வரும் நெருக்கமான பிணைப்பு; பாகிஸ்தானின் இராணுவம் மற்றும் ஐ.எஸ்.ஐ.க்கும் பல்வேறு முசுலீம் தீவிரவாதக் குழுக்களுக்கும் இடையே இருந்து வரும் உறவு; அமெரிக்காவாலும், பாகிஸ்தானின் ஆளும் கும்பலாலும் பாகிஸ்தான் சமூகம் கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாக முசுலீம் மத அடிப்படைவாத சித்தாந்தம் மற்றும் அரசியலுக்குள் மூழ்க வைக்கப்பட்டிருப்பது; பாகிஸ்தானின் உற்பத்தித் தேங்கிப் போய் அதனால் அம்மக்களைப் பிடித்தாட்டும் வறுமை; இவ்வறுமையின் காரணமாக மதரஸாக்கள் போதித்துவரும் கல்வியைத் தவிர, வேறெந்த சீர்திருத்தக் கருத்துக்களுக்கோ, முற்போக்குக் கருத்துக்களுக்கோ ஆட்படாத பாகிஸ்தானின் அடித்தட்டு மக்கள்; அமெரிக்கா ஆப்கானில் நடத்தி வரும் மேலாதிக்கத் திமிர் பிடித்த போர்; இப்போரை பல்வேறு முசுலீம் தீவிரவாத அமைப்புகள் எதிர்த்துப் போராடி வருவது — இவை காரணமாக பாகிஸ்தான் இராணுவம் முசுலீம் தீவிரவாத அமைப்புகளுக்கு எதிராக ஒப்புக்காக நடத்தும் தாக்குதல்கள்கூட, முசுலீம் தீவிரவாத அமைப்புகளை மேலும் மேலும் பலப்படுத்தும் எதிர்மறையான விளைவுகளைத்தான் ஏற்படுத்துகின்றன.

**“பாகிஸ்தான் ஆளுங்கும்பலின் அமெரிக்க அடிவருடித்தனம், அமெரிக்கா ஊட்டி வளர்த்த இராணுவ சர்வாதிகாரம், முசுலீம் தீவிரவாதம் இவை ஒன்றோடொன்று போட்டி போட்டுக் கொண்டு அந்நாட்டில் மிகப்பெரும் மனிதப் பேரழிவை நடத்தி வருகின்றன.”**

அமெரிக்க மறுகாலனியாதிக்க எதிர்ப்பையும், நாட்டின் சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும், மதச்சார்பின்மையையும் குறிக்கோள்களாகக் கொண்டு நடத்தப்படும் மக்கள்திரள் புரட்சிகரப் போராட்டங்களின் மூலம் மட்டும்தான் பாகிஸ்தானைப் பீடித்திருக்கும் எல்லா துயரங்களையும் துடைத்தெறிய முடியும். மாறாக, சட்ட வரம்புகளுக்கு உட்பட்ட சீர்திருத்தப் போராட்டங்களினால்கூட இந்த அவலங்களை ஒழித்துக்கட்ட முடியவில்லை என்பதைத்தான் பாகிஸ்தானின் வரலாறு நமக்கு உணர்த்துகிறது.

லாகூர் நகரப் பொதுமக்கள் தாலிபான் தீவிரவாதிகளைக் கண்டித்து நடத்திய ஆர்ப்பாட்ட பேரணி.




பெரும்பான்மையான பாகிஸ்தான் மக்கள் முசுலீம் மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும், அந்நாட்டு அரசு ஒரு மதவாத அரசு என்பதும் பெரும்பான்மையான இந்திய மக்களுக்குத் தெரிந்த உண்மைதான். எனினும், பாகிஸ்தான் மக்களுள் ஒரு சாரர் முசுலீம் தீவிரவாத அமைப்புகளுக்கு எதிராகப் போராடி வருகின்றனர். ஆனால், இந்தியாவிலோ, குஜராத் இனப் படுகொலையை நடத்திய பிறகும் ஆர்.எஸ்.எஸ். பரிவார அமைப்புகளை எந்தவொரு முதலாளித்துவப் பத்திரிகையும் பயங்கரவாத அமைப்பாகச் சுட்டிக்காட்ட மறுத்து வருகின்றன. 'இந்து' எனச் சொல்லிக் கொள்ளும் மக்களுள் பெரும்பான்மையோர் ஆர்.எஸ்.எஸ். கும்பலைப் பயங்கரவாதிகளாகப் பார்க்க மறுக்கின்றனர். இன்னும் சொல்லப்போனால், பாகிஸ்தான், முசுலீம்கள் ஆகியோர் பற்றி ஆர்.எஸ்.எஸ். பரப்பிவரும் நச்சுக் கருத்துக்கள்தான் பெரும்பான்மையான 'இந்து' மக்களின் பொதுப் புத்தியாக இருந்து வருகிறது. அந்த வகையில் நாம் பாகிஸ்தானைப் பார்த்து வெட்கங்கொள்ளத்தான் வேண்டும்!

• குப்பன்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

படிப்பகம்

www.padippakam.com


சென்னையில்...

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

கொடி காட்டும் போராட்டம் இவ்வமைப்புகளால் நடத்தப்பட்டது. சிவகங்கையில் ப.சிதம்பரத்தை ஆதரித்து ராகுல்காந்தி உரையாற்றிய போது, போலீசின் கெடுபிடிகளை மீறி, திடீரென நான்கு தோழர்கள் ''ஈழத்தமிழர்களைக் கொன்றொழிக்கும் காங்கிரசின் வாரிசு ராகுல் காந்தியே, திரும்பிப் போ!'' என்று கருப்புக் கொடி காட்டி முழக்கமிட்டனர். இதைக் கண்டு அரண்டு போன ராகுல், அவசரமாக கூட்டத்தை முடித்துக் கொண்டு ஓடினார். பொதுக்கூட்டத் திடலிலேயே தோழர்களை மிருகத்தனமாக தாக்கிய போலீசு, கைதுசெய்து கொட்டடியில் அடைத்து, சிங்கள இனவெறியர்களுக்குச் சற்றும் சளைத்ததல்ல தமிழகப் போலீசு என்பதை கொடூர சித்திரவதைகள் மூலம் நிரூபித்தது. போலீசு கும்பலுக்கு விசுவாசமாக, தோழர்களை பிணையில் விட மறுத்து சிறையிலடைத்தது நீதிமன்றம். இருப்பினும், அடக்குமுறைக்கு அஞ்சாமல் துணிவோடு தோழர்கள் நடத்திய இப்போராட்டம், இவ்வட்டாரமெங்கும் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியது.

திருச்சியில், ராகுல் கும்பல் அணிவகுத்து வந்த வாகனங்களை மறித்து, பெண்கள் உள்ளிட்டு 70-க்கும் மேற்பட்ட தோழர்கள் விண்ணதிர முழக்கமிட்டு கருப்புக் கொடி காட்டினர். பாதுகாப்புக் கெடுபிடிகளை மீறி நடந்த இந்த திடீர் மறியலையும் போராட்டத்தையும் கண்டு பீதியடைந்த காங்கிரசு கயவாளிகள் தலைதெறிக்க ஓடினர். தடியடி நடத்தி தோழர்களைக் கைது செய்த போலீசு, திகைத்து நின்ற ராகுலைப் பாதுகாப்பாக அழைத்து சென்றது. போலீசு வண்டியில் ஏற்றிக் கொண்டு சென்றபோது தோழர்கள் இட்ட முழக்கம், நகரெங்கும் எதிரொலித்தது.

அதன் பிறகு, 10.5.09 அன்று சென்னையில் தேர்தல் பிரச்சார கூட்டத்துக்கு வந்த பாசிச 'அன்னை' சோனியாவுக்கு எதிராக, '' ஈழத்தமிழர்களைக் கொன்றொழிக்கும் சோனியாவே, திரும்பிப் போ!'' என்ற முழக்கத்துடன் இவ்வமைப்புகள் சைதை-பனகல் மாளிகை அருகே கருப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டத்தை நடத்தின. ஈழத்தமிழின அழிப்புப் போரை நடத்திய கொலைகார காங்கிரசு கயவாளிகள் எவரும், இனி தமிழகத்துக்கு நிம்மதியாக வந்து செல்ல முடியாது என்பதை எச்சரிப்பதாக இப்போராட்டங்கள் அமைந்தன.

ஈழத்தமிழ் மக்களை வதை முகாம்களிலிருந்து மீட்டு மீள்குடியமர்த்தவும், உடனடியாக நிவாரண-மறுவாழ்வுக்கான ஏற்பாடுகளை செய்யக்கோரியும், ஈழப்பகுதியில் சிங்கள குடியேற்றத்தை தடுக்கக் கோரியும் இவ்வமைப்புகள் தொடர்ந்து பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின்றன.

-பு.ஜ.செய்தியாளர்கள்.


## இப்போது விற்பனையில்...



**ஈழப்பிணங்கள்...**
**இந்தியக் கொலையாளிகள்!**
**-துரை.சண்முகம்**

தமிழின எதிரிகள், துரோகிகளை
அரசியல் ரீதியாக
அம்பலப்படுத்தும் கவிதை வீச்சு.

**விலை: ரூ.20**

**வெளியீடு: ம.க.இ.க.-வி.வி.மு.-பு.மா.இ.மு.- பு.ஜ.தொ.மு. -பெ.வி.மு.**

**ஈழம்:**
**நேர்மையான சந்தர்ப்பவாதமும்**
**நேர்மையற்ற சந்தர்ப்பவாதமும்**



இந்திய நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் ஈழத்தில்
போர்நிறுத்தத்தைக் கொண்டுவரும் என்றுகூறி,
பதவி நாற்காலியைக் கைப்பற்றுவதற்கு
ஈழ மக்களின் பிணங்களைப் பயன்படுத்திக் கொண்ட
ஓட்டுப்பொறுக்கிகளையும், ஈழ விடுதலையைச் சீர்குலைக்கும்
இந்த சந்தர்ப்பவாதக் கண்ணோட்டத்தையும் விமரிசிக்கும் நூல்.

**வெளியீடு: புதிய ஜனநாயகம்** **விலை: ரூ.25**



**ஈழம்:**
**தேவை ஒரு நேர்மையான மீளாய்வு!**

ஈழத் தமிழ் மக்கள்மீது அக்கறையுள்ள
ஒவ்வொருவரும், விடுதலைப் போராட்டத்தின்
பின்னடைவுக்கு என்ன காரணம் என்பதை
மீளாய்வு செய்வது அவசியம் என்று கூறும் இந்த
நூல், விடுதலையின் நண்பன் யார் எதிரி யார்
என்பதைத் தெளிவாக வரையறுக்க வேண்டும்
என்றும், விடுதலை இயக்கத்தின் உள்ளே
ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டும் என்றும்
வலியுறுத்துகிறது.

**வெளியீடு: புதிய ஜனநாயகம்** **விலை: ரூ.30**

**இந்திய மேலாதிக்கத்திற்கு பலியான ஈழம்:**
**வர்க்கப் பார்வையை மறுக்கும்**
**தமிழ்த் தேசியர்களுக்கு மறுப்புரை**



ஈழ விடுதலையின் எதிரியான இந்திய அரசை,
நண்பனாகச் சித்தரிக்கும் தமிழ்த் தேசியவாதிகளின்
கண்ணோட்டத்தை மறுக்கும் நோக்கில்,
இலங்கையின் மீதான இந்திய மேலாதிக்கத்தை,
விவரங்களுடன் அம்பலப்படுத்துகிறது, இந்நூல்.

**வெளியீடு: புதிய ஜனநாயகம்** **விலை: ரூ.20**

## நூல் கிடைக்குமிடங்கள்

**புதிய கலாச்சாரம்,**
**16, முல்லைநகர் வணிக வளாகம்,**
**2-வது நிழற்சாலை, (15-வது தெரு அருகில்),**
**அசோக் நகர், சென்னை-600 083.**
**தொலைபேசி: 044-2371 8706**

**கீழைக்காற்று வெளியீட்டகம்,**
**10, அவுலியா தெரு, எல்லீசு சாலை,**
**சென்னை-600 002.**
**தொலைபேசி: 044-2841 2367**



படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/09-11 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/09-11

## சிங்கள இனவெறிப் பாசிசத்தின் இன அழிப்புப் போரை எதிர்த்துப் போராடிய விடுதலைப் புலிகள் வீரமரணம்!

## ராஜபக்சே கும்பலை போர்க் கிரிமினலாக அறிவித்து தண்டனை வழுங்கக் கோரி...

## - தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகள் 21.5.09 அன்று நடத்திய

# ஆர்ப்பாட்டம்

**சிங்கள இராணுவத்தின் வதை முகாம்களிலிருந்து
ஈழத் தமிழர்களை மீட்டெடுப்போம்!
ஐக்கிய நாடு மன்றத்தின் மூலம் அவர்களை மீள் குடியமர்த்தவும்,
உணவு, மருத்துவம் உடனே வழங்கவும் போராடுவோம்!**

**அரசியல் தீர்வு, மறுநிர்மாணம் என்ற பெயரில்
தமிழர் பகுதிகளைச் சிங்கள காலனியாக்க முயலும்
ராஜபக்சே-இந்திய அரசு கூட்டுச் சதியை முறியடிப்போம்!**

**துவண்டு விடாது ஈழத் தமிழினம்!
துணை நிற்பார்கள் தமிழக மக்கள்!
நீடிக்காது சிங்கள இனவெறியின் வக்கிரக் களியாட்டம்!
ஃபீனிக்ஸ் பறவையாக மீண்டெழும் ஈழ விடுதலைப் போர்!**


உடுமலையில்...



ஓசூரில்...



கடலூரில்...



சென்னையில்...



தஞ்சையில்...

படிப்பகம்